# செந்தமிழ்ப் பொழில்

நான்காம் படிவம்

## பொதுப் பகுதி

பொன்னு. ஆ. சத்தியசாட்சி, B.O.L.,
தமிழாசிரியர்,
ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
*(In association with the United Society for Christian Literature)*
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
*and at*
MYSORE BANGALORE TIRUVALLA

S.B.
*COPYRIGHT*
*First printed*, 1955

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1955. B4021

# தேசீய கீதம்

ஜன கண•மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய் விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராடா
திராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உத்ச்சல ஜலதித ரங்கா
தவசுப நாமே ஜாஹே
தவசுப ஆஸிஷ மாஹே
காஹே தவஜய காதா
ஜன கண மங்கள தாயக் ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

# முன்னுரை

செந்தமிழ்ப் பொழில்' என்னும் தமிழ்ப்பாட வரிசையுள் இது நான்காம் படிவம் பொதுப் பகுதியினது. அரசியலார் விடுத்துள்ள புதிய பாடத் திட்டத்தின்படி இந்நூல் அமைந்துள்ளது. கவிதைகளும், கட்டுரைகளும் அரசியலார் திட்டமிட்டுள்ள அளவுக்கு அதிகமாகவே சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே, ஆசிரியர்கள் ஏற்குமளவுக்கு வேண்டும் வகையானெல்லாம் ஆண்டுத்திட்டம் அமைத்துக்கொள்ளுவதற்குப் போதிய இயைபு இங்கு உண்டு.

பொழிலின்கண் எவ்வாறு பசுமையும் இனிமையும் எழிலும் யாண்டும் தங்கியிருக்குமோ, அவ்வாறே, கருத்துக்கு நிழலும் எழிலும் வழங்கும் கட்டுரைகளும் கவிதைகளும் இச் செந்தமிழ்ப் பொழிலின்கண் விளங்குகின்றன. நான்காம் படிவ மாணவர் திறனுக்கு ஏற்ப அமைந்துள்ளன பாடங்கள் யாவும். இப்பாட நூல் வாயிலாக அருந்தமிழ் இலக்கியங்களுள் மாணவர் நெஞ்சம் பாய்ந்தோடும் என்பது என் நம்பிக்கை.

கவிதைப் பகுதிகள், கட்டுரைகள் ஆயவற்றுள் ஒவ்வொன்றற்கும் குறிப்புரைகளும் வினாக்களும், சிலவற்றிற்குக் கட்டுரைப் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இவையன்றி பொதுப் பகுதிக்கும் சிறப்புப் பகுதிக்கும் பொதுவான ஓர் அருஞ்சொல் அகராதி நூலினிறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. மாணவர்தம் சொந்த முயற்சிக்கு ஆக்கம் தரும் எல்லா வழிகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

இந்நூலுக்குக் கட்டுரைகளும் கவிதைகளும் வழங்கிய பெருமக்களுக்கு என் உளமார்ந்த நன்றி உரியதாகும். ஆசிரியர்கள் உரிமையாளர்கள் பெயர்களைத் தகுந்த இடங்களில் காட்டியுள்ளேன்.

இந்நூலை அச்சிட்டு வெளியிடும் பணியினை ஏற்ற பழம் பெருந் தாபனமாகிய கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தார்க்கு யான் பெரிதும் கடமைப்பட்டவன்.

அரசியலாரும் ஆசிரியர்களும் அருள் கூர்ந்து ஆதரவு தருவார்களாக.

[illegible]. ஆ. ச.

## கவிதைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| | தேசிய கீதம் ... ... | iii |
| **I.** | **அஞ்சலி** | |
| | 1. இரட்சணிய மனோகரம் ... ... | 1 |
| | 2. தேம்பாவணி ... ... | 1 |
| | 3. தாயுமானவர் பாடல் ... ... | 2 |
| | 4. திவ்வியப் பிரபந்தம் ... ... | 2 |
| | 5. பொதுமை வேட்டல் ... ... | 3 |
| **II.** | **அறம்** | |
| | 1. திருக்குறள் ... ... ... | 4 |
| | 2. திரிகடுகம் ... ... ... | 6 |
| | 3. நான்மணிக்கடிகை ... ... | 7 |
| | 4. சிறுபஞ்சமூலம் ... ... | 8 |
| **III.** | **கதை** | |
| | 1. சிலப்பதிகாரம் ... ... | 13 |
| | 2. நளவெண்பா ... ... | 17 |
| | 3. வலன் வரலாறு (திருவிளையாடல்) ... | 25 |
| | 4. இரட்சணிய யாத்திரிகம் ... ... | 31 |
| | 5. பாஞ்சாலி சபதம் ... ... | 39 |
| **IV.** | **பல்சுவை** | |
| | 1. களவழி நாற்பது ... ... | 42 |
| | 2. கலிங்கத்துப்பரணி ... ... | 42 |
| | 3. சீவக சிந்தாமணி ... ... | 42 |
| | 4. சுப்பிரமணிய பாரதி ... ... | 43 |
| | 5. கூவிளி ... ... ... | 44 |

## உரை நடை


பக்கம்

1. பெற்றோர்ப் பேணல் ... ... ... 46
திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்கள்

2. கடிதம்: தம்பிக்கு ... ... ... 53
டாக்டர் மு. வரதராசனார் அவர்கள்

3. இடுதலும் சுடுதலும் ... ... ... 59
டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள்

4. குமரி நாடு பற்றிய தமிழ் நூற் குறிப்புக்கள் ... 64
பன்மொழிப் புலவர் திரு. க. அப்பாத்துரைப் பிள்ளை அவர்கள், M.A., L.T.

5. சூழ்ச்சியும் மீட்சியும் ... ... ... 71
திரு. ம. ரா. மாணிக்கனார் அவர்கள், M.A.

6. பாரி மகளிர் ... ... ... 77
திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

7. செந்நீர் சிந்திய சான்றோர் ... ... 83
பொ. ஆ. ச.

8. கல்வெட்டுகள் ... ... ... 90
புலவர் திரு. ஜார்ஜ் சாமுவேல் அவர்கள்

9. அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி ... 95
திரு. வேலன் அவர்கள், B.A.

10. நாட்டுப் பாடல்கள் ... ... ... 103
திரு. மு. அருணாசலம் அவர்கள்

11. நக்கீரர் (நாடகம்) ... ... ... 109
திரு. மு. கோவிந்தராய நாட்டார் அவர்கள், B.A., L.T.

அருஞ்சொல் அகராதி (பொருளும் சிறப்பும்) ... 115

# நன்றி

கட்டுரைகளையும் கவிதைகளையும் இந்நூலுள் கொள்ளுவதற்கு இசைவு வழங்கிய இவ் அன்பர்களுக்கு எம் உளமார்ந்த நன்றி.

1. சாது அச்சுக்கூட உரிமையாளர்,
இராயப்பேட்டை, சென்னை.

2. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1.

3. கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை அவர்கள்,
நாமக்கல்.

4. டாக்டர் மு. வரதராசனார் அவர்கள்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

5. டியூகோ பப்ளிஷிங் ஹவுஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

6. புலவர் ஜார்ஜ் சாமுவேல்,
காஞ்சீபுரம்.

7. அகில இந்திய வானொலி நிலையம்,
எழும்பூர், சென்னை.

8. சென்னை அரசியலார்.

9. திரு. இ. மா. கோபாலக்கிருஷ்ண கோன் அவர்கள், புதுமண்டபம், மதுரை.

# கவிதை: பொதுப் பகுதி

## I. அஞ்சலி

### 1. இரட்சணிய மனோகரம்

[புலவர் பெருமான் எய்ச். ஏ. கிருஷ்ண பிள்ளை அவர்கள் பாளையங் கோட்டையினைச் சேர்ந்தவர்கள். காலம் கி.பி. 1827 முதல் 1900 வரை. பிறவியில் விஷ்ணு சமயத்தினர். கிறிஸ்து நாதரின் அன்பினால் தடுத்தாளப் பட்டுப் பின் கிறிஸ்து சமயத்தை ஏற்றுச் சிறந்த கிறிஸ்தவராக இவர்கள் வாழ்ந்தார்கள். "இரட்சணிய யாத்திரிகம்" என்று ஓர் அரிய காவிய மியற்றி யுள்ளார்கள். இஃதன்றி இரட்சணிய மனோகரம் முதலிய சில நூல்களும் இயற்றி யுள்ளார்கள். இக்கவிதை இரட்சணிய யாத்திரிகத்திலும் காணப் படுகின்றது.]

அருள்பழுத்த திருமுகமண் டலத்தி னானை
அளிநிறைந்த கமலலோ சனத்தெம் மானைத்
தெருள்பழுத்த ஜீவமொழி கனிவா யானை
ஜென்மவிடாய் தணித்தருள்சீர் பாதத் தானை
மருள்பழுத்த மனத்தேனைத் தெருட்டி னானை
வான்கதிக்கு வழிதிறந்த வலத்தி னானை
இருள்பழுத்த நரகடைத்த எம்பி ரானை
என்றுகொலோ கண்குளிரக் காணு நாளே!

### 2. தேம்பாவணி

2. [தேம்பா (த) + அணி = தேம்பாவணி. சூசையப்பர் வரலாறு கூறும் ஓர் அருமை நூல் இது. இத்தாலியிலிருந்து நம் நாடு போந்து தமிழ் பயின்று இப்பெருநூலைச் செய்து முடித்தார் ஜோஸப் பெஸ்கி என்னும் கிறிஸ்து சமயக் குரவர். இவரை வீரமாமுனிவர் எனத் தமிழகம் வழங் கிற்று. இவரது காலம் 18-ஆம் நூற்றாண்டு.]

சீர்பாய் உலகிற் குயிரோய்நீ
நிமிர்வீட் டுலகிற் குயிரோய்நீ
சீர்பாய் பாவிற் குரையோய்நீ
திறன்கொண் டாள்வார்க் கடலோய்நீ

ஏர்வாய் இரவிக் கொளியோய்நீ
எம்மேல் இரங்கிப் பிறந்தனைநாம்
சூர்பாய் துகளற் றுய்வதற்குன்
துணைத்தாள் தொழும்பண் புரையாயோ?*

## 3. தாயுமானவர் பாடல்

[தாயுமானவர் திருமறைக்காடு என்னும் ஊரில் பிறந்தவர். கேடிலியப்பப் பிள்ளை என்பவரின் புதல்வர். சிவ சமய வேளாளர். காலம், 17-ஆம் நூற்றாண்டு. இவருடைய பாடல்கள் உருக்கம் வாய்ந்தவை.]

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமிர்தே என்கண்ணே அரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவி
காலமும்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங்
கேளே.

## 4. திவ்வியப் பிரபந்தம்: பெருமாள் திருமொழி

[திருமால் பத்தியில் ஆழ்ந்த ஆழ்வார்களால் செய்யப்பட்டது திவ்வியப் பிரபந்தம். "பெருமாள் திருமொழி" என்பது குலசேகராழ்வாரால் பாடப்பட்ட தொகுதி. இவர் சேர வேந்தர்களுள் ஒருவர். திருமால் பத்தியிற் சிறந்தவர். இவரது காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு.]

இருள்இரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபணமா யிரங்கள் ஆர்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்த னென்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையை மேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே?

---

*இக்கவிதை சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தார் அண்மையில் வெளியிட்டுள்ள 'கிறிஸ்தவ இலக்கியத் திரட்டு' என்னும் நூலிலிருந்து கொள்ளப்பட்டது.

## 5. பொதுமை வேட்டல்

[இவ்விருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்து அண்மையிலே இயற்கை எய்திய நம் தமிழ்ப் பெரியார் **திருவாரூர் கலியாண சுந்தரர்** அவர்களின் பல நூல்களுள் ஒன்று "பொதுமை வேட்டல்" என்பது. இவர் எளிமையும் இனிமையும் கலந்த பாடல்கள் செய்வதில் வல்லவர். சமரச சன்மார்க்கக் கொள்கையினார்.]

அழகநின [illegible]ங்கலைதோய் ஆனந்தம் வேண்டும்
  அன்பியற்கைப் பள்ளிபயின் றறிவுபெறல் வேண்டும்
எழுகதிரில் மூழ்கிஉயிர்ப் பிறங்குமுடல் வேண்டும்
  எழிலொழுகும் பொழிலணிந்த இருக்கையிடம்
    வேண்டும்
குழவிபொழி மழலைமொழி கொள்செவிகள் வேண்டும்
  கோடுமலை இவர்ந்துபொறைக் குணம்பெருக்கல்
    வேண்டும்
பழுவமவிர் பசுமைபடிந் திளமையுறல் வேண்டும்
  பரவையலை பாட்டிலெழும் பயன்வேண்டும்
    அருளே.

---

### 1. அஞ்சலி : குறிப்புரை

1. கமல லோசனம் – தாமரைக் கண்கள். ஜென்ம விடாய் – ஆத்து மத் தாகம்; அஃதாவது தீய சிந்தனையும் செயலு மாயவற்றிலிருந்து விடுதலை பெற வேண்டு மென்னும் வாஞ்சை.

2. நிமிர் வீட்டுலகு – உயர்ந்ததாகிய மோட்சம். சீர் பாய் பா – சீர்களால் தொடுத்த (அல்லது சிறப்புப் பொருந்திய) பாடல்கள். 'திறன் கொண்டு ஆள்வார்க்கு அடலோய்' எனப் பிரிக்க. அடல் – வலிமை. ஏர்வாய் இரவி – அழகு வாய்ந்த சூரியன். சூர் – அச்சம். துகள்: இங்குப் 'பாவம்' என்னும் பொருளது.

3. கருதரிய......மேவி – கருதுவதற்கு அருமையான கருத்திலே கருத்தாகப் பொருந்தி.

4 இரிய – நீங்க. இனம் – தொகுதி, கூட்டம். துத்தி – பொறி. பணம் – பாம்பின் படம். பொன்னி – காவேரி. கோமளம் – அழகு.

5. அழக: விளி. 'எழுகதிரில்......உடல்': 'சூரியனை நினைந்து நினைந்து அந்நினைவில் மூழ்குவதால் உடல் விளக்கமுறும்' என்பதொரு முறை. பழுவம்— காடு.

### வினாக்கள்

1. புலவர் கிருஷ்ண பிள்ளை யவர்கள் கிறிஸ்துவின் முகம், கண்கள், வாய், பாதங்கள் ஆயனவற்றை எவ்வாறு சிறப்பிக்கிறார்கள்?

2. கிறிஸ்து செய்த செயல்களாக எவ்வெவற்றைச் சொல்லுகிறார்கள்?

3. வீரமாமுனிவர் கிறிஸ்து பிரானை எவ்வாறு போற்றுகின்றார்? அவர் அப்பிரானிடம் வேண்டுவது யாது?

4. இறைவனின் தன்மைகளையும் தொழில்களையும் தாயுமானார் எவ் விதம் குறிக்கிறார்?

5. ஆழ்வார் அவர்களின் பாட்டில் அரவரசன் எவ்வாறு வருணிக்கப் படுகின்றனன்?

6. திருமால் பள்ளிகொண்டுள்ள பான்மையினை வரைக.

7. இயற்கை வாயிலாக இறைவனைத் தேடுதல் என்ற கொள்கை திரு. வி. க. அவர்களின் பாட்டில் அமைந்த ஆற்றினைக் காட்டுக.

---

## II. அறம்

## 1. திருக்குறள்

[குறள் வெண்பாக்களாலான நூலாதலின் குறள் எனப்பட்டது. திரு—அதன் பெருமையைக் கருதி வந்த அடைமொழி. திருக்குறள்: அடை யடுத்த கருவியாகு பெயர்.

ஆசிரியர் திருவள்ளுவர் கடைச் சங்க காலத்தவர். இவருடைய பெற்றோர்கள் ஆதி பகவன் என்பவர்கள் எனச் சொல்லுவர். இவர் சென்னையை யடுத்துள்ள மயிலாப்பூரிலேனும், மதுரையிலேனும் வாழ்ந்திருந்தாராதல் வேண்டும். இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பகுதி இவர் சமணராதல் வேண்டும் என எண்ண இடம் தருகின்றது.

இந்நூலின் பெருமையை விளக்கியே 'திருவள்ளுவ மாலை' என்றொரு நூல் பாடப்பட்டுள்ளது. அங்கிலம், கிரேக்கம், இலத்தீன் போன்ற பெரு மொழிகளில் இந்நூல் பெயர்க்கப்பட்டுள்ளது.]

#### வான் சிறப்பு

1. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பா யதூஉ மழை.

2. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

3. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

4. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

5. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

விருந்தோம்பல்

6. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

7. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

8. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

9. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை; மடவார்க ணுண்டு.

10. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

சொல்வன்மை

11. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.

12. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

13. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

14. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

15. இணருழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

### குடிமை

16. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

17. நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

18. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

19. நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்; காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

20. நலம்வேண்டி னாணுடைமை வேண்டும்; குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

---

## 2. திரிகடுகம்

[சுக்கு, மிளகு, திப்பிலி என்பன மூன்றுஞ் சேர்த்துச் செய்யப்பட்ட மருந்து திரிகடுகம் என்பது. திரி - மூன்று. இம்மருந்து உடலுக்குற்ற நோயைப் போக்குவது. உயிருக்குற்ற அறியாமை நோயைப் போக்க வல்ல மும்மூன்று சிறந்த உண்மைகளை ஒவ்வொரு பாட்டுள்ளும் அமைத்துப் பாடப்பட்ட நூலுக்கு அது பெயராயிற்று. உவமையாகு பெயர்.

இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் நல்லாதனார் என்பவர். இவர் சமயம் வைணவம்; காலம் கடைச் சங்க காலம்.]

### நட்புரிமைக்கு உரியார்

1. தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்;
கோளாள னென்பான் மறவாதான்; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது.

### நட்புரிமைக்கு உரியா ரல்லாதார்

2. பொய்வழங்கி வாழும் பொறியறையும் கைதிரிந்து
தாழ்விடத்து நேர்கருதுந் தட்டையும் ஊழினால்
ஒட்டி வினைநலம் பார்ப்பானும் இம்மூவர்
நட்கப் படாஅ தவர்.

அஞ்சப்படுவன

3. ஒருதலையான் வந்துறூஉ மூப்பும் புணர்ந்தார்க்
கிருதலையும் இன்னாப் பிரிவும்—உருவினை
உள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியும்
இம்மூன்றும்
கள்வரின் அஞ்சப் படும்.

அழியாப் புகழுடையார்

4. தன்னச்சிச் சென்றாரை யெள்ளா ஒருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்றும் அழுக்கா றிகந்தானும் இம்மூவர்
நின்ற புகழுடை யார்.

கற்றறிந்தார் பூண்ட கடன்

5. நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும்
நூற்கேலா
வெண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை—
நன்மொழியைச்
சிற்றின மல்லார்கட் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன்.

---

## 3. நான்மணிக்கடிகை

[நான்மணிக் கடிகை என்பது நான்கு வகையான மணிகளை நிரல்படக் கோத்த ஓர் அணி. இது கண்ணுக்கு இன்பம் அளிப்பது. கருத்துக்கு இன்பம் அளிப்பனவாய நந்நான்கு சிறந்த கருத்துகளை ஒவ்வொரு பாட்டுள்ளும் கொண்டு ஒளிரும் இந்நூல் அப்பெயர் பெற்றது. உவமையாகு பெயர்.

இந்நூலும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் விளம்பி நாகனார். இவரது சமயம் வைணவம்; காலம் கடைச் சங்க காலம்.]

சால்புடையார் பெருமை

1. பறைபட வாழா அசுணமா; உள்ளம்
குறைபட வாழார் உரவோர்;—நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாம்; தனக்கொவ்வாச்
சொற்பட வாழாதாஞ் சால்பு.

நல்லார் பிறப்பு

2. கள்ளி வயிற்றி னகில்பிறக்கும்; மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும்; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி.

இன்னார்க்கு இன்ன தோன்று எனல்

3. கற்றூர்முற் றோன்று கழிவிரக்கம்; காதலித்தொன்
றுற்றூர்முற் றோன்று வுறுமுதல்;—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்று; எல்லாம்
வெகுண்டார்முற் றோன்று கெடும்.

இன்னது இன்னதற்கு அணி எனல்

4. நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்;
குளத்துக் கணியென்ப தாமரை; பெண்மை
நலத்துக் கணியென்ப நாணம்; தனக்கணியாம்
தான்செல் லுலகத் தறம்.

சான்றோரைப் பிணித்தல்

5. கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம்—கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

---

## 4. சிறுபஞ்சமூலம்

[சிறுபஞ்சமூலம் என்பது ஒரு மருந்து. கண்டங்கத்திரி வேர், சிறு வழுதுணை வேர், சிறுமல்லி வேர், நெருஞ்சி வேர், பெருமல்லி வேர் ஆகிய பஞ்சமூலங்கள் சேர்ந்தது. உடலுக் குற்ற பிணியைப் போக்க வல்லது. அங்ஙனமே, ஒவ்வொரு பாட்டிலும் ஐந்தைந்து சிறந்த கருத்துகள் அமையப் பாடப்பட்ட இந்நூல் உயிருக்குற்ற பிணியைப் போக்க வல்லது. ஆகவே சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது. உவமையாகுபெயர்.

இதன் ஆசிரியர் காரியாசான் என்பவர்; மாக்காயனார் என்பாரின் மாணக்கர்; சைன சமயத்தவர்; கடைச் சங்க காலத்தவர்.]

நன்றறிவாரும், நூல் வல்லாரும், மேதையரும்

1. பூவாது காய்க்கும் மரமுள; நன்றறிவார்
மூவாது மூத்தவர்; நூல்வல்லார்;—தாவா
விதையாமை நாறுவ வித்துள; மேதைக்
குரையாமை செல்லும் உணர்வு.

நன்றறியாரும், நூல் கல்லாரும், பேதையரும்

2. பூத்தாலுங் காயா மரமுள; நன்றறியார்
மூத்தாலு மூவார் நூ றேற்றார்;—பாத்திப்
புதைத்தாலு நாறாத வித்துள; பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு.

கூற்றங்கள்

3. சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்; நீள்கோடு
விலங்கிற்குக் கூற்றம்; மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்றமாம்; ஞெண்டிற்குத் தன்பார்ப்பு;
நாவிற்கு நன்றல் வசை.

இவை செய்மின் எனல்

4. பெருங்குணத்தார்ச் சேர்மின்; பிறன்பொருள் வெளவன்மின்;
கருங்குணத்தார் கேண்மை கழிமின்;—ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின்; வருங்காலன் திண்ணிதே;
வாய்ச்சொல்லே யன்று வழக்கு.

புலனடக்கம்

5. நெடுக்கல் குறுக்கல் துறைநீர்நீ டாட்ல்
வடுத்தீர் பகல்வா யுறையே—வடுத்திரா
ஆகுமந் நான்கொழித் தைந்தடக்கு வானாகின்
வேகும்பம் வேண்டான் விடும்.

# II. அறம்: குறிப்புரை

## 1. திருக்குறள்

**வான் சிறப்பு:** 'உலகமும்...அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்பு'—**பரிமேலழகர்.**

1. துப்பு – உணவு. துப்பு ஆய துப்பு – நல்ல உணவுகளை. துப்பார் – உண்பார். நீர் உணவுப் பொருள்கள் விளையும்படிச் செய்கிறது; தானேயும் உணவாக அமைகிறது. அளபெடை ஓசை நிறைத்தது. இங்கு வந்தது **சொற்பின் வருநிலை யணி.**

2. "கடலுடைத்தாயினும் அதனாற் பயனில்லை யென்பார், 'விரிநீர் வியனுலகத்து' என்றார்."

3. உழாஅர் – உழுதலைச் செய்யார். புயலென்னும் வாரி – மழை யென்னும் வருவாய். 'குன்றியக்கால்' என்பது குறைந்து நின்றது.

4. மற்று ஆங்கே – முன் கெடுத்தாற்போல (இப்போது கெடுக்காமல்); மற்று: **வினை மாற்று.**

5. விசும்பு: இடவாகுபெயர். மற்று: வினைமாற்று. 'பசும் புற்றலையும்' என்க. உம்மை தொக்கது. ஓரறிவுயிரும் காண்டல் அரிது, என்க.

**விருந்தோம்பல்:** 'விருந்தினரைப் புறந்தருதல்'.—பரி.

6. 'இல் இருந்து ஓம்பி' எனக் கூட்டுக. வேளாண்மை – உபகாரம்.

7. 'புறத்தது ஆ' எனப் பிரிக்க. ஆ – ஆக.

8. வைகலும் – நாடோறும். பருவந்து – வருந்தி; பருவா: பகுதி.

9. மடவார் – பேதையார்.

10. அனிச்சம் – அனிச்சப்பூ. இங்கு, உபமானத்தினும் உபமேயம் உயர்ந்த தென்று உயர்வு தோன்ற நின்றதால் இப்பாடல் **வேற்றுமையணி.**

**சொல்வன்மை:** 'சொற்களைச் சொல்ல வல்லனாதல்.'—பரி.

11. அமைச்சர்க்கு இன்றியமையாத் குணமாவது யாதெனில் 'நாநலம் என்னும் நலன் உடைமை' என்க.

12. கேளாரும் வேட்ப – (பகையாய்) ஏற்றுக்கொள்ளாதாரும் (அப்பகை ஒழிந்து நட்பினை) விரும்பும் வண்ணம்.

13. 'சொல்லைப் பிறிது ஓர் சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து அச்சொல்லைச் சொல்லுக' எனக் கூட்டுக. **சொற்பொருட் பின் வருநிலையணி.**

15. இணர் ஊழ்த்தும் – கொத்தின்கண்ணே மலர்ந்தும். **உவமையணி.**

**குடிமை:** 'உயர்குடியின்கண் பிறந்தாரது தன்மை.'—பரி.

16. இற்பிறந்தார் – குடிப்பிறந்தார். செப்பம் – செம்மை.

17. வகை என்ப – உரிய கூறு என்று சொல்லுவர்.

18. 'குடிப்பிறந்தார்கண் 'குற்றம்......மறுப்போலுயர்ந்து விளங்கும்,' என்க. **உவமையணி**

19. *நிலத்தில் கிடந்தமை — நிலத்தின் இயல்பை. கால் — முளைத்த முளை.* **எடுத்துக்காட்டுவமையணி.**

20. *வேண்டும் — வேண்டுக.*

## 2. திரிகடுகம்

1. *தாள் ஆளன் — முயற்சியை ஆளுந் தன்மையினை யுடையவன். வேள் ஆளன் — உதவி செய்பவன். கோள் ஆளன் — கொள்ளுதலை யுடையவன்.*

2. *பொறியறை — திருவில்லாதவன்; பொறி — இலக்குமி; அறை — அறுதலையுடையவன். கை — முறைமை. தாழ்விடத்து நேர் கருதுதலாவது, ஒருவன் தாழ்ந்தவிடத்து அவனைத் தனக்கு நேராகக் கருதுவது. தட்டை — புரைபட்ட மனத்தன். ஊழினால் — முறையினால். வினைநலம் பார்த்தலாவது, பிறன் காரியத்திலே தனக்குப் பயன் பார்த்தலாம்.*

3. *புணர்ந்தார் — நட்பினர். இருதலையும் — பிரிந்தவரும் இருந்தவரும் ஆகிய இருவரிடத்தும்.*

4. *செல்வத்து — செல்வம் வந்த காலத்தில். பொச்சாப்பு — (உற்றார்க்கு உதவி செய்ய வேண்டுவதில்) மறதியை.*

5. *வெண்மொழி — பயனற்ற சொற்கள்.*

## 3. நான்மணிக்கடிகை

1. *நிறை வனத்து — மரங்கள் நிறைந்த காட்டில். வெதிர் — மூங்கில்.*

2. *அரிதாரம் — கஸ்தூரி.*

3. *கழிவு இரக்கம் — இழந்த பொருள்களுக்காய் வருந்துதல். காதலித்து — ஊக்கங் கொண்டு. உறுமுதல் — முயற்சித் துன்பம். எல்லாம் — எல்லா நன்மைகளும். ஈற்றிலுள்ள 'தோன்று' என்பது* **முற்றெச்சம்.**

4. *தான் செல் உலகத்து அறம் — தான் செல்லும் மறுமை உலகத்துக்குத் துணையாகச் செய்யப்பட்ட அறங்கள்.*

5. *சந்து — கட்டுத்தறி. கதம் தவிர — சீற்றம் தணியும்படி. கயத்தை கொந்தி — கீழ்மகனை அவனது உடம்பை ஒறுத்து.*

## 4. சிறுபஞ்சமூலம்

1. *பூவாது காய்ப்பன ஆல் அத்தி போல்வன. மூவாது மூத்தவர் — ஆண்டினால் மூவாதவராயினும் அறிவினால் மூத்தவர் ஆவர். நூல் வல்லார் — நூல் வல்லாரும் அத்தகையரே. நாறுவ — முளைப்பனவாகிய. மேதை — அறிஞன். இச்செய்யுள்* **எடுத்துக்காட்டுவமையணி.**

2. *பூத்தாலும் காயாதன பாதிரி முதலியன. நூல் தேற்றாதாரும் அத்தகையரே என முடிக்க. இதுவும்* **எடுத்துக்காட்டுவமையணி.**

3. *சிலம்பி — சிலந்தி. நீள் கோடு விலங்கு — நீண்ட கொம்புகளை யுடைய எருது முதலிய மிருகங்கள். வலம்படா — வெற்றியுண்டாகாத. மா — அசுணமா. பார்ப்பு — குஞ்சுகள்.*

4. கருங்குணத்தார் – தீக்குணத்தார்.

5. நெடுக்கல் – மயிரைச் சடையாக நீள விடுதல். குறுக்கல் – அதனைக் குறைத்தல். வாயுறை – உண்ணுதல். தடுத்திரா ஆகும் – குற்றம் நீங்காதன வாகிய. ஐந்து – ஐம்புலன். வே கும்பம் – சுடுகாட்டில் வேதற்குரிய குடம்போன்ற உடம்பினை. "மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம், பழித்த தொழித்து விடின்"—குறள்.

## வினாக்கள்

1. 1. மழை துப்பாக்குவதும் துப்பாவதும் எங்ஙனம்?

2. மழை இன்றேல் நிகழும் தீமைகளைக் குறள் கருத்துப்படி வரைக.

3. கெடுப்பதும் எடுப்பதும் மழையின் செயலாயினமை எங்ஙனம்?

4. இல்வாழ்க்கை எதன் பொருட்டு?

5. விருந்தோம்புதலின் இன்றியமையாமையை வள்ளுவர் எவ்வாறு சொல்லுகின்றார்?

6. உடைமையுள் இன்மையாவது எது?

7. முகந்திரிந்த நோக்கினன் விருந்தினர்மாட்டு நிகழ்வ தென்ன என்பதனை விரித்துச் சொல்லுக.

8. நா நலம் எவ்வாறு போற்றப்படுகின்றது?

9. சொல்லை எவ்வாறு சொல்லுதல் வேண்டும்?

10. 'அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது'—எவனை?

11. 'இணரூழ்த்தும் நாறா மலர்'—விளக்குக.

12. 'மதிக்கண் மறு'—இத்தொடர் எதற்கு ஒப்பனை?—தெளிவாகச் சொல்லுக.

13. குடிமைக்குரிய சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

14. நிலத்தின் தன்மையினையும் குலத்தின் தன்மையினையும் ஒப்பிடுக.

15. 'விசும்பிற்றுளி,' 'பசும்புற்றலை(யும்),' – நயம் காட்டுக.

16. விருந்தோம்பல், குடிமை – இலக்கணம் தருக.

17. வேற்றுமையணி, எடுத்துக்காட்டுவமையணிகட்குப் இப்பாடப் பகுதியிலிருந்து உதாரணம் காட்டுக.

2. 1. திரிகடுகம்: பெயர்க் காரணம் தருக.

2. நட்புரிமைக்கு உரியாரும் உரியா ரல்லாரும் யாவர்?

3. 'இம்மூன்றும் கள்வரின் அஞ்சப்படும்'—எம் மூன்றும்?

4. நின்ற புகழுடையவர் யாவர்?

5. கற்றறிந்தார் கடன் யாது?

3. 1. நான்மணிக்கடிகை: பெயர்க் காரணம் என்ன?

2. அசுணமா வெதிர் ஆயுன விரண்டும் ஒப்பனைகளாக ஆளப்பட்டமை எங்ஙனம்?

3. 'கழிவிரக்கம்' முதலியன யார் யார்மாட்டுத் தோன்று வெனக் காட்டுக.

4. பெண்மை நலத்துக்கு அணி எது? அதனுடன் கூறப்பட்ட வேறு அணிகள் எவை?

5. சான்றோரைப் பிணித்தல் எங்ஙனம்?

4. 1. காரியாசான் செய்த நூல் பெயரும் பெயர்க் காரணமும் தருக.

2. நன்றறிவார், நூல்வல்லார், பேதை ஆகியவரின் பண்புகளை ஒப்புமை களுடன் காட்டுக.

3. சிலந்தி முதலியனவற்றிற்குக் கூற்றமா யமைந்தவை யாவை?

4. புலனடக்கம் வேண்டும் என்பது எவ்வாறு கூறப்பட்டது?

5. கீழ்வருந் தொடர்களுக்குப் பொருளும் கீழ்க்கோடிடப்பட்டவற்றிற்கு இலக்கணப் பெயரும் தருக:

1. ஞெண்டிற்குத் தன் பார்ப்பு.
2. தந்திற் பிணிப்பர் களிற்றை.
3. நெறிப்பட்ட கண்ணே வெதிர் சாம்.
4. நுண்மொழி நோக்கிப் பொருள் கொளல்.
5. விரிநீர் வியன் உலகம்.

---

## III. கதை

## 1. சிலப்பதிகாரம்

[சிலப்பதிகாரம்: சிலம்பு + அதிகாரம்: சிலம்பின் செய்தியிலிருந்து அதிகரித்த கதை. இது தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. புகார்க் காண்டம் மதுரைக் காண்டம் வஞ்சிக் காண்டம் என முப்பெரும் பிரிவுகளை யுடையது.

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள். இவர் சேரன் செங்குட்டுவனின் இளவல். சமயம் சமணம். சைவம் எனவும் கூறுவர். காலம் கடைச் சங்க காலம்.

கண்ணகி என்ற மாதரசியை மணந்து காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்துவந்த கோவலன் தன் செல்வத்தை யெல்லாம் மாதவி என்னும் ஒரு நாடகக் கணிகையிடம் செலவிட்டுப் பின்பு அவளை விட்டு விலகி, வாழ்வான் கருதி, மனைவியுடன் மதுரையை அடைந்தனன். அங்குக் கண்ணகியின் கால் சிலம்புகளுள் ஒன்றனை விலை கூறியபோது கள்வன் எனப் பொய்க் குற்றம் சாட்டப்பெற்றுப் பாண்டியன் கட்டளைப்படி கொலையுண் டிறந்தான். கொடுமை தெரிந்த கண்ணகி பொங்கி எழுந்து தன் கணவன் கள்வன் அல்லன் என வாதாடப் பாண்டியன் அவைக்குக் கையில் ஒரு சிலம்புடன் செல்லுகின்றனள். இங்கே தொடங்குகின்றது நம் பாடம்.]

## மதுரைக் காண்டம்: வழக்குரை காதை

வாயி லோயே! வாயி லோயே!
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்(து)
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்(று)
அறிவிப் பாயே அறிவிப் பாயே என,
வாயிலோன், வாழியெங் கொற்கை வேந்தே,
வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ வாழி!,
செழிய வாழி, தென்னவ வாழி!
பழியொடு படராப் பஞ்சவ வாழி!
அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்;
அறுவர்க் கிளைய நங்கை, இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு, சூருடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்;
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்,
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்,
கணவனை இழந்தாள் கடையகத் தாளே,
கணவனை இழந்தாள் கடையகத் தாளே, என,
வருக மற்றவள் தருக ஈங்கென,
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி,
'நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்' எனத்
'தேரா மன்னா செப்புவ துடையேன்;
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன், அன்றியும்,

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்,
பெரும்பெயர்ப் புகாரென் பதியே; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி

மாசாத்து வாணிகன் மகனை யாகி,
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா, நின்னகர்ப் புகுந்திங்(கு)
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;

கண்ணகி யென்பதென் பெயரே'யெனப்,
'பெண்ணணங்கே,
கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று,
வெள்வேற் கொற்றங் காண்'என, ஒள்ளிழை,
'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே,
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே,'எனத்

'தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி,
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே,
தருகெ'னத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே;
மணிகண்டு,

தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
'பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்;
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளெ'ன.

மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே; தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்(று)
இணையடி தொழுதுவீழ்ந் தனளே! மடமொழி:

வெண்பா

'காவி யுகுநீருங் கையில் தனிச்சிலம்பும்
60. ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலுங் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னான்.'

---

சிலப்பதிகாரம் : குறிப்புரை

2. அறைபோதல் – கீழறுக்கப்படுதல், கெட்டு அழிதல். பொறி – அறம்.

3. அரி – பரற்கல்.

5. கடையகத்தாள் – வாயிலிடத்தாள்.

6. விரைவு பற்றி வந்தது.

8. தென்னம் பொருப்பு – பொதியின் மலை.

9. செழியன், தென்னவன்: பாண்டியற்குப் பெயர்கள்.

10. பஞ்சவன்: பாண்டியன்.

11. பசுந்துணி – பசிய துண்டம்.

12. பிடர்த்தலைப் பீடம்: மயிடன் என்பவனின் பிடரோடு கூடிய தலையாகிய பீடம்.

14. அறுவர்க்கு இளைய நங்கை – கன்னியர் எழுவருள் இளையளாகிய பிடாரி.

15. ஆடல் கண்டருளிய அணங்கு – பத்திரகாளி.

17. உரம் – மார்பு. தாருகன் பேருரம் கிழித்தவள் துர்க்கை.

18. செற்றம் – மன வயிரம்; கறுவு. செயிர்ப்பு – சினம். வந்தவள் கொற்றவை முதலியோர் போல்வளாயினும் அவர்களுள் எவரும் அல்லள் என்றது உண்மையுவமை என்னும் அணியாகும்.

23. வாயில்: வாயிலோனுக்கு ஆகுபெயர்.

24. குறுகினள்: முற்றெச்சம்.

25. கண்ணை – கண்களையுடையையாய்.

27. தேரா – ஆராய்ச்சி யில்லாத.

28. என்னறு......தீர்த்தோன்: சிபி.

30. வாயில்......மடித்தோன்: மனுச்சோழன்.

33. பெரும் பெயர் – மிக்க புகழ்

34. ஏசாச் சிறப்பு – பழிப்பில்லாத சிறப்பு.

36. துரப்ப – செலுத்த.

37. சூழ்கழல். – வினைத்தொகை.

41. கொல் + தல் = கோறல்.

42. ஒள்ளிழை: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

45. தேமொழி: உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

47. தந்து – வருவித்து.

49. வாய் முதல் -- முகத்திடத்து; வாய் – முகம்; முதல், ஏழனுருபு.

56. குலைந்தனள்: முற்றெச்சம்.

57. 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என்று' – பெற்றோர் முதலாயினோரை இழந்தார்க்கு அம்முறை சொல்லிப் பிறரையேனும் காட்டலாம்; ஆனால் கணவனை இழந்தார்க்கு அங்ஙனம் காட்டுதலும் இயலாது என நினைத்து.

58. மடமொழி: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

59. காவி: கண்ணகியின் கண்களுக்கு உவமையாகுபெயர்.

60. 'ஆவி குடிபோன'—உயிர் நீங்கியதை யொத்த. 'பாவியேன்'—(கணவனை இழந்ததால்) பாவியாகிய என்றன். அல்லது, இது கண்டார் ஒருவர் கூற்று எனக் கொள்க.

61. 'காடு' என்றது கூந்தலின் செறிவைக் காட்டியது.

62. கூடலான்—பாண்டியன்.

## வினாக்கள்

1. இளங்கோவடிகளைப் பற்றிக் குறிப்பு வரைக.

2. வாயிலானைக் கண்ணகி எவ்வாறு அழைத்து, யாது கூறினள்?

3. வாயிலான் கண்ணகியின் வரவை அரசனிடம் எவ்வாறு அறிவிக்கின்றான்?

4. கண்ணகி தன் பதியையும் குடியையும் பாண்டியனுக்கு எவ்வாறு அறிமுகப்படுத்துகின்றாள்? அவள் உட்கருத்தியாது?

5. மணி கண்ட மன்னவன் எந்நிலை யுற்றனன்?

6. இடஞ் சுட்டி விளக்குக:

'தேரா மன்னா செப்புவது உடையேன்'
'கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று'
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்'
'கூடலான் கூடாயினான்'

# 2. நளவெண்பா

['நளவெண்பா' நளனது வெண்பா என விரியும்; ஆறாம் வேற்றுமைத் தொகை. சூதாட்டத்தினால் விளைவும் இன்னல்களை விளக்குவது இக்கதை. வடமொழி வியாச பாரதத்தில் வருகின்ற நளன் கதை இதற்கு முதனூல்.

ஆசிரியர் புகழேந்திப் புலவர் 'வெண்பாவிற் புகழேந்தி' எனச் சிறப்புற்றவர்; தொண்டை நாட்டிலே செங்கல்பட்டை யடுத்த பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர்; விட்டுணு சமயத்தினர்; வேளாளர் மரபினர். காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு எனலாம். மள்ளுவ நாட்டு மன்னன் சந்திரன் சுவர்க்கியினால் ஆதரிக்கப்பெற்றவர் இவர்.

இந்நூல் சுயம்வர காண்டம், கலி தொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என முப்பிரிவுகளை யுடையது. பாடம் சுயம்வர காண்டத்தி லுள்ளது.

நளன் நிடத நாட்டினை ஆண்டுவந்தனன். ஓர் அன்னம் தூதாக, விதர்ப்ப நாட்டு வேந்தன் வீமன் மகள் தமயந்தி என்பாளை அவன் மணந்து கொண்ட வரலாறு இக்காண்டத்துள் சொல்லப்பீடும்.]

### நளன் அரசாட்சி

1. சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு.

### நளன் தோழியரோடு பொழில் ஒன்றனை அடைதல்

2. தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனலனைப்ப வேயடைந்தான்
—கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய்
யோற்கொதுங்கிப்
புக்கிருந்தா லன்ன பொழில்.

### ஓர் அன்னம் தோன்றுதல்

3. நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப
—மாணிறத்தான்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகு
மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு.

4. அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார்
கொண்டுபோய்
மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

5. 'அஞ்சல், மடவனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மடநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்' என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

அன்னம் கலக்கம் நீங்கித் தமயந்தியைப்பற்றி
நளனிடம் சொல்லுதல்

6. 'எழுவடுதோண் மன்னா! இலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—யுழுநர்
மடை மிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.

7. 'நாற்குணமு நாற்படையா, ஐம்புலனு நல்லமைச்சா,
ஆர்க்கும் சிலம்பே யணிமுரசா,-வேற்படையும்
வாளுமே கண்ணா, வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு.'

அன்னம் தமயந்தியை அடைந்து அவளிடம் நளனைப்பற்றிச்
சொல்லுதல்

8. மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய —நன்னுதலுந்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை,
'என்னுடல் சொல்' என்றாள் 'ஈங்கு'.

9. 'செம்மனத்தன் தண்ணளியன் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்— மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு.'

தமயந்தி அன்னத்தினிடம் கூறுதல்

10. 'வாவி யுறையு மடவனமே! என்னுடைய்
ஆவி யுவந்தளித்தா யாதியால்;—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி'
என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

தமயந்தியின் மெய்ப்பாடுகளை யறிந்த அவள் தந்தை வீமன் அவளுக்குச் சுயம்வர நாள் குறித்து முரசம் அறைவித்து ஓலைகளும் அனுப்ப வேந்தர்க ளெல்லாரும் குண்டினபுரத்தே வந்து கூடினார்கள். நளனும் வந்தான்.

11. புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல
வாவிகளும்
உள்ளும் புறமும் இனிதுறைந்தார்
—தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல்
விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு.

தேவர்கள்

12. மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும்
வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்
—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் றிருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து.

13. காவற் குடைவேந்தைக் கண்ணுற்று
விண்ணவர்கோன்
'ஏவற் றொழிலுக் கிசை'என்றான்;—ஏவற்கு
மன்னவனும் நேர்ந்தான் மனத்தினான் மற்றதனை
இன்னதென வோரா திசைத்து.

14. 'செங்கண் மதயானைத் தேர்வேந்தே! தேமாலை
எங்களிலே சூட்ட இயல்வீமன்—மங்கைபால்
தூதாக!' என்றானத் தோகையைத்தன் னாகத்தால்
கோதாக வென்றானக் கோ.

**தேவர்கள் தந்த வரத்தினால் எவர் கண்ணுக்கும் தெரியாமல் கன்னி மாடம் புகுந்த நளன் தேவர் சொன்ன செய்தியைத் தமயந்தியிடம் சொல்லவும்,**

15. போதரிக்கண் மாதராள் 'பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே—சோதிச்
செழுந்தரள வெண்குடையாய்! தேவர்களும் நீயும்
எழுந்தருள்க,' என்றாள் எடுத்து.

சுயம்வரம்

16. மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

17. மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து.

18. 'தெரியி லிவன்கண்டாய் செங்கழுநீர் மொட்டை
அரவின் பசுந்தலையென் றஞ்சி—இரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புட் டாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன்.

19. 'வண்ணக் குவளை மலர்வெளவி வண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்துப் பைங்குவளை—உண்ணா
தருங்கடா நிற்கு மவந்திநா டாளும்
இருங்கடா யானை இவன்.

20. 'அன்னந் துயிலெழுப்ப அந்தா மரைவயலிற்
செந்நெ லரிவார் சினையாமை—வன்முதுகிற்
கூனிரும்பு தீட்டுங் குலக்கோ சலநாடன்
தேனிருந்த சொல்லாயிச் சேய்.

21. 'மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகும் அன்னம் தனிக்கயிற்றிற்—போம்நீள்
கழைக்கோ தையரேய்க்குங் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன்.'

22. காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்;
—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாண் மற்றவரைக் காணுநின்
றூசலா டுற்றாள் உளம்.

23. 'மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற்
செம்மைசேர்
கன்னியா ளுகிற் கடிமாலை – அன்னந்தான்
சொன்னவனைச் சூட்டவ ருள்'என்றாள்
சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து.

24. கண்ணிமைத்த லானடிகள் காசினியிற்
றோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே யன்னாள்
அறிந்தா ணளன்றனை ஆங்கு.

25. விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

---

## நளவெண்பா: குறிப்புரை

1. சீத......கிடப்ப – குளிர்ச்சியாகிய நிலவு போன்ற தன் குடை நிழலில் செம்மை வாய்ந்த அறங்கள் தங்கவும். தனிக் காத்தான் – தான் ஒருவனாகவே அரசாண்டான். ஆடல் பருந்து – வெற்றியை யுடைய பருந்து. மதிக்குடை: உவமைத்தொகை. பைங்கிளி: பண்புத்தொகை.

2. ஆலித்து – களியாநின்று. தூங்கு இருள் – செறிய இருள். 'தேரின் துகளை, வேரிப் புனல் நனைப்ப, பொழில், அடைந்தான்' என்க. வேரி – தேன். வேரிப் புனல்: உருவகம்.

3. 'நீள் + நிறம்,' 'தவள் + நிறம்,' 'மாண் + நிறம்' எனப் பிரிக்க. நிறம் பெயர – நிறம் மாற. 'மாண் நிறத்தான் முன் அப்பு உள் தோன்றும் முளரித் தலை வைகும் அன்னப் புள் தோன்றிற்று' என்க. முளரி – தாமரை. தலை: ஏழனுருபு.

4. ஆயிழையார்: வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. மலங்கிற்று – வருந்தியது.

5. களி வண்டு – கள்ளுண்டு களித்த வண்டுகள். மாண – மிகுதியாக.

6. எழு அடு தோள் – தூணை வென்ற தோள்கள். ஏர் தூண்ட – ஏரை நடத்துகையில். கொழு – ஏர்க்காறு. நுதி – நுனி. உழுநர் மடை மிதிப்ப – உழவர் மடையினிடத்து மிதிக்கவும். மாடு – பக்கம். கொம்பு: உவமையாகுபெயர்.

7. நாற்குணமாவன: அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு. நாற்படை: தேர், யானை, குதிரை, காலாள். ஐம்புலன்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். இச்செய்யுள் உருவக அணி.

8 'மன்னன்......திகழ்கின்ற'—நளன் அனுப்பிய அழகுடன் விளங்குகின்ற. நல் + நுதல் = நன்னுதல்: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. தன் + ஆடல் = தன்னாடல் என் + காடல் = என்னாடல்.

9. வாங்கும் தடந் தோளான் – தம் வசப்படுத்திக்கொள்ளும் தோள்களை யுடையான்.

'உனக்கு வேந்தன், மனத்தன், அளியன், கோலான், தோளான், மிக்கான், நளன் என்பான், உளன்' எனக் கூட்டுக. இரண்டாவது 'என்பான்': அசைநிலை. செம்மனம், தண்ணளி, செங்கோல், தடந்தோள்: பண்புத் தொகைகள்.

10. அளித்தாய் ஆதி—கொடுத்தாய் ஆகிறாய். உரைத்தி: உரை, பகுதி; த், சந்தி; த், எழுத்துப்பேறு; இ, ஏவல் ஒருமை எதிர்கால விகுதி.

11. தெண்மை + அரி + கண் = தெள்ளரிக்கண் – தூய செவ்வரி படர்ந்த கண்கள்.

14. மால் வரை – பெரிய மலை. கோல்வளைதன் மாலை – அழகிய வளையணிந்த தமயந்தியினது சுயம்வர மாலை. திருநகர்: குண்டினபுரம். முற்காலத்தில் மலைகளுக்கெல்லாம் சிறகுகள் இருந்தன வென்பதும், அவற்றால் உயிர்களுக்குத் துன்பம் உண்டாகவும் இந்திரன் அவற்றுடன் போர் புரிந்து தன் வச்சிரப்படையால் அவற்றைச் சிறகுகளை அறுத்து வீழ்த்தினான் என்பதும் கதை.

13. 'மன்னவனும் அதனை இன்னது என ஓராது இசைத்து சேர்ந்தான்.' இசைத்து – சொல்லி.

14. இயல் வீமன் – நற்குணசாலியாகிய வீமன். 'தன் ஆகத்தால் கோது ஆக் என்றான்'—தன் மனத்தினால் (இனி அவன் என்வரையில் பயனற்ற) கோதுபோல் ஆகக்கடவன் என்று சொல்லிக்கொண்டான். அஃதாவது அவன்பால் தான் கொண்டிருந்த விருப்பை ஒழித்தான்.

15. போது அரி—செந்தாமரை இதழில் படர்ந்துள்ள மெல்லிய சிவந்த அரிகள் (கோடுகள்). சூட்டத்தான் ஆதரித்தார் – சூட்டுவதற்கு விரும்பியவர்கள். தரளம் – முத்து. என்றாள் எடுத்து – என்று எடுத்துச் சொன்னாள்.

16. விழித்தாமரை: உருவகம். பொன்னின் – இலக்குமியைப் போன்ற. 'மின்னிறத்து......போன்று': – உவமையணி.

17. இயல் அணங்கு – நல்ல இலக்கணங்களை யுடைய தெய்வப்பெண் போல்வாள் ஒரு தோழி. தெரிந்து – முன்னமேயே தெரிந்து வைத்து.

18. பிள்ளைக் குருகு – நாரைக் குஞ்சு. பேதைப் புள் – பெண் நாரை. வள்ளைக் குருநாடு – வளப்பத்தினை யுடைய குரு நாடு.

19. வண்ணம் – அழகு. பண் – இசை. அருங்கடா – அருமையாகிய எருத்து மாடு. எருத்து குவளையை வெளவவும் அதிலிருந்த வண்டுகள் எழும்பி இசை யெழுப்புகின்றன. அவ்விசைக்கு உருகி மாடு நின்றது என்க.

இவன் இரு கடா யானை – இவன் மிகுதியான மதத்தினையுடைய யானையை யொப்பவன்.

20. கூனிரும்பு – வளைவாக வுள்ள அரிவாள். குலம் – மேன்மை.

21. கழைக் கோதையர் எய்க்கும் – கழைக் கூத்துப் பெண்களைப் போன்றிருக்கும். மழைக் கோதை – மேகத்தையொத்த கூந்தல்.

22. ஈரிருவர் தேவர் – நான்கு தேவர்கள்: இந்திரன், அக்கினி, இயமன், வருணன். பூ வரைந்த – மலர்களை அணியப்பெற்ற.

23. விதியின் மன்னன் – கடவுள். கடிமாலை – மணம் மிக்க மாலை. சூழ்விதி: வினைத்தொகை. கடி மாலை: உரிச்சொற்றொடர்.

24. நறுந்தாமரை விரும்பும் நன்னுதல் – இலக்குமி.

25. வெள்கி – வெட்கமுற்று. கண் அகல் – இடம் அகன்ற, வன்மால் – கொடிய மயக்கம். வன் மாலை: ஐ, இரண்டன் உருபு. வயவேந்து – வெற்றி வேந்தன்.

ஞாலம், பொன்: ஆகு பெயர்கள்.

## வினாக்கள்

1. புகழேந்திப் புலவரைப்பற்றிக் குறிப்பு வரைக.
2. இத்தொடர்களுக்குப் பதவுரை தருக.

அ. மாணிறத்தான் - முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகு மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு.

ஆ. களிவண்டு மாணப் பிடித்ததார் மன்.

இ. நன்னுதலும் - நன்னுடல் விட்டுத் தனியிடஞ் சேர்ந் தாங்கதனை - என்னுடல் சொல்லென்றான் ஈங்கு.

3. கீழ்வருவனவற்றிற்கு ஆளப்பட்ட உவமைகள் யாவை?
அ. சுயம்வர மண்டபத்தே தமயந்தி புக்கமை.
ஆ. வள்ளைக் கொடிமீது செல்லும் அன்னம்.
4. கிளியும் பருந்தும் ஒரு கூட்டில் வாழக் காத்தலாவது என்ன?
5. அன்னம் மலங்கியதும் கலங்கியதும் ஏன்?
6. விதர்ப்ப நாட்டு வளம் எவ்வாறு கூறப்பட்டது?
7. தமயந்தியின்பால் விளங்கிய பெண்மை, ஓர் அரசாக உருவகிக்கப் பட்டமை எங்ஙனம்?
8. விண்ணவர்கோன் விடுத்த ஏவல் தொழில் யாது?
9. குருநாடன், கோசலநாடன் ஆகியவர்களைத் தோழி தமயந்திக்கு எவ்வாறு அறிமுகப்படுத்துகின்றனள்?
10. விலங்குக்கும் இசையறியும் இயல்பு உண்டு என்பதற்கு ஒரு சான்று தருக.
11. மண்டபத்தில் மெய் நளனைத் தமயந்தி எவ்வாறு அறிந்தாள்?
12. இடம் சுட்டுக:
அ. அஞ்சல் மடவனமே.
ஆ. என்னுடல் சொல்.
இ. ஆவி உவந்தளித்தாய் ஆதி.

### கட்டுரைப் பயிற்சி

'நளவெண்பா அழகு' என்னும் பொருள்பற்றி ஒரு கட்டுரை வரைக.

## 3. வலன் வரலாறு

## (திருவிளையாடற் புராணம்)

[சோமசுந்தரர் மதுரையில் இயற்றிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் கூறும் புராணம் திருவிளையாடற் புராணம். இது மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என முப்பெரும் பிரிவுகளையும், படலம் என்று பல சிறு பிரிவுகளையும் உடையது.

இந்நூலின் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் என்பவர், திருமறைக்காடு என்பது இவர் ஊர். மீனாட்சி சுந்தர தேசிகரின் மைந்தர். சைவ வேளாளர். பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தவர்.

வலன் வரலாறு மதுரைக் காண்டம் மாணிக்கம் விற்ற படலத்தில் வருகின்றது.]

### தவமும் வரமும்

1. மேவரும் வலனெனும் அவுணன் மேலைநாள்
மூவரின் விளங்கிய முக்கண் மூர்த்திசெஞ்
சேவடி யருச்சனைத் தவத்தின் செய்தியால்
யாவது வேண்டுமென் றிறைவன் கூறவா

2. தாழ்ந்துநின் றியம்பும்'யான் சமரில் யாரினும்
போழ்ந்திற வாவரம் புரிதி; ஊழ்வினை
சூழ்ந்திறந் தாலென்மெய் துறந்த மாந்தரும்
வீழ்ந்திட நவமணி யாதல் வேண்டுமால்,'

இந்திரன் தோல்வியும், 'வரந்தருவேன்' என்றலும்

3. என்றுவேண் டலும்,வரம் ஈசன் நல்கினன்:
அன்றுபோய் அமர்குறித் தமரர் கோனொடு
சென்றுபோ ராற்றலும் தேவர் கோனெதிர்
நின்றுபோ ராற்றலன் நீங்கிப் போயினன்.

4. தோற்றவா றுடவன் 'மீண்டு சூழ்ந்தயர்
ஆற்றினும் வெல்லரி தழிவி லாவரம்
ஏற்றவ னுதலா லிவனைச் சூழ்ச்சியாற்
கூற்றினார் ஏற்றுதல் குறிப்'பென் றுன்னியே,

5. விடங்கலுழ் படைக்கல னின்றி விண்ணவர்
அடங்கலுந் தழீஇக்கொள வடுத்துத் தானவ
மடங்கலை 'வருகெ'ன நோக்கி வானவக்
கடங்கலுழ் யானைபோற் கரைந்து கூறுவான்:

6. 'விசைய!நின் றோள்வலி வென்றி வீக்கமெத்
திசையினும் பரந்ததச் சீர்த்தி நோக்கியுள்
நசையுரு மகிழ்ச்சியால் நல்கு வேனுனக்
கிசையவேண் டியவரம் யாது கேள்'என.

வலன் இந்திரனை நோக்கி நகைத்து 'வரங்கேள்' எனல்

7. கடிபடு கற்பக நாடு காவலோன்
நொடியுரை செவித்துளை நுழையத் தானவன்
நெடியகை புடைத்துடல் நிமிர்ந்து கார்படும்
இடியென நகைத்திகழ்ந் தினைய கூறுவான்:

வேறு

8. 'நன்றிது மொழித்தா யாரு
நகைக்கநீ யெனைவெந் கண்ட
வென்றியு மதனுற் பெற்ற
புகழுநின் வீறு பாடும்

இன்றுநின் போரிற் காணப்
பட்டவே; இசைபோ யெங்கும்
நின்றதே; இதுபோல் நின்கை
வண்மை நிற்ப தன்றோ?

9. 'ஈறிலா னளித்த நல்ல
வரமெனக் கிருக்க நின்பால்
வேறுநான் பெறுவ துண்டோ?
வேண்டுவ துனக்கியா தென்பாற்
கூறுநீ; அதனை யின்னே
கொடுக்கலே னாகில் நின்போற்
பாறுவீழ் களத்தில் தோற்ற
பழிப்புகழ் பெறுவன்,' என்றான்.

இந்திரன் கேட்ட வரம்

10. மாதண்ட வவுணன் மாற்றம்
மகபதி கேட்டு வந்து
கோதண்ட மேருக் கோட்டிக்
கொடும்புரம் பொடித்தான் வெள்ளி
வேதண்ட மெய்தி யாங்கோர்
வேள்வியான் புரிவன்; நீயப்
போதண்டர்க் கூட்ட ஆவாய்ப்
போதுவாய் வல்லை யென்றான்.

வலன் மறுமொழி

11. 'அன்றொரு தவத்தோ னென்பு
வச்சிர மொன்றே யாக
ஒன்றிய கொடையாற் பெற்ற
புகழுடம் பொன்றே; என்போல்
வென்றியி னாலும், வீயா
மெய்யெலாம் மணிக ளாகப்
பொன்றிய கொடையி னாலும்
புகழுடம் பிரண்டுண் டாமே?

12. 'மேவலன் அல்லை; நீயே
நட்டவன்; மேலை வானோர்
யாவரு மருந்து மாற்றால்
அறம்புக ழெனக்கே யாக,
ஆவுரு வாதி யென்றாய்,
அன்னதே செய்வேன்' என்றான்:
ஈவதே பெருமை யன்றி
இருக்கின்ற திழிபே யன்றோ.

வலன் ஆறுகி வேள்விச் சாலைக்குப் போதல்

13. அதற்கிசைந் தவுணர் வேந்தன்
அமரர்வேந் தனைமுன் போக்கி,
மதர்க்கடுங் குருதிச் செங்கண்
மைந்தனுக் கிறைமை யீந்து,
முதற்பெருங் கலையாம் வேத
மொழிமர பமைந்த ஆனாய்ப்
புதர்க்கடு வேள்விச் சாலைப்
புறத்துவந் திறுத்து நின்றான்.

வேள்வி

14. 'வாய்மையான் மாண்ட நின்போல்
வள்ளல்யா ரென்று தேவர்
கோமகன் வியந்து கூறத்
தருக்குமேற் கொண்டு மேரு
நேமியோ டிகலும் விந்த
வரையென நிமிர்ந்து, வேள்விக்
காமெனை யூபத் தோடும்
யாமினென் றடுத்து நின்னான்:

15. யாத்தனர் தருப்பைத் தாம்பால்,
ஊர்ணையால் யாத்த சிங்கப்
போத்தென நின்றான் வாயைப்
புதைத்துயிர்ப் படங்க வீட்டி

மாய்த்தனர்; மாய்ந்த வள்ளல்
வலனுமந் தார மாரி
தூர்த்திட விமானம் ஏறித்
தொல்விதி யுலகஞ் சேர்ந்தான்.

16. மணித்தலை மலையின் பக்கம்
மாய்த்தவன் வயிர வேலாற்
பிணித்துயிர் செகுத்த வள்ளல்
பெருந்தகை ஆவாய் வேதம்
பணித்திடும் வகையை வாங்கிப்
படரெரி சுவைமுன் பார்க்கக்
குணித்தவா றுடர்க் கூட்டிக்
கோதிலா வேள்வி செய்தான்.

மணிகள் தோற்றம்

17. அத்தகை ஆவின் சோரி
மாணிக்கம் ஆம்;பன் முத்தம்;
பித்தைவை டூயம்; என்பு
வச்சிரம்; பித்தம் பச்சை;
நெய்த்தவெண் ணிணம்கோமேதம்;
தசைதுகிர்; நெடுங்க ணீலம்
எய்த்தவை புருட ராகம்;
இவைநவ மணியின் தோற்றம்.

திருவிளையாடல்: குறிப்புரைகள்

1. மேவரும் – பகைவர் கிட்டுதற் கரிய. அவுணன் – அசுரன்.

2. போழ்ந்து இறவா வரம் – பிளவுண்டு இறவா வரம். 'துறந்த மாந்தரும் வீழ்ந்திட என் மெய் நவமணி ஆதல் வேண்டும்' என வேண்டினன்.

3. அமரர் கோன் – இந்திரன். ஆற்றலன் – செய்யமாட்டானாய்: முற்றெச்சம்.

4. 'வெல் அரிது; ஏற்றவன்; ஏற்றுதல் குறிப்பு' என்க. உன்னி – நினைத்து.

5. விடம் கலுழ் – நஞ்சு சிந்தும் விண்ணவர் அடங்கலும் தழீஇக் கொள – தேவர் யாவரும் சூழ்ந்து வர. தானவ மடங்கல் – அசுர சிங்கம். கடம் கலுழ் – மதம் பொழியும்.

6. விசைய – வெற்றியாளனே. வென்றி வீக்கம் – வெற்றிப் பெருக்கம். சீர்த்தி – மிகு கீர்த்தி. நசை – விருப்பம்.

7. கடிபடு – மணம் பொருந்திய. கொடி – கூறிய. தானவன் – அவுணன். கொடியுரை: வினைத்தொகை.

8. வெந் கண்ட – புறங்கண்ட. வென்றி – வெற்றி. அவுணன் இந்திரனைப் பாராட்டுதல்போல் பேசுவது இகழ்ச்சிக் குறிப்பு.

9. ஈறு இலான் – முடிவு இல்லாதவனாகிய இறைவன். பாறு – பருந்து. பழிப் புகழ் – பழியாகிய புகழ்; இந்திரன் பழியையே புகழாகப் பெற்றுளான் என்பது.

10. மா தண்ட – பெரிய தண்டினை ஏந்திய. மாற்றம் – சொல். 'மேரு கோதண்டம் கோட்டி' – மேரு மலையை வில்லாக வளைத்து. கொடும்புரம் – திரிபுரம். 'கோதண்டம்......பொடித்தான்' – சிவபிரான். வேதண்டம் – மலை. அண்டர் – தேவர். ஆ – பசு.

11. தவத்தோன் – ததீசி முனிவன். வச்சிரம் – வச்சிரப்படை. விருத்திராசுரனைக் கொல்ல இந்திரன் ததீசி முனிவரிடம் வேண்டி, அவர்தம் முதுகெலும்பைப் பெற்றான். பொன்றிய கொடை – இறத்தலால் ஆகும் கொடை. 'தவத்தோன், கொடையாற் பெற்ற புகழுடம்பு ஒன்றே; என்போல் வென்றியினாலும், கொடையினாலும் புகழ் உடம்பு இரண்டு உண்டாமே?' என்க.

12. மேவலன் – பகைவன். கட்டவன் – கள்வன்; 'கள்' பகுதி. இப்பாடல் வேற்றுப்பொருள் வைப்பணி.

13. மதர் கடும் குருதி செங்கண் – மதர்த்த கொடிய உதிரம்போற் சிவந்த கண்கள். புதர்க்கு அடு வேள்விச்சாலை – தேவர்கட்கு அவியுணவு ஆக்கும் வேள்விச்சாலை.

14. மாண்ட – மாட்சிமைப் பட்ட. மேரு நேமி – மேரு மலை. விந்த வரை – விந்தமலை. யூபம் – வேள்வித் தூண். யாமின் – கட்டுங்கள்; யா: பகுதி.

15. யாத்தனர் – கட்டினர். ஊர்ணையால் யாத்த சிங்கப்போத்து – சிலந்தியின் நூலினால் கட்டப்பட்ட ஆண் சிங்கம். நின்றான் வாயை – நின்றானுடைய வாயை; நின்றான்: வினையாலணையும் பெயர். வீட்டி: வீழ்த்தி என்பதன் மரூஉ. மந்தார மாரி தூர்த்திட – கற்பக மலர் மழை பொழிய.

16. மலையின் பக்கம் மாய்த்தவன் – இந்திரன். பக்கம் – சிறகு. (முன்னொரு காலத்தில் மலைகளெலாம் சிறகுகள் பெற்றிருந்தனவாம். அக்காலத்தே அவைகள் உயிர்களுக்குப் பெருந் துன்பங்களை விளைவித்துவரவும் இந்திரன் அவற்றுடன் போர் புரிந்து அவற்றின் சிறகுகளை அறுத்தெறிந்தான் என்ப.) பெருந்தகை ஆ வாய் – பெருந்தகையாகிய ஆவினிடத்திலிருந்து; படர் எரி அவை முன் பார்க்க – படர்ந்த வேள்வித் தீயானது முன்னே அவை பார்க்க.

17. சோரி – குருதி. பித்தை – மயிர். துகிர் – பவளம். எய்த்த ஐ – இளைக்கச்செய்தவாய கோழை; கபம்.

## வினாக்கள்

1. இந்நூலின் ஆசிரியரைப்பற்றிக் குறிப்பு வரைக.
2. வலன் வேண்டிப் பெற்ற வரம் யாது?
3. வலனைக் கொல்வதற்கு இந்திரன் செய்த சூழ்ச்சி யாது?
4. 'வரங்கேள்' என இந்திரன் கூறியதும் வலன் யாது கூறினன்?
5. 'வேண்டுவது உனக்கு யாது' என வினவினனை இந்திரன் வேண்டியது யாது?
6. 'ஆவாய்ப் போதுவாய்' என இந்திரன் வேண்டவும் வலன் யாது சொற்றனன்?
7. வேள்விக்கு ஆனைப் பலியிட்ட வகையையும் நவமணிகள் தோன்றியமையையும் பத்து வரிகளில் வரைக.
8. கீழே வரும் தொடர்களுக்குப் பொருளும் தந்து அவை இன்னவற்றிற்கு ஒப்பனைகளாயின எனவும் காட்டுக:
    1. 'நேமியோ டிகலும் விந்த வரை'
    2. 'ஊர்ணையால் யாத்த சிங்கப் போத்து'
9. இடம் சுட்டி விளக்குக:
    1. 'நின்போற் பாறுவீழ் களத்தில் தோற்ற பழிப்புகழ் பெறுவன்.'
    2. 'புகழுடம் பிரண்டுண்டாமே.'
    3. 'ஈவதே பெருமை யன்றி இரக்கின்ற திழிபே யன்றோ.'

---

# 4. இரட்சணிய யாத்திரிகம்

[கிறிஸ்து பிரானின் திருவருளால், இவ்வுலகத்தின் தீமைகளினின்றும் தீய செயல்களினின்றும் விலகி இரட்சணியம் அடைந்து (அஃதாவது பாவத்திலிருந்து காக்கப்பட்டு), வீட்டுலகை விரும்பிச் செல்லுகின்ற ஒருவனின் (யாத்திரை) வரலாறு கூறும் இந்நூல் 'இரட்சணிய யாத்திரிகம்' எனப் பெயரிடப்பட்டது. இந்நூல் முழுமையும் ஒரு சிறந்த உருவக மாகும். வாழ்க்கையே ஒரு யாத்திரையாக உருவகிக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் பாளையங்கோட்டை மகா வித்துவான் எச். ஏ. கிருஷ்ணபிள்ளை யவர்கள். இவர்கள் இக்காவியமே யன்றி, இரட்சணிய சமய நிர்ணயம் என்ற உரை நடை நூலும், இரட்சணிய மனோகரம், இரட்சணியக் குறள் என்ற கவிதை நூல்களும் இயற்றி யுள்ளார்கள். (இப்பாடநூலில் அஞ்சலிப் பகுதியில் உள்ள குறிப்புகளைக் காண்க.)

இரட்சணிய யாத்திரிகம் ஒரு வழி நூல். ஜான் பனியன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய "Pilgrim's Progress" என்ற நூல் இதற்கு முதனூல்.

இக்காவியத்தின் தலைவனாகிய 'கிறிஸ்தவன்' என்பவன் மோட்சத்திற்குச் செல்லும் நெறி பிடித்துச் சென்றுகொண் டிருக்கின்றனன். வழியில் ஒரு மேட்டின் மேலிருந்த சிலுவையினைக் கண்டு தன்னை அழுத்திக்கொண்டிருந்த

(பாவ) மூட்டை அறுந்து நீங்கப் பெற்றனன். பின் அவ்வழியிலேயே சென்றுகொண்டிருந்தவன் 'துன்பமலை' என்றொரு மலையினைக் கண்டு கடந்து, இராத் தங்குதற்கென, 'எழிற் சத்திரம்' என்றொரு மாளிகையை நோக்கிச் செல்லுகின்றான். இங்கு நம் பாடம் ஆரம்பிக்கின்றது. இச்செய்யுட்கள் குமார பருவம், சம்பாஷணைப் படலத்திலிருந்தும் இரட்சணிய சரிதப் படலத்திலிருந்தும் எடுத்துக் கோக்கப்பட்டவைகள்.]

இரவு நேரம்

1. வெய்யவ னிறத்தலிற் பரிந்து மேதினித்
தையலாள் துக்கவெந் தழல்சு டச்சுட
மெய்யெலாங் கருகிய விதத்தை மானுமால்
வையக முழுவதும் புதைத்த மையிருள்.

2. கெடுக்குந ரடர்ந்துபல் கேடு சூழினு
நடுக்குறு நோய்பல நலியு மேனுங்கை
எடுக்குநர்க் கிறையருள் இலங்கு மாறுபோல்
உடுக்கணம் விளங்கின வும்ப ரெங்குமே.

3. ஆன்றபே ரகல்விசும் பணவி எங்கணு
மீன்றிகழ்ந் தொளிர்வன விட்பு லத்துநங்
கோன்றிரு நந்தனங் குலவு சோதிய
வான்தருக் குலம்பொலி மலரை மானுமே.

4. அடங்கின விலங்குபுள், அடவி யார்ப்பொலி
அடங்கின, பல்லியத் தணிகொள் பேரிசை
அடங்கின, பணிமுறை அகில காரியம்
அடங்கின, பொறிபுலன் அவித்த யோகிபோல்.

[இத்தகை இரவில் கிறித்தவன் என்போன் 'எழிற் சத்திரம்' என்ற மாளிகையின் வாயிலை அடைகின்றனன்.]

5. இத்திற முன்னிசி இருட்டொ டேகிய
வித்தக வேதியன் விரைந்து போயெழிற்
சத்திரப் புறக்கடைத் தலையைக் கிட்டினன்;
அத்தகு காவலன், 'ஆரை நீ' யென்றான்.

6. 'நாசதே சத்துளேன் நயந்து நாடொறும்
பாசவெவ் வினைத்தொழில் பயின்ற பாமர
நீசன்,முற் பெயர் அவ பத்தன், நின்மல
ஈசனார் அருள்பிடித் திழுத்த திவ்வழி.'

[இங்ஙனம் கிறிஸ்தவன் சொல்லவும் அம்மாளிகையுள் அவனுக்கு இடம் தரப்பட்டது. அங்கிருந்த மகளிர் அவனைப் பலவாறாக உபசரித்தனர். பின்னர் அவர்களுள் பத்தி என்னும் பெண்மணி கிறிஸ்தியானுக்குக் கிறிஸ்து நாதருடைய சிலுவைக் காட்சிகளைக் குறித்துச் சொல்லுகின்றனள்].

7. அன்பிலார்த மக்குரியர் அன்புடைய ராக்கை
என்புமுரி யார்பிறருக் கென்னுமுரை எம்மான்
தன்புடைய லாதெவரிற் சான்றுபடு மாயின்,
முன்புமிலை பின்புமிலை மூதுலகின் மாதோ.

[ஏசு பிரானைப் பிடித்த போர்ச் சேவகரும் பிறரும் அவரைத் துன்புறுத்தி இகழ்தல்]

8. முன்னுடை களைந்தொரு முருக்க லர்ந்தெனச்
செந்நிற அங்கிமேற் றிகழச் செய்தனர்;
கொன்னுனை யழுந்திவெங் குருதி பீறிடப்
பின்னிய முண்முடி சிரத்துப் பெய்தனர்.

9. கோலெனக் கையிலொரு கோலை நல்கினார்
காலிணை முடக்கிமுன் னின்று, 'காவல,
மாலுறும் அரசநீ வாழ்க, வாழ்க'வென்
றோலிடூஉப் பரிகசித் துரற்றி னார்பலர்.

10. கைதுறுங் கோலினைக் கவர்ந்து கண்டகர்
வெய்துறத் தலைமிசை யடித்து வேதனை
செய்தனர்; உமிழ்ந்தனர் திருமு கத்தினே;
வைதனர்; பழித்தனர், மறங்கொ ணீசரே.

11. மலர்ந்தசெந் தாமரை யனைய வாண்முகம்
புலர்ந்துசெங் குருதியாற் பூசுண் டெஞ்சிய(து),
உலர்ந்தது தாலுவும், கருணை யூற்றிருந்
தலர்ந்தநேத் திரங்களும் குழிபட் டாழ்ந்தவே

வேறு

[ஏசுவின் இக்கோலத்தினைக் கண்டார் சொல்லுவார்]

12. என்கொல்! மேதினி கீண்டுவெ டித்தில தென்பார்;
என்கொல்! வானமி டிந்துவி ழுந்தில தென்பார்;
என்கொல்! வாரிதி நீர்சுவ றாததும் என்பார்;
என்கொ லோ, முடி வித்துணை தாழ்த்ததும்
என்பார்.

13. கண்ப டைத்தில மேலிது காண்கில மென்பார்;
மண்ப டைத்தபி ணிக்கினி மாற்றிலை யென்பார்;
புண்ப டைத்தநெஞ் சோடுயிர் போகல வென்று
எண்ப டைத்தவர் இன்னன பன்னிடு மெல்லை,

### வேறு

[ஏசுநாதர் சிலுவையினைச் சுமந்து எருசலை நகர்க்குப் புறத்தே 'கல்வாரி' என்று சொல்லப்பட்ட கொலைக் குன்றிற்குச் செல்லுகின்றார்]

14. பொல்லாத யூதர்களும் போர்ச்சேவ கர்குழுவும்
வல்லானை யெள்ளிப் புறக்கணித்து வாய்மதமாய்ச்
சொல்லாத நிந்தைமொழிச் சொல்லித்து ணிந்தியற்றும்
பொல்லாங்கை யெல்லாநம் மீசன்பொ றுத்திருந்தார்.

15. புற்றரவிற் சீறிப்பு டைவளைந்து புல்லியர்தாம்
துற்றிவி ளைத்தகொடுந் துன்பந்த னியுழந்து
முற்றுங்கி ரகணத்தின் மூழ்குந்தி னகரன்போல்
செற்றமிலாத் தேவமைந்தன் தேசிழந்து தேம்பினர்.

16. வள்ளல் குருராயன் மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
எள்ளி யவதரித்த எம்மான் சருவேசன்
கொள்ளை புரிந்து கொலைத்தீர்ப்புப் பெற்றுவரு
கள்ளரி ருவரொடுங் கல்வாரி நோக்கினர்.

17. கையயர்ந் துவாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து
வெய்ய சிலுவைசு மந்தலசி மெய்வருந்தித்
துய்ய திருவடிகள் சோர்ந்துநடை தள்ளாடி
அய்யன் மறுகூடு வரக்கண்டார் அணிநகரார்

[அவர்தம் சீடரும் தாயும்]

18. குழனூலிற் பிரியாத குருத்துவமா ருட்சீடர்
அழலனைய துயர்நலிய வழுதுகரந்
துடன்செல்லப்
பழுதறுமெய்ப் பரம்பொருளை மகவாக்கொள்
பசுந்தோகை
தழலிடுபூங் கொடியேபோல் சாம்பியுயிர்
தளர்ந்தேக.

[சிலுவையில் ஏசுபிரான்]

19. ஈண்டினியான் புகல்வதெவன்? எம்பெருமான்
றிருமேனி
தீண்டினர்; சிலுவையொடு சேர்த்தினர்;
செங்கையிலும்
காண்டகுசே வடியிலும்வெவ் விருப்பாணி
கடாவினர்;
நீண்டசிலு வையையெடுத்து நிறுத்தினர்
நிலங்கீண்டு.

20. தன்னரிய திருமேனி சதைப்புண்டு
தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்(து),
'எந்தாய்,
இன்னதென வறிகில்லார் தாஞ்செய்வ
திவர்பிழையை
மன்னியு'மென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம்
அருள்வள்ளல்.

21. கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி
வதைப்புண்டு
மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென்
றுரைத்தமொழி
ஈண்டிவரே யுலகினுக்கோர் இரட்சகரென்
றெடுத்துரைக்கும்
வேண்டுமோ இனிச்சான்றும் இதைவிடுத்து
வேறொன்றே.

**வேறு**

[இங்ஙனம் எம்பிரானார் சிலுவையில் பாடுபட்டுத் தம் உயிரைக் கொடுத்தார். அவர் திருவுடல் ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. ஆயினும் மூன்றாம் நாள் அவர் மீண்டும் உயிர் பெற்று எழுந்தார்.]

22. இன்னதோ ரமையந் தன்னில்
இருநில வுலகுக் கெல்லாம்
பன்னரு நலத்த வாய
பரகதிப் பயனை ஈட்டித்
துன்னிய ஜடவி யோகத்
துயிலுணர் சூழ்ச்சி யேபோல்
உன்னத தேவ மைந்தன்
உயிர்த்தெழுந் தருளிப் போந்தார்.

23. தன்மமுந் தவமு மோங்கித்
தழைத்தன; அருள்மெய் வேத
கன்மமும் ஒழுக்கும் வல்லே
கதித்தன; கருணை பூத்த
நன்மையு மெய்மை தானும்
நடநவின் றுலகம் எங்கும்
வன்மமும் பகையுந் தேய
வளர்ந்தன மருவி மாதோ!

[இங்ஙனம் பத்தி என்னும் பெண்மணி சொல்லவும் கிறிஸ்தவன் கேட்டுக் கொண்டிருந்தனன் என்க.]

---

## இரட்சணிய யாத்திரிகம் : குறிப்புரை

1. மேதினித் தையலாள் – பூமியாகிய பெண். தற்குறிப்பேற்ற வணி.

2. கை எடுக்குநர் – வணங்குபவர். உடு – வான்மீன். உம்பர் – வான். உவமை யணி.

3. அணவி – பொருந்தி. 'திகழ்ந்து ஒளிர்வன மீன், மலரை மானும்' என்க. நங்கோன் – கடவுள். விட்புலம் – வான நாடு. நந்தனம் – நந்த வனம்.

4. அடவி – காடு. பணிமுறை – முறைபணி – முறையாகச் செய்யப்படுகின்ற தொழில்கள். உவமை யணி.

5. எழிற்சத்திரம் – இதனைச் 'சிங்கார மாளிகை' என்றும் சொல்லுவர். இருளில் வரக்கூடிய தீமைகளிலிருந்து விலகி இளைப்பாறுதற்காகக் கிறிஸ்தியான் அல்லது கிறிஸ்தவன் இவ்விடத்தை அடைகிறான். தீ நுச்

சபை என்று சொல்லப்படுகிற கிறிஸ்தவ அடியார்களின் திருக்கூட்டமே இங்கு மாளிகையாக உருவகித்துச் சொல்லப்படுகிறது என்க. முன்னிசி — முன் நிசி. வேதியன் — வேதம் சொல்லுமாறு நடப்பவன்; இங்கே கிறிஸ்தவன். ஆரை: ஐ, சாரியை.

6. ‘நாசதேசம்’ என்பது ‘கிறிஸ்தவனின்’ சொந்த நாடு. இந்நாட்டின் தலைநகர் நாசபுரி என்பது. பாமரம் — இழிவு. கிறிஸ்தவனின் முன் பெயர் ‘அவபத்தன்’ என்பது.

7. எம்மான் தன்புடை அலாது — எம்பெருமான் ஏசுவினிடத்திலேயல்லாமல். மாதோ: அசைநிலை. ‘அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர் —என்பும் உரியர் பிறர்க்கு’ : குறள்.

8. முன்னுடை — முன்னே அணிந்திருந்த ஆடை. ஏசுவை ‘அரசன்’ என்று சொல்லிப் பரிகசிப்பதற்காக அரசர் அணிந்து கொள்ளுவதுபோன்றதொரு அங்கியை அவருக்கு மாட்டினார்கள் போர்ச் சேவகர்கள்.

9. கோல் என — செங்கோல் என; கோல்: மூங்கிற் கோலொன்றனைச் செங்கோலெனக் கொடுத்து அவரை எள்ளினார்கள். ஒலிடூஉ — ஒலயிட்டு.

10. அக்கோலினைப் பிடுங்கி முண்முடி பெய்த சிரமிசை அடித்தனர். கண்டகர் — கொடியர்.

11. எஞ்சியது — கெட்டது. தாலு — நாவு. வாரிதி — கடல். முடிவு — உலகத்தின் முடிவு.

12. மேதினி — பூமி. எம்பெருமான் படுகின்ற அரும்பாடுகளைக் கண்டு இத்தகைய கொடுமையெலாம் நிகழ்ந்திலவே என மக்கள் சொல்லுகின்றார்கள் என்பது.

13. பிணி — பழி. என்னு: செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். எண் படைத்தவர் — மிகுதியானவர். பன்னிடும் எல்லை — சொல்லிக்கொண்டிருக்கும்போது (கொலைக் குன்றிற்குச் செல்லுகின்றார் என உரை சொல்லி முடித்துக்கொள்க.)

15. அரவு — பாம்பு. புடை வளைந்து — பக்கங்களில் சூழ்ந்து. துற்றி — நெருங்கி. செற்றம் — கோபம். இப்பாடல் உவமை யணி.

16. கல்வாரி: எபிரேயச் சொல்; ஏசுவானவர் சிலுவையில் அறையப்பட்ட ஒரு மேடான இடம்.

17. புலர்ந்து — உலர்ந்து. மறுகு — தெரு. அணி நகர்: எருசலே.

18. பரம்பொருளை மகவு ஆ கொள் பசுந்தோகை — இறைவனாகிய இயேசுவைத் தமக்கு மகனாகக் கொண்ட பெண்மணியாராகிய ‘மரியாள்’ என்பவர். தோகை — மயில். அன்னையாரும் சிலுவைப் பின்னே சென்றார்கள் என்க.

19. எவன் — என்ன. காண் + தகு = காண்டகு — காணத் தகுந்த.

20. பன்ன + அரிய = பன்னரிய; அகரம் தொக்கது செய்யுள் விகாரம். பன்னுதல் – சொல்லுதல். எந்தை: என் தந்தை; மரூஉ. , எந்தாய்: விளி. கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தபோது அவர் தம் தந்தையாகிய மூலப் பரம்பொருளை விளித்துத் தம்மைத் துன்புறுத்துவாரைப் பொறுத்தருள வேண்டு மென வேண்டினார்.

21. 'இருப்பு முளை உடலைக் கீண்டு கிழித்து' எனவும், 'இரட்சகர் என்று எடுத்து உரைக்கும் சான்றும் இதை விடுத்து இனி வேறொன்று வேண் டுமோ' எனவும் கூட்டுக. இருப்பு – இரும்பு: வலித்தல் விகாரம். முளை – ஆணி.

22. கிறிஸ்துவின் சிலுவைத் தியாகம் உலகுக்குப் 'பாகதிப் பயனை ஈட்டி யது.' ஜடவியோகத் துயில்: சடம் வியோகம் துயில்: தேகவியோகமாகிய தூக்கம். துயிலுணர்தல் – தூக்கந் தெளிதல்.

23. கதித்தன – மிகுதியாகி விளங்கின. கடகவின்று: கடம் கவின்று. கவின்று – கற்று. தேய வளர்ந்தன: முரண் தொடை.

## வினாக்கள்

1. இரட்சணிய யாத்திரிகத்தின் ஆசிரியரைப்பற்றிக் குறிப்பு வரைக.

2. இரவின் இருட் செறிவு, வான்மீன் கூட்டம்: இவைகள் எவ்வாறு வருணிக்கப்படுகின்றன.

3. 'பொறி புலன் அவித்த யோகி': இத்தொடருக்குப் பொருள் கூறி இஃது உவமையாகி விளக்கவந்த உண்மையினையும் சுட்டுக.

4. 'ஆரை நீ' – இவ்வினா விடுத்தவன் யாவன்? விடை பகர்ந்தவன் யாவன்? விடை யாது?

5. ஆரை: இலக்கணம் கூறு.

6. இப்பகுதியுள் குறட் கருத்து எவ்வாறு ஆளப்படுகின்றது?

7. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதற்கு முன்னாளிரவு போர்ச் சேவகர் அவரை எவ்வா றெல்லாம் துன்புறுத்தினர்?

8. ஏசுவின் துன்பக் கோலத்தினைக் கண்ட எருசலே நகரத்தார் என் னென்ன கூறி ஏங்கினர்?

9. 'புற்றரவு' 'முற்றுங் கிரகணத்தில் மூழ்குந் தினகரன்' – இவ்வொப் பனைகளுக் குரியார் யாவர், எங்ஙனம் என எழுதுக.

10. 'குழனூலிற் பிரியாத குருத்துவம்' – நயங் காட்டுக.

11. 'தழலிடு பூங்கொடி' – விளக்குக.

12. 'இதை விடுத்து வேறொன்று சான்று வேண்டுமோ' – எதை விடுத்து?

13. கிறிஸ்து பெருமான் மீண்டும் உயிர் பெற்றெழுந்ததால் விளைந்த நன்மைகள் யாவை?

## 5. பாஞ்சாலி சபதம்

[பாண்டவரின் மனைவி திரௌபதி பாஞ்சால தேசத்தரசன் மகளாதலின் அவளுக்குப் பாஞ்சாலி என்றும் ஒரு பெயருண்டு. அவள் செய்த சபதத்தைப் பற்றிய வரலாற்றினைக் கூறும் நூலாதலின் இந்நூல் 'பாஞ்சாலி சபதம்' எனப் பெயர் பெற்றது.

இதன் ஆசிரியர் வரகவி சுப்பிரமணிய பாரதியார். இவரது காலம் கி.பி. 1882 - 1921. அந்தணர் மரபில், சின்னசாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் புதல்வராய்த் தோன்றிய இவர் சிறு வயது தொடங்கியே கவிதை இயற்றும் வரம் பெற்றுத் திகழ்ந்தார். தமிழ் நாட்டில் முதன் முதல், இனிய எளிய நடையில் கவி இயற்றிக் காட்டியவர் இவரே எனலாம். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, விநாயகர் நான்மணி மாலை ஆயனவும் பிறவு மாகிய பல கவித் தொகுதிகளை இவர் இயற்றி யுள்ளார்.

சூதாட்டத்தினால் அடிமையாக்கப்பட்ட திரௌபதியைத் தன் சபையின் முன் கொணர்ந்து நிறுத்தும்படிப் பாகனை ஏவினன் துரியோதனன். திரௌபதி பாகனிடம் கூறியனவும் பிறவும் இங்கே சொல்லப்படுகின்றன.]

### திரௌபதி

1. நாயகர் தாந்தம்மைத் தோற்றபின்—என்னை
   நல்கு முரிமை அவர்க்கில்லை—புலைத்
தாயத்தி லேவிலைப் பட்டபின்—என்ன
   சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்?—அவர்
தாயத்தி லேவிலைப் பட்டவர்;—புவி
   தாங்குந் துருபதன் கன்னிநான்—நிலை
சாயப்பு லைத்தொண்டு சார்ந்திட்டால்—பின்பு
   தார முடைமை அவர்க்குண்டோ.

2. கௌரவ வேந்தர் சபைதன்னில்—அறங்
   கண்டவர் யாவரு மில்லையோ?—மன்னர்
சௌரியம் வீழ்ந்திடு முன்னரே—அங்குச்
   சாத்திரஞ் செத்துக் கிடக்குமோ?—புகழ்
ஒவ்வுற வாய்ந்த குருக்களும்—கல்வி
   ஓங்கிய மன்னரும் சூதிலே—செல்வம்
எவ்வுறத் தாங்கண் டிருந்தனர்?—(என்றன்)
   மான மழிவதுங் காண்பரோ?

3. இன்பமுந் துன்பமும் பூமியின்—மிசை
யார்க்கும் வருவது கண்டனம்;—எனில்
மன்பதை காக்கு மரசர்தாம்—அற
மாட்சியைக் கொன்று களிப்பரோ?—அதை
அன்புந் தவமுஞ் சிறந்துளார்—தலை
யந்தணர் கண்டு களிப்பரோ?—அவர்
முன்பென் வினாவினை மீட்டும்போய்ச்—சொல்லி
முற்றுந் தெளிவுறக் கேட்டுவா.

பாகன்

4. என்றந்தப் பாண்டவர் தேவியும்—சொல்ல,
என்செய்வன் ஏழையப் பாகனே?—என்னைக்
கொன்றுவிட் டாலும் பெரிதில்லை—இவள்
கூறும் வினாவிற் கவர்விடை—தரின்
அன்றி இவளை மறுமுறை—வந்
தழைத்திட நானங் கிசைந்திடேன்,—என
நன்று மனத்திடைக் கொண்டவன்—சபை
நண்ணி நிகழ்ந்தது கூறினான்.

5. பாகனை மீட்டுஞ் சினத்துடன்—அவன்
பார்த்திடி போலுரை செய்கின்றான்:—'பின்னும்
ஏகி நமதுளங் கூறடா,—அவள்
ஏழு கணத்தில் வரச்செய்வாய்!—உன்னைச்
சாக மிதித்திடு வேனடா!'—என்று
தார்மன்னன் சொல்லிடப் பாகனும்—மன்னன்
வேகந் தனைப்பொருள் செய்திடான்—அங்கு
வீற்றிருந் தோர்தமை நோக்கியே,

6. 'சீறும் அரசனுக் கேழையேன்—பிழை
செய்ததுண்டோ? அங்குத் தேவியார்—தமை
நூறு தரஞ்சென் றழைப்பினும்—அவர்
நுங்களைக் கேட்கத் திருப்புவார்;—அவர்
ஆறுதல் கொள்ள ஒருமொழி—சொல்லில்
அக்கண மேசென் றழைக்கிறேன்;—மன்னன்
கூறும் பணிசெய வல்லன்யான்—அந்தக்
கோதை வராவிடில் என்செய்வேன்?'

### துரியோதனன்

7. பாகனுரைத்தது கேட்டனன்—பெரும்
பாம்புக் கொடியவன் சொல்கின்றான்;-'அவள்
பாகனழைக்க வருகில்ள்;—இந்தப்
பையலும் வீமனை அஞ்சியே—பல
வாகத் திகைப்புற்று நின்றனன்;—இவன்
அச்சத்தைப் பின்பு குறைக்கிறேன்;—தம்பீ!
போகக் கடவைஇப் போதங்கே;—இங்கப்
பொற்றொடி யோடும் வருகநீ!'

---

## பாஞ்சாலி சபதம்: குறிப்புரை

2. சௌரியம் – வீரம். ஒவ்வுறுதல் – ஒப்பாதல், பொருந்துதல். எ உற – எவ்வகை உறும்படி.

7. பாம்புக் கொடியவன் – அரவக் கொடியை யுடையனாகிய துரியோதனன்; பாம்புக் குள்ள கொடுமையினை யுடையவன் எனவும் பொருள் தோன்றுதல் காண்க.

## வினாக்கள்

1. தான் தாயத்தினால் அடிமையாக்கப்பட்டவள் இலள் என்றற்குத் திரௌபதி கூறும் நியாயங்கள் என்ன?

2. துரியோதனன் சபையின் இழிவைப் பாஞ்சாலி எவ்விதம் சொல்லிக் காட்டுகின்றாள்?

3. துரியோதனன் தன் மீது சீறியபோது சபையோரை நோக்கிப் பாகன் மொழிந்த உரை யாது?

4. இடம் சுட்டி விளக்குக:

1. 'அறமாட்சியைக் கொன்று களிப்பரோ.'

2. 'அந்தக் கோதை வாராவிடில் என் செய்வேன்.'

## IV. பஃசுவை

### 1. களவழி நாற்பது

1. மையின்மா மேனி நிலமென்னு நல்லவள்
செய்யது போர்த்தாள்போல் செவ்வென்றாள்—
பொய்தீர்ந்த
பூந்தார் முரசிற் பொருபுன னீர்நாடன்
காய்ந்தாரை யட்ட களத்து.

2. ஓஒ வுவமன் உறழ்வின்றி யொத்ததே,
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாண்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலாய்
ஆவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

—பொய்கையார்

---

### 2. கலிங்கத்துப் பரணி

3. சாய்ந்துவிழுங் கடகளிற்றி னுடனே சாய்ந்து
தடங்குருதி மிசைப்படியுங் கொடிக டங்கள்
காந்தருடன் கனலமளி யதன்மேல் வைகுங்
கற்புடைமா தரையொத்தல் காண்மின்!
காண்மின்!

4. பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
போர்முகத்தி லெவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே யெங்கே யென்று
பயிரவியைக்கேட்பாளைக்காண்மின்! காண்மின்!

—சயங்கொண்டார்

---

### 3. சீவக சிந்தாமணி

5. யானையுள் அரசன்றன் அணிகிளர் வலமருப்பீர்ந்
தூனமில் ஒளிர்செம்பொன் பதித்தொளி.
மணியழுத்தி
வான்மண முறச்செய்த மங்கல மணிச்சீப்புத்
தான்முகில் சுழிமதிபோல் தன்னுரை நீக்கினளே.

—திருத்தக்க தேவர்

---

## 4. சுப்பிரமணிய பாரதி

['தமிழன் இதயம்' என்ற கவித்தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது இப்பகுதி. ஆசிரியர் சென்னை அரசவைப் புலவர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை யவர்களாவர். எளிய நடையில் இனிய கவிகளை ஆக்கும் இருபதாம் நூற்றாண்டுப் புலவர் இவர்.]

1. சுப்ரமண்ய பாரதியை நினைத்திட் டாலும்
சுதந்தரத்தின் ஆவேசம் சுறுக்கென் றேறும்;
இப்ரபஞ்சம் முழுதுநமக் கினமா யெண்ணும்;
'இந்தியன்நான்' என்றிடுநல் லிறுமாப் புண்டாம்;
எப்பெரிய காரியமும் எளிதாய்த் தோன்றும்;
எல்லையற்ற உற்சாகம் எழுந்து பொங்கும்;
ஒப்பரிய தமிழனென்ற உவகை ஊறும்;
உள்ளமெலாம் துள்ளியெழும் ஊக்கம்
உண்டாம்.

2. படித்தறியா மிகவேழைக் கிழவ னேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பா னாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்
தொளைமிகுந்த கந்தலுடைச் சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றென் றார்த்து
அடித்துரைத்(து) ஆவேசங் கொள்வா னென்றால்
அப்பாட்டின் பெருமைசொல யாரே வல்லார்.

3. பாலொழுகும் சிறுகுதலை மகனைப் பார்த்து
'படையெடுத்தார் பகையாளர்; மகனே நீபோய்
வேலொழுகும் போர்க்களத்தில் வெல்வா யன்றேல்
வெம்படையை மருமத்தில் வாங்'கென் றேவும்
சீலமிகும் பெண்மணிகள் திகழ்ந்த நாட்டைச்
சிற்றடிமைக் கொப்பிவிற்றுத் தின்றீ ரென்று
தாலுழுது பறைசாற்றித் தமிழ்ப்பா வோதித்
தட்டியெழப் பாரதியார் தாமே செய்தார்.

## 5. கூவிளி

1. கலைக்காடு நம்பள்ளி நினைமின்கள்!
கருத்தினிலே கலையுணர்ச்சி கொண்மின்கள்,
கலையுணர்ச்சி துளியளவுந் தோன்றிவிட்டால்
கடலளவாய்ச் செய்துவிட முனைமின்கள்,
மலையாய நூலையெலாம் கல்லிவந்து
மற்றொருநூல் மாண்புடனே செய்மின்கள்,
தலையாய சித்திரங்கள் தீட்டிவைத்துத்
தாய்மொழியை யுடன்கொண்டு சேர்மின்கள்!

2. வள்ளுவன்போல் பாரதிபோல் வாரீரோ,
வண்ணமிகு பாட்டுபல தாரீரோ,
கள்ளமிலாக் காந்தியைப்போல் நேருவைப்போல்
காசினியில் முன்னடந்து காட்டீரோ,
பிள்ளைமன ஏசுபிரான் பண்ணிவைத்த
பிழையற்ற வழிதனிலே செல்லீரோ,
தள்ளைமனத் தந்தையவன் தரணியோர்க்குத்
தன்னுயிரைக் கொடுத்ததனை யுள்ளீரோ!

3. தெள்ளுதமிழ்க் கலைமணமே வெளிநாட்டுத்
தெருவிலெலாம் வீசுவகை செய்யீரோ,
உள்ளபல வெளிநாட்டுக் கலைகளெலாம்
ஊர்வந்து சேரவகை காணீரோ,
உள்ளரவம் ஒன்றின்றி வயல்வெளியில்
உழுதுமிகப் பயிர்செய்து காட்டீரோ,
எள்ளளவும் மடிவின்றித் தமிழ்நாட்டை
எப்படியும் ஏற்றிவிட மாட்டீரோ!

—பொன்னு. ஆ. ச.

---

### பல்சுவை: குறிப்புரை

**களவழி நாற்பது:** சேரமான் கணைக்காலிரும் பொறைக்கும் சோழன் செங்கணானுக்கும் கழுமலம் என்ற ஊரின்கண் போர் நிகழ்ந்தது. சோழன் வென்றனன். அப்போர்க்களத்தைப் பற்றிய நாற்பது வெண்பாக்களைக் கொண்டது இந்நூல். இதன் ஆசிரியர் பொய்கையார்.

1. மை இல் – குற்றம் இல்லாத. செய்யது – சிவந்த போர்வை. செவ்வென்றான் – செந்நிறத் தோற்றம் காட்டினான். போர்க்களத்துக் குருதியால் பூமி செந்நிற மாயிற்று.

2. மா – குதிரைகள். குதிரைகளால் உதைத்துத் தள்ளப்பட்ட குடைகள், பசுக்களால் கீழ்மேலாக உதைக்கப்பட்ட காளாம்பிகளை ஒத்தன.

**கலிங்கத்துப் பரணி:** முதற் குலோத்துங்கனின் கலிங்க வெற்றியைப் பற்றிப் பாடுவது இந்நூல். இப்போரினை நடத்தி வெற்றி கொணர்ந்தவன் கருணாகரத் தொண்டைமான். பாடியவர் சயங்கொண்டார்; 12-ஆம் நூற்றாண்டினர். பரணி என்பது தமிழிலுள்ள தொண்ணூற்றாறு பிரபந்த வகைகளுள் ஒன்று. இப்பாடல்கள் இரண்டும் 'களம் பாடியது' என்னும் பிரிவினுள் வருவன. கலிங்கப்பேய் பிற பேய்களுக்குப் போர்க் களத்தைக் காட்டுகின்றது.

3. கடம் களிறு – மத யானை. தடம் குருதி – பெரிய இரத்த வெள்ளம். கொடிகள் + தங்கள் = கொடிகடங்கள். கனல் அமளி – நெருப்பாகிய படுக்கை.

4. 'பொருவான் தடம் கை' என மாறுக. பரு வயிர – பருத்து வலிமை மிகுந்த. 'கையெங்கே, மார் பெங்கே, தோளெங்கே' எனப் புலம்புதலால் அவற்றை அவள் காணப் பெறாமல் தலையை மாத்திரம் கண்டனள் என்க.

**சீவக சிந்தாமணி:** தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று சீவக சிந்தாமணி. இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர் என்பவர். பாடமாக வந்துள்ள செய்யுள் இலக்கணையாரிலம்பகம் என்னும் பகுதியிலுள்ளது.

5. இலக்கணை என்ற பெண்ணின் கூந்தலை வாரி முடிக்க அவள் தோழி யொருத்தி தந்தச் சீப்பொன்றனை அதன் உறையினின்றும் எடுப்பது முகிலினின்று கழியும் மதிபோல்வது எனப் புலவர் பாடுகிறார். வலமருப்பு – வலப்பக்கத்துத் தந்தம். முகில் சுழி மதி – முகிலினின்றும் கழியும் நிலா.

## வினாக்கள்

1. களவழி நாற்பது, கலிங்கத்துப் பரணி: குறிப்பு வரைக.

2. 'மையின்மா மேனி நிலமென்னும் நல்லவள் செய்யது போர்த்தாள் போல் செவ்வென்றான்' – பொருள் கூறி விளக்குக.

3. 'உவமன் உறழ்வின்றி ஒத்த' வகையினை வரைக.

4. கலிங்கப் போரில் சாய்ந்து வீழ்ந்த கொடிகளின் காட்சி எவ்வாறு கூறப்பட்டது?

5. கணவனை இழந்தவள் பயிரவியிடம் யாது கேட்டனள்?

6. 'முகில் சுழி மதி' – பொருள் தந்து விளக்குக.

7. பாரதியாரின் பாட்டுக் குள்ள ஆற்றல்கள் இத்தகைய வென வரைக.

8. 'கூவிளி' என்னும் பகுதிச் செய்யுட்களை ஒரு கட்டுரையாக விரிக்க.

# உரைநடை: பொதுப் பகுதி

*காந்தியடிகள்

## 1. பெற்றோர்ப் பேணல்

திருவாரூர் திரு. வி. கலியாண சுந்தரனர்

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன் நற்ருள் தொழாஅ ரெனின்" என்ருர் திருவள்ளுவனுர். கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் என்பது அம் மறை மொழியின் கருத்து. கடவுளோ மாற்ற மனங் கடந்து நிற்பவர்; மண் புனல் தீ வளி ஒளி திங்கள் ஞாயிறு உயிர் என்னும் எட்டு மூர்த்தியாய் யாண்டும் நீக்கமற நிற்பவர். இவரை எப்படித் தொழுவது?

### அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

முதல் முதல் காணுங் கடவுளராகக் காட்சி யளிப்பவர் நம்மை ஈன்ற தாய் தந்தையர். அவர் வழியே பின்னை முயற்சியால் யாண்டுமுள்ள இறைவனை வழிபடுதல் கூடும். இக்கருத்துப் பற்றியே சான்ரேர் "தந்தை தாய்ப்பேண்" என்றும், "தந்தைதாய் பணித்தல் செய்யுந் தவமலால் தவம் வேறில்லை" என்றும் கூறிப் போந்தனர்.

### தாய்

தாய் தந்தை என்னும் இருவருள் தாயே சிறந்தவள். "ஈன்ருளி லென்ன கடவுளு மில்" என்ருர் ஒரு பெரியார். இவ்வுலகில் தாயன்புக்கு ஒப்பாகவாதல் உயர்வாகவாதல் பிறிதொருவர் அன்பிருக்குங்கொல்! கடவுள் அன்பிற்கு அடுத்த படியில் நிற்பது தாயன்பே. "தாயினும் நல்ல சங்கரன்," "தாயிற் பெரிய தயாவுடைய தம்பெருமான்," "பால் நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப்

---

*இக்கட்டுரை 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. வெளியிட்டோர்: சாது அச்சுக்கூடம், சென்னை.

பரிந்துநீ" என வருஉந் . தமிழ்மறை 'மொழிகளைக் காண்க.

"விளையும் பயிர் முளையில் தெரியும்" என்பது பழமொழி. காந்தியடிகளின் இளமை வாழ்வு பின்னே அவரது பெருவாழ்விற்குக் கால் கொண்டது. காந்தி யடிகள் தம்மை ஈன்ற அன்னையாரைத் தெய்வமாகவும், அவர் மொழியை மறை மொழியாகவும் போற்றிவந்தார். தமக்குத் தவறு என்று தோன்றும் ஒன்று, தாயார்க்கு அவ்வாறு தோன்றா தொழியுமேல், அடிகள் தாய்மைச் சொல்வழி நிற்கவே ஒருப்படுதல் வழக்கம்.

## தீண்டாமையும் அன்னையாரும்

காந்தியடிகள் பிறந்த குடியுங் குலமும் பழைய கண் மூடி வழக்க ஒழுக்கங்க ளெல்லாந் திரண்டு உருண்ட ஒரு கூட்டம். அக்கூட்டத்தார் தீண்டாமையைத் தெய் வம் போலக் கொள்பவர். அவரிடைத் தீண்டாமை ஒழிக் கப் போந்த தோன்றல் தோன்றினார். தீண்டாமை பாவம் என்னும் உணர்வு இளமையிலேயே காந்தியடிகள் உள்ளத்தில் இயல்பாகவே அரும்பி இருந்தது. அவர் தமது வீட்டுத் தோட்டி யுகன் என்பானைத் தொடுதல் பாவமாகாது என்று தம்மை ஈன்ற தெய்வத்தோடு வாதஞ் செய்வாராம். ஆனால் அவர் தாயார் விருப்பத் துக்கு மாறுபட்டு நடந்த தில்லை. "நான் தீண்டாதாரை தீண்டுத லுண்டு. அதை நான் தாய் தந்தையர்க்கு மறைத் துப் பேசுவ தில்லை. அத்தீட்டைப் போக்குவதற்குச் சுருங் கிய ஒரு வழி முஸ்லிமைத் தொடுவது என்று என் அன்னையார் சொல்வார். அன்னையார் மாட்டு எனக்குள்ள அன்பு காரணமாக யான் அவ்வாறு செய்வது வழக்கம். ஆனால் அதை ஒரு சமயக் கடனாகக் கொண்டு யான் செய்தே னில்லை" என்று காந்தியடிகளே மொழிந்திருத் தல் காண்க. இஃது அவரது இளமையில் சத்தியாக் கிரக உணர்வே அரும்பாத காலத்தில் நிகழ்ந்தது. அன்னையா ருள்ளம் புண்படும் வழியில் அடிகள் நடந்த தில்லை. 'காந்தியடிகள் ஈன்றார் சொல்லுக்கு என்றும்

எங்குங் கட்டுப்பட்டு நடந்துவந்தார் என்பதை வலி யுறுத்த அவரது வாழ்வில் நேர்ந்த சில நிகழ்ச்சிகளை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன்.

## புலாலும் அன்னையாரும்

காந்தியடிகள் குலம் புலால் உண்ணுத பெருமை வாய்ந்தது. அடிகட்குப் புலால் சுவை தெரியாது. ஒரு தீய நண்பன் "புலால் உணவு கொள்வதால் வெள்ளைக்காரர் பருத்து உயர்ந்து திடமாக இருக்கிருர். அத்திடங்கொண்டு அவர் நமது நாட்டையும் பற்றிக் கொண்டார். அவரைத் துரத்திச் சுயராஜ்யம் பெற வேண்டுமாளுல் அவரைப்போலப் புலால் உணவு உண்டு கொழுத்தல் வேண்டும்" என்று நாளடைவில் அடிகட்கு அறிவுறுத்தி அவரை மயக்கிப் புலால் உண்ணுமாறு செய்தான். காந்தியடிகளும், "சுவை கருதிப் புலால் உண்டேனில்லை; சுயராஜ்யங் கருதி யுண்டேன்" என்று எழுதியிருக்கிருர். மாலை வேளையில் சிறுவர்களோடு சேர்ந்து புலால் உணவு விலாப் புடைக் கக் கொள்ளுதலால் வீட்டில் அடிகள் அடிக்கடி இரவு உணவு கொள்ளா தொழிந்தார். அவ்வப்போது அவர் அன்னையார், "ஏன் சாப்பாடு வேண்டா என்று மறுக் கிருய்" என்று கேட்கும் வேளையில் "அம்மணி! பசி யில்லை" என்று நம் ஐயர் உரைப்பாராம். இப்பொய் யுரை அடிக்கடி அடிகள் மனத்தைக் கொந்திக் கொந்திக் கொன்றது. "அந்தோ! பொல்லாப் புலால் உணவு ஈன்ருர்மாட்டும் பொய்கூறத் தூண்டுகிறதே, என் செய்வது" என்று அன்னையார்பால் பொய்கூற மன மொழாது புலால் உண்பதை நம் மெய்யர் நிறுத்தி விட்டார். "புலாலை வேறு காரணம்பற்றி விட்டே னில்லை. அன்னையார்பால் பொய்யுரைக்க மன மொழாமை கண்டு அதை விடுத்தேன்" என்று காந்தி யடிகள் தமது வரலாற்றில் வரைந்திருக்கிருர். ஈன்ரு ரிடம் பொய் கூறலாகாது என்னும் உறுதி காந்தி யடிகட்கு இளமையிலேயே ஏற்பட்டது.

முட்டை

அடிகள் இங்கிலாந்தி லிருந்தபோது உணவைப் பற்றிப் பல நூல்களை ஆராய்ந்தார். அவ்வாராய்ச்சியாலும் சிலர் அறிவுறுத்தலாலும் முட்டையில் உயிரில்லை என்னும் முடிவிற்கு வந்து அதை உண்ணத் தொடங்கினார். ஆங்கு ஊன் உண்ணாத பலரும் முட்டையை மட்டும் உண்பது வழக்கம். முட்டை உயிரற்ற பொருள் என்பது அவர்தம் கொள்கை. ஒருநாள் காந்தியடிகட்கு ஓர் ஐயம் தோன்றிற்று. அடிகள், "முட்டையில் உயிருண்டா இல்லையா என்று ஆராய்ந்து உண்மை கண்டு அதை உண்ணும் உரிமை பெற நான் யார்? முட்டையிலும் உயிருண்டு என்னும் நம்பிக்கை தாயார்க்கு உண்டு என்பது எனக்குத் தெரியும். அவர் கருத்துவழி நோக்கின் முட்டையும் புலாலின்பாற் பட்டதே" என்று தெளிவுற்று முட்டை உண்பதை ஒழித்தார். ஈன்றவரை ஏமாற்ற அடிகள் மனச்சான்று இடந்தர வில்லை. ஆராய்ச்சியாளர் கருத்தினுந் தாயார் கருத்துக்கே அதிக மதிப்பு அடிகள் ஈந்தார். நீண்ட தூரத்திருந்தும் நீண்ட நாளாகியும் தாயார்முன் கூறிய உறுதிமொழி காக்குந் தவ நெறி நின்றவர் நம் பெருமான்.

துளசி மணி

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தபோது அவர் பல கிறிஸ்துவ நண்பரைப் பெற்றார். அவருள் ஒருவர் அன்பர் கோட்டஸ் என்பவர். இவரும் அடிகளும் சமயங்களைப்பற்றிப் பெரும் வழக்கிடுவ துண்டு. ஒரு நாள் அன்பர் கோட்டஸ், "இவ்வளவு ஞானம் பேசுந் தாங்கள் தங்கள் கழுத்தில் துளசி மணியை அணிந்திருப்பதென்னை? அஃதெனக்குப் பிடிக்கவில்லை. இம்மூட நம்பிக்கை தங்கட்குத் தகாது. அதைத் தாருங்கள் அறுத் தெறிகிறேன்" என்று மணியைக் கேட்டார். அடிகட்குத் தாயார் நினைவு எழுந்தது. அந்நாளில் தாயார் உயிருடனு மில்லை. அவர் இவ்வுலக வாழ்வு

நீத்துப் பல ஆண்டுகளாயின. ஆயினும் அடிகள் ஈன்ற அன்னையாரை மறந்தாரில்லை. அவர் அன்பர் கோட்டலைப் பார்த்து, "இஃது என் தாயாரால் அணியப்பட்டது. தாயாரின் அன்புக்கொடையென்று மிகப் புனிதமாக இம்மணியைப் போற்றி வருகிறேன். அதன் உட்பொருள் எனக்குத் தெரியாது. அதை அணியாவிடின், அதனால் கேடு விளையும் என்று நான் நம்புகிறேனில்லை. அன்னையாரால் அணியப்பெற்ற ஒன்றை வலிந்து அறுத்தெறிய என் மனம் ஒருப்பட வில்லை. அது தானே அறுந்து விழுந்தால் புதிய தொன்றை யான் அணியேன்" என்று சொற்றனர். தாயாரிடம் காந்தியடிகள் கொண்டிருந்த அன்புக்கு இன்னுஞ் சான்றுகள் வேண்டுங்கொல்!

அடிகள் தந்தையாரிடமும் அன்பு பூண்டு அவரை வழிபடுதலுண்டு. அவர் தந்தையார்க்குப் பலதிறப் பணி விடைகள் செய்வார். தந்தையார் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தபோது அடிகள் தந்தையார்க்குக் கைகால் பிடித்தல் முதலிய தொண்டுகளை அன்புடன் நிகழ்த்தி வந்ததாக அவரது வரலாறு அறிவிக்கிறது. அடிகள் தந்தையாரை இளமையில் தெய்வமாகப் போற்றினார் என்பதற்கு ஈண்டொரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுவதே சாலும்.

## சுருட்டும் திருடும்

தீ நட்புக் காரணமாக அடிகள் இளமையில் சுருட்டுக் குடித்தல் பயின்றார். சுருட்டுக்குக் காசு கிடைப்பதில்லை. வேலைக்காரன் காசை அடிகள் திருடுவது வழக்கம். ஒருமுறை அவர் தமது உடன்பிறந்தார் கைக் காப்பில் ஒரு சிறு பொற்றுண்டு வெட்டி விற்றுக் கடனடைத்தார். இன்னோரன்ன மறச்செயல்கள் நிகழ்த்தியபோதெல்லாம், அடிகளை மனச்சான்று ஒறுத்துக்கொண்டே வந்தது.

நன்மனமுடையரார் சிறு குற்ற மிழைப்பினும் அவர் மனமே அவரை ஒறுக்கும். அவ்வொறுத்தலைப்

பொருட்படுத்தாது வாழின்.மனிதன் நாள்டைவில் இரு கால் விலங்காவன்.

முறையீடு

காந்தியடிகள் குற்றங் குறித்து வருந்தி வருந்தி முடிவில் அக்குற்றத்தைத் தந்தையார்பால் முறையிட்டே தீரல் வேண்டு மென்று அதை ஒரு கடிதத்தில் பொறித்துத் தந்தையாரிடந் தந்தார். தந்தையார் அது கண்டு கண்ணீர் உகுப்பதை அடிகள் நோக்கித் தாமுங் கண்ணீருங் கம்பலையு மானார். அதைப்பற்றி அடிகள் தமது "சத்திய சோதனை"யில்,

> "தந்தையாரிடங் கடிதத்தைக் கொடுத்த வேளையில் எனது உடல் நடுங்கிற்று அவர் கடிதத்தைப் படித்தபோது அவர் கண்களில் நீர் முத்து முத்தாகச் சொட்டிற்று. கடிதமும் நனைந்தது. சிறிது நேரம் கண்ணை மூடிச் சிந்தனையி லிருந்தார்; பின்னை விழித்துக் கடிதத்தைக் கிழித்தெறிந்தார். அக்காட்சி எனது மனத்தையும் உருக்கிற்று. . . . . என் தந்தையார் கண்ணீர் என் மன மாசைக் கழுவிற்று. அவ்வன்பு நிலை எவர்க்கே தெரியும்? அநுபவித்தவர்க்கன்றோ தெரியும்? அன்று அந்நிகழ்ச்சியில் தந்தையாரின் அன்பைக் கண்டேன்; இன்று அதன்கண் அஹிம்சையின் நுட்பத்தைக் காண்கிறேன். மன்னிக்குந் தன்மை இயல்பாக என் தந்தையார்பால் ஏற்பட்ட தன்று. அவர் சினந்து கடுஞ்சொல் பகர்வா ரென்று எண்ணினேன்; நெற்றியில் அடித்துக்கொள்வா ரென்று எதிர்பார்த்தேன். அவரது பொறுமை எனக்கு வியப்பூட்டிற்று. இதற்குக் காரணம் யாது? யான் எனது குற்றத்தை மறையாது முறையிட்டதே. மன்னிப்போரிடம் குற்றத்தைக் கரவாது வெளியிடுவதோடு, மீண்டும் அக்குற்ற

*மிழைப்பதில்லை என்று உறுதி கூறுவது கழுவாய் தேடுவ தாகும்"*

என்று எழுதியிருக்கிறார்.

இவ்வுரைகளால் காந்தியடிகள் தந்தையார்பால் கொண்டிருந்த அன்பு நனி விளங்குகிறது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் முதுமொழிக்குக் காந்தியடிகள் வாழ்வு ஓர் இலக்கியமாக மிளிர்வதை அன்பர்கள் உணர்வார்களாக.

காந்தியடிகள் வாழ்விலுள்ள இச்சில குறிப்புக்களும் மனிதராக விரும்புவோர்க்குப் பெருந்துணை செய்வனவாம்.

---

## குறிப்புரை

*மாற்ற மனங் கடந்து – சொல்லையும் நினைவையும் கடந்து. புனல் – நீர். ஒருப்படுதல் – துணிதல், சம்மதித்தல். ஒறுத்துக்கொண்டே – கடிந்து கொண்டே. கழுவாய் – பிராயச் சித்தம்.*

## வினாக்கள்

1. இறைவர் யாண்டும் எவ்வெவ் வடிவில் நிறைந்துள்ளார்?

2. யாண்டும் நிறைந்த இறைவனை எப்படித் தொழுவது?

3. காந்தியடிகளின் உள்ளத்தில் இளமைதொட்டே தீண்டாமை அரும்பியிருந்தது என்பதனைப் புலப்படுத்துக.

4. அடிகளார் புலாலைத் தொட்ட காரணத்தையும் அதனை விட்ட காரணத்தையும் கூறுக.

5. அடிகளார் முட்டை யுணவை எவ்வாறு விடுத்தார்?

6. "அது தானே அறுந்து விழுந்தால் புதிய தொன்றை யான் அணியேன்" – இடம் காட்டுக.

7. "செய்த குற்றத்துக்குக் கழுவாய் தேடுதல் பிழை யுணர்ந்து முறையீடு செய்தல்" என்பதனை காந்தியாரின் அனுபவம் ஒன்றால் உறுதி செய்து காட்டுக

---

## 2. *கடிதம் : தம்பிக்கு

டாக்டர் மு. வரதராசனர்

அன்புள்ள எழில்,

நீ எழுதிய கடிதங்கள் எனக்கும் சுவையாக இருந்தன. அன்னைக்கு எழுதிய கடிதங்களை அண்ணன் எப்படிப் பார்த்தான் என்று நீ எண்ணி வியப்பு அடையலாம். உன் கடிதங்கள் அன்னைமட்டும் அல்லாமல் அண்ணனும் படிக்க வேண்டிய கடிதங்கள் தாம்.

அன்னையைக் கேட்டுத்தான் படித்தேன். "எழில் எழுதியவை" என்று அவற்றை எல்லாம் ஒரு கட்டாகக் கட்டி அன்னை பீரோவில் வைத்திருந்தார். "இது என்ன அம்மா?" என்று கேட்டேன். உன் கடிதங்கள் என்று சொல்லி, "நீயும் படிக்கலாமே" என்ருர். பிறகு தான் படித்துப் பார்த்தேன். நீ ஒன்றும் கவலைப் படாதே. நானும் உன் கருத்து உடையவனே. நீ வயதில் இளையவன். அஞ்சாமல் உன் கருத்தைச் சொல்லுகிருய்; எழுதுகிருய். நான் உன்னைவிட உலக அனுபவம் மிகுந்தவன்; அதனுல் உலகத்தைப்பற்றிய அச்சமும் மிகுந்தவன். ஆகையால் எதையும் சொல்லவும் எழுதவும் தயங்குகிறேன்; நீ உள்ளத்தில் உணர்ந்ததைக் கொட்டுகிருய்; நான் உணர்ச்சி இல்லாதவன்போல் நடிக்கிறேன். இதுதான் வேறுபாடு. நீயே என்னைவிட ஒரு வகையில் நல்லவன்.

நல்லவனுக இருந்தால் மட்டும் போதாது. வல்லவனுகவும் இருக்கவேண்டும் அல்லவா? நன்மை வன்மை இரண்டும் இருந்தால்தான் இந்த உலகில் வாழ்க்கை உண்டு. நல்ல தன்மை மட்டும் உடையவர்கள் எத்தனையோ பேர் கலங்கிக் கண்ணீர் வடித்து மாய்ந்திருக்கிருர்கள்; மாய்ந்துவருகிருர்கள், வல்லமை மட்டும் பெற்றவர்களும் எதிர்பாராத வகையில் நசுக்

*இது 'தம்பிக்கு' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது

குண்டு அழிகிறார்கள். குடும்பங்கள் முதல் நாடுகள் வரையில் இதற்குச் சான்றுகள் காணலாம். தமிழ் நாட்டில் இருந்த பழங்காலத்து நல்லரசுகள் கலங்கி அழிந்ததை வரலாறுகளில் காண வில்லையா? ஜெர்மனி, ஜப்பான் முதலான வல்லரசுகள் அழிவுற்றதைக் கண் கூடாகக் காணவில்லையா? நல்ல மருமகளாக வந்து வாழத் தொடங்கிக் குடும்பத்தாரின் இன்னலைப் பொறுக்க முடியாமல் தற்கொலையாலோ மன வேதனையாலோ மாண்ட கதைகளை ஊர்களில் கேட்ட தில்லையா? மகனை யும் மருமகளையும் விருப்பம்போல் ஆட்டி வைத்து வல்லமை பெற்ற மாமியார், சில ஆண்டுகளுக்குப்பின் வாயும் கையும் அடங்கி மூலை வீடும் வேளைக் கஞ்சியும் கிடைத்தால் போதும் என்று ஏங்கும் கதைகளையும் கேட்டதில்லையா? இந்த விதியை நாம் இனியும் மறந்து வாழக் கூடாது. தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்து தனித்தனியாகவும் குடும்பம் குடும்பமாகவும் நாடு நாடாகவும் அழிந்தது போதும். இனிமேல் வல்ல வர்களாகவும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப்பெற்று வாழ வேண்டும்.

தம்பி! இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கைப் பகுதிகளில் ஒன்றைமட்டும் போற்றுகிறவன் உருப்படியாவ தில்லை. உடலை மட்டும் போற்றி உரமாக வைத்திருப்பவனும் அழிகிறான். அவனுடைய உள்ளம் அவனுக்குப் பகை யாகி அவனைத் தீய வழியில் செலுத்திக் கெடுத்து அழிக் கிறது. உள்ளத்தைமட்டும் தூய்மையாகப் போற்றிக் காப் பாற்றுகிறவனும் இடைநடுவே அல்லல்படுகிறான். அவ னுடைய உடல் பல நோய்க்கிருமிகளுக்கு இடம் கொடுத்து அவனுடைய உள்ளத்தில் அமைதியைக் கெடுத்து அல்லல்படுகிறது. உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வான ளாவ உயர வேண்டியதாக இருக்கலாம்; ஆனால் தான்

வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது; வானைப் புறக்கணித்துக் கிளைகளை உயர்த்தாமல் வாழவும் முடியாது. இந்த உண்மையை நன்ருக உணர்ந்தவர் திருவள்ளுவர். அறநெறியும் வேண்டும், பொருள் வளமும் வேண்டும், இன்ப வாழ்வும் வேண்டும் என்று உணர்த்தும் நூல் திருக்குறள்தான். அறத்தை நினைந்து பொருளை மறக்கும்படியாகத் திருவள்ளுவர் கூறவில்லை. பொருளையோ இன்பத்தையோ போற்றி அறத்தை மறக்கும்படியாகவும் அந்தப் பெருந்தகை கூறவில்லை. உலகத்து நூல்களில் பல அறம் பொருள் இன்பம் மூன்றில் ஒவ்வொன்றை மட்டுமே வலியுறுத்தி யிருப்பதைக் காணலாம். வாழ்க்கையின் பல பகுதிகளையும் போற்றி வாழவேண்டும் என்பதை உணர்த்தவந்த திருவள்ளுவர் இந்த மூன்றையும் தெளிவுறுத்தி யுள்ளார். தமிழராகிய நாம் திருவள்ளுவரைப் பெற்றிருக்கிருேம்; திருக்குறளைப் பெற்றிருக்கிருேம். நம்மில் சிலர் அந்த நூலைக் கற்றும் இருக்கிருேம். ஆனல் திருவள்ளுவர் கூறியபடி வாழவில்லை. நல்ல தன்மை தேடுகிருேம்; வல்லமை தேடவில்லை. அதனுல்தான் தாழ்வுறுகிருேம்.

நீ உடனே இதை மறுக்க முன்வரக்கூடும். அதற்கு முன்பே நான் காரணம் சொல்லி விளக்கி விடுகிறேன்.

தமிழ் நல்ல மொழிதான்; ஆனல் அதை வல்ல மொழியாக ஆக்கினேமா? பெரும்பாலோர் போற்றும் மொழியாக ஆக்கினேமா? இன்று எதை எடுத்தாலும் மக்கள் தொகையே வல்லமையாக வைத்துப் பேசப்படவில்லையா? தமிழ் மொழிக்கு அறிவுக் கலைகளில் செல்வாக்குத் தந்தோமா? நீதி மன்றங்களில் உரிமை நல்கினேமா? ஆட்சிக் கூடங்களில் வாழ்வு வழங்கினேமா? இல்லையானுல் வெறும் பேச்சு ஏன்?

வல்லமை இல்லாத நல்ல தன்மை வாழாது தம்பி! அது பொருட்பால் இல்லாத திருக்குறள் போன்றதுதான்.

நம் முன்னோர் இதை மறந்த காரணத்தால்தான் எத்தனையோ இழந்தனர். ஒன்று சொல்லட்டுமா?

தமிழ்க்கலை நல்ல கலைதான். அதிலும் யாழிசை நல்ல இசைதான். ஆனால் வாழ்ந்ததா? இல்லை. ஏன்? முன்னே செல்வாக்கைப் பெற்றவர்கள் யாழைப் புறக் கணித்தார்கள்; பிறகு பொது மக்கள் மறந்தார்கள். இன்று தமிழுக்கும் ஏறக்குறைய அதே நிலை இருப்பதை எண்ணிப்பார்; உன் மனம் புண்படும்.

நீ இதை மறுக்கலாம். அன்று அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் என்ற நிலைமை இருந்ததை நீ எடுத் துக் காட்டலாம். இன்று பொது மக்கள் எவ்வழி அவ்வழியே ஆட்சியாளர் என்று எடுத்துக் கூறலாம்.

இப்படி உன்னை நீ ஏமாற்றிக் கொள்ள வேண்டா என்றுதான் உனக்குச் சொல்லுகிறேன். பொது மக்க ளின் விருப்பம்போல் ஆட்சி நடப்பதாகச் சொன்னால், பொது மக்கள் போரை விரும்புகிறார்களா, அணுகுண் டையும் பிற குண்டையும் விரும்புகிறார்களா, வேலை யில்லாத் திண்டாட்டத்தை விரும்புகிறார்களா, குடியிருக்க வீடும் அறிவு வளர்க்கக் கல்வியும் உடல் வளர்க்கக் கஞ்சியும் இல்லாத கொடிய வறுமையை விரும்புகிறார் களா என்று மெல்ல எண்ணிப்பார். உனக்கே தெரியும்.

பொதுமக்களுக்குத் தங்கள் எதிர்காலத்தையும் நிகழ்காலத்தையும் சேர்த்து எண்ணித் தேவையை உணர இன்னும் தெரியவில்லை. அவர்கள் களி மண்ணைத் திரண்டு கிடக்கிறார்கள். யார் யாரோ நீர் சேர்த்துப் பிசைந்து தமக்கு வேண்டியவா றெல்லாம் உருவங்களைச் செய்துகொள்கிறார்கள்.

சரி, நீ சொல்லுகிறபடியே பார்ப்போம்.. இன்று ஆட்சி எல்லாம் ஓட்டுப் போடும் மக்களின் கைகளைப் பொறுத்தது என்று வைத்துக்கொள்வோம். அவர்கள் ஓட்டுப் போடும்போது தங்களைப்பற்றியாவது, தமிழ் நாட்டைப்பற்றியாவது, தமிழைப்பற்றியாவது கவலைப்

படுகிறார்களா? அவர்கள் கவலைப்படாத நாடும் மொழியும் யாருடைய வல்லமையை நம்பி வாழ முடியும்? வறுமையால் வாடும் அறிஞர் சிலருடைய துணைமட்டும் போதுமா?

நான் சொல்கிறபடியும் கொஞ்சம் பார். களிமண் பிசைகிறவர்களின் கைகளாவது நாட்டையும் மொழியையும் பற்றிக் கவலைப்படுவது உண்டா? அவர்களை மாற்றுவதற்காக அல்லது அவர்களுடைய மனத்தில் நல்லெண்ணம் ஏற்படுவதற்காக நீயும் நானும் ஏதாவது செய்தோமா? ஒன்றும் செய்யாமல், தமிழ் நாடும் தமிழும் வாழ்ந்துவிடும் என்று எண்ணிக்கொண்டு காலம் கழிப்பது குற்றம் அல்லவா? மறைந்துபோன அந்த யாழைப்பற்றிப் பழங்காலத்துப் பாணரும் விறலியரும் பொருநரும் கூத்தரும் நம்மைப்போல்தான் ஏமாந்த எண்ணம் எண்ணிக்கொண்டு, நல்லவர்களாக வாழ்ந்திருக்க வேண்டும். அந்த யாழின் அருமை பெருமைகளைமட்டும் எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அதை வாழ வைக்கும் வல்லமைபற்றி அவர்கள் எண்ணத் தவறினார்கள். அதனால்தான் அந்த அருமையான கருவி அழிந்தது. அதை நினைத்துப் பார்க்கவும் இன்று ஒரு விபுலாநந்தர் தேவையாகி விட்டது.

தம்பி! மேடையில் முழங்குவதைக் கொஞ்ச காலம் நிறுத்தி வைத்தாலாவது, இதை எண்ணிப் பார்க்க ஒரு வாய்ப்பு உண்டாகும் என்று எனக்குச் சில வேளைகளில் தோன்றுகிறது. இது பைத்தியக்கார எண்ணமாக உன் போன்ற இளைஞருக்குத் தோன்றலாம். ஆனால் அனுபவத்தால் சொல்லுகிறேன்; மேடை மகிழ்ச்சி நமக்குக் கடமை மறதியை உண்டாக்குகிறது. சிறந்த பேச்சு, நல்ல கைத்தட்டு இரண்டும் சேர்ந்தால் உணர்ச்சித் தணிவு, அடுத்த நிலையாகப் பழைய பிற்போக்கு வாழ்வு—இவைதாம் இதுவரையிலும் கண்டவை. நம்மை எண்ணித்தான் திருவள்ளுவர் சொன்னாரோ என்னவோ தெரியவில்லை. நமக்காகவே

சொன்னதுபோல உள்ளது அந்தக் குறள். நம்மைப் பற்றி நாமே மகிழ்ந்து அந்த மகிழ்ச்சியில் மயங்கி யிருக்கும்போது, கடமையைப் புறக்கணித்துக் கெட்டழிந்தவர்களை நினைத்துக்கொள்ள வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னது எவ்வளவு பொருத்தம்! மேடைப் பேச்சைக் கேட்டுக் கைத்தட்டுவோரைக் காணும்போதெல்லாம் "இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக" என்ற அந்தக் குறள் என் நினைவுக்கு வந்து விடுகிறது, என்னை அறியாமல்.

தம்பி! இன்றைய உலகம் வல்லமை மிகுந்த மாமியார்போல் உள்ளது. நம் அருமைத் தமிழகம் மிக நல்ல மருமகளாக உள்ளது. ஆனால் தற்கொலையோ மனவேதனையோ எதிரே வந்து நிற்காதவாறு காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. என் கருத்தில் எந்தப் பகுதியாவது உனக்குத் தெளிவில்லாமல் இருந்தால் அதைக் குறித்து எழுது; தெளிவுபடுத்துவேன். ஏதாவது உனக்கு உடன்பாடு இல்லாமல் கருத்து வேறுபாடாக இருந்தால் எண்ணிப்பார்; அல்லது விட்டுவிடு. நான் என்ன செய்வேன்? நீ எவ்வளவு உண்மையாக உணர்கிறாயோ, அவ்வளவு உண்மையாகவே நானும் உணர்கிறேன். இந்தத் தமிழகத்தில் நாம் இருவராவது ஒன்றுபடமுடியாதா, பார்ப்போம்.

உன் அன்புள்ள,
வளவன்.

---

விஞக்கள்

1. நன்மையுடன் வன்மையும் வேண்டும் என்பதனை ஆசிரியர் எவ்வாறு வற்புறுத்துகிறார்?

2. "இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்" – என்ன பாடம்?

3. "வாழ்க்கையின் பல பகுதிகளையும் போற்றி வாழவேண்டும்" என்பதனை வள்ளுவர் கருத்தோடு ஒட்டி விளக்குக.

4. "பொருட்பால் இல்லாத திருக்குறள்" – இவ்வுவமை எதற்கு ஆளப்பட்டது?

5. "பொதுமக்கள் களிமண்ணாய்த் திரண்டு கிடக்கிறார்கள்" என்ற கூற்றை விளக்குக.

6. மேடை முழக்கத்தைப் பற்றி ஆசிரியர் யாது கூறுகின்றார்?

7. "இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக" – இம் மேற்கோளை ஆசிரியர் ஏன் கொள்கிறார்?

---

மொஹெஞ்சோ—தரோ

# 3. இடுதலும் சுடுதலும்*

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

## சுடுதல்

சிந்து வெளி மக்கள் இறந்தாரை என் செய்தனர் என்பது மொஹெஞ்சொ-தரோ ஆராய்ச்சியைமட்டுங் கொண்டு திட்டமாகக் கூறுதற்கில்லை. ஹரப்பா ஆராய்ச்சியையும் உளங்கொண்டு நோக்கின், சில விவரங்களை அறியலாம். எனினும், இத்துறைக்குரிய ஆராய்ச்சிப் பொருள்கள் எகிப்திலும் சுமேரியாவிலும் கிடைத்தன போலப் பேரளவு சிந்து வெளியிற் கிடைத்தில. மொஹெஞ்சொ-தரோவில் சமாதியோ, இடுகாடோ கிடைத்தில. ஆயின், சந்துகளில், வீடுகட்கு அடியில் நீர் அருந்தும் குவளைகட்குள் இருந்த எரித்த சாம்பலும் எலும்புத் துண்டுகளும் ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவற்றை நோக்க, சிந்து வெளி மக்கள் இறந்தார் உடலை எரித்துச் சாம்பலையும் எலும்புகளையும் சேமித்துப் புதைத்துவந்தனர் என்பது தெளிவாகிறது. இப்பழக்கம் இன்றும் ஹிந்துக்களிடை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## இடுதல்

ஹரப்பாவில் கிடைத்த சவக் குழிகளில் இரண்டு மூன்று அடுக்குகள் உண்டு. மிகவும் அடியில் இருந்த சவக் குழிகளில் பிணங்களை நேராகப் படுக்க வைத்துக் கைகளை மார்பின்மீது மடக்கி வைத்துப் புதைத்துவந்த

---

*இக்கட்டுரை "மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்து வெளி நாகரிகம்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. 'திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக' வெளியீடு.

லார் என்பது தெரிகிறது. நிலத்திற் கடியில் புதைக்கப் பட்ட உடல்கள் மூன்று வகையாக அடக்கம் செய்யப் பட்டுள்ளன: (1) சில உடல்கள் தனித்தனியே இடம் விட்டுப் புதைக்கப்பட்டுள்ளன; (2) சில நெருக்கமாகப் புதைக்கப்பட்டுள்ளன; (3) சில ஒன்றன் கீழ் ஒன்ருகப் புதைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிணங்களைப் புதைக் கும் பழக்கம் பலுசிஸ்தானத்திலும் பெருவழக்குடைய தாக இருந்தது. அவ்வுடல்களின் அருகில் நீருடைய மட்பாண்டங்கள், கோப்பைகள், தட்டுகள், இறந்தார் பயன்படுத்திய பிற பொருள்கள் முதலியன புதைக் கப்பட்டன. இப்பழக்கம் சுமேரியாவிலும் எகிப் திலும் சிறப்பாக இருந்துவந்தது. இதே பழக்கம், புதுக்கோட்டை ஆதிச்சநல்லூர் முதலிய தமிழ் நாட்டுப் பகுதிகளிற் கிடைத்த தாழிகளைக் கொண்டு, தமிழ் நாட்டி லும் இருந்த தெனத் துணிந்து கூறலாம்.

## ஈரானியர் பழக்கம்

மேல் அடுக்குகளிற் கிடைத்த சவக் குழிகளில் தனித்தனி உடற்பகுதிகளும் எலும்புகளும் புதைக்கப் பட்டன போலும்! இங்ஙனம் உடற்பகுதிகளைப் புதைத்து வந்தவர், முன் சொல்லப்பட்டவரினும் வேருனவராதல் வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இங்ஙனம் உடற்பகுதிகள் புதைக்கப்பட்ட மட்பாண்டங்கள் ஹரப் பாவில் நூற்றுக்கு மேலாகக் கிடைத்துள்ளன. ஆயின், இவற்றில் உள்ள மண்டை ஓடுகளையும் பிற எலும்புகளை யும் காண்கையில், உடற்பகுதிகளைக் கழுகு நரி முதலிய வற்றிற்குப் போட்டுச் சதைப் பகுதிகள் தின்னப்பட்ட பிறகு, எலும்புகளை மட்பாண்டங்களில் இட்டுப் புதைத்து வந்தனர் என்பது தெரிகிறது. இப்பழக்கம் பாரசீகரி டமே செல்வாக்குப் பெற்ற தாதலின், ஈரானியர் ஹரப்பா வில் குடியேறி இருந்தனர்; அந்நகர மக்களுள் ஈரானிய ரும் ஒரு பகுதியினராக இருந்தனர் என்பதை அறிய லாம்.

## தாழிகள் மீது ஓவியங்கள்

இத்தாழிகள் எல்லாம் ஓவியங்கள் தீட்டப் பெற்றன. ஒவ்வொன்றிலும் விதவிதமான ஓவியங்கள் காணப்படுகின்றன. ஒரு தாழியின் கழுத்தருகில் கருடப் பறவைகள் இரண்டு வரிசைகளில் பறப்பன போலத் தீட்டப்பட்டுள்ளன. அவ்வரிசைகட்கு இடையே இலைக்கொத்துடன் காணப்படும் தொட்டிகள் அணியணியாக வைக்கப்பட்டுள்ளன. பிற தாழிகள் மீது, செம்படவன் வலை போட்டு மீன் பிடிப்பது போலவும், மீன், ஆமை, பறவைகள், இலைகள் முதலிய பல பொருள்களைப் போலவும் சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன.

## மயில்கள் தெய்விகத் தன்மை பெற்றவையா?

அக்கால மக்கள் மயில்களைத் தெய்விகச் சிறப்புடைய பறவைகளாக மதித்தனர் என்பது தெரிகிறது. இம் மயில்களின் துணையைக் கொண்டு மனிதர் ஆவிகள் மேல் உலகம் போவன என்பதை அக்காலத்தவர் எண்ணி வந்தனர்போலும்! அன்றிச் சூக்கும உடலே மயிலாக உருவகப்படுத்தப்பட்டதோ, அறியோம். ஒரு தாழிமீதுள்ள சித்திரங்களில் மூன்று மயில்கள் பறப்பது போலத் தீட்டப்பட்டுள்ளன. அம்மயில்கட்கு இடையிடையே விண்மீன்கள் வரையப்பட்டுள்ளன. ஆதலின் "மயில்கள் சூக்கும உடல்களைக் குறிப்பன; அவை மேலுலகத்தை அடைவதாகப் பண்டையோர் எண்ணினர்" என்று ஆராய்ச்சியாளர் அறைகின்றனர். சில தாழிகள் மீது சிறிய மயில்கள் அணியணியாக இருப்பனபோல ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. வேறு சிலவற்றின் மீது ஐந்து மயில்கள் பறப்பனபோலக் காணப்படுகின்றன. சில தாழிகள்மீது காணப்படும் மயில்களின் தோகை திரிசூலம்போலக் காணப்படுகிறது. சில மயில்களின் தலைமீது இரண்டு கொம்புகளும் அவற்றுக்கு இடையில் நிமிர்ந்த மலர்க் கொத்தும் காணப்படுகின்றன.

### பறவைமுக மனித உருவங்கள்

சில தாழிகள்மீது பறவை மூக்குப்போன்ற நீண்ட மூக்குகளையுடைய மனித உருவங்கள் காணப்படுகின்றன. இவை, மயில்கள் வரையப்பட்ட கருத்துக் கொண்டே வரையப்பட்டன வாகலாம். அஃதாவது சூக்கும உடம்பைச் சுமந்து செல்லும் வன்மை வாய்ந்தவை யாகலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். ஒரு தாழிமீது பறவை மூக்குடைய மனித உருவம் தீட்டப் பட்டுள்ளது. அவ்வுருவம் இடக்கையில் அம்பும் வில்லும் வைத்துள்ளது. அதன் இருபுறமும் இரண்டு எருதுகள் நிற்கின்றன. அவ்வெருதுகளைக் கயிறு கொண்டு கட்டி, அவற்றின் கயிற்றை மனித வுருவம் தன் வலக்கையில் பிடித்துள்ளது. இடப்புற முள்ள எருதை நாயொன்று துரத்தி வந்து வாலைப் பிடித்துக் கடித்து இழுக்கிறது. நாய்க்குப் பின், தலைமீது கொம்பு முளைத்த மயில்கள் இரண்டு பறக்கின்றன. அவற்றிற்கு அருகில் பெரிய வெள்ளாடு ஒன்று நிற்கின்றது. அதன் கொம்புகள் எட்டுத் திரிசூலங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. வெள்ளாட்டிற்கும் பிற உருவங்கட்கும் இடையில் இலைகளும் விண் மீன்களும் வரையப்பட்டுள்ளன. இங்ஙனம் பல உருவங்கள் தீட்டப் பெற்ற சித்திரம், "காலன் உயிரைக் கவர்ந்து செல்வதைக் குறிப்பதாகலாம்" என்று அறிஞர் கருதுகின்றனர். பறவை முகத்தைக் கொண்ட மனித உருவங்களைத் தீட்டும் பழக்கம் பண்டைக் கிரேக்கரிடமும் மெசொபொட்டேமியரிடமும் இருந்தது குறிப்பிடத் தக்கது.

### தாழிகளுட் பல பொருள்கள்

இறந்தவர் அணிந்திருந்த அணிகளும் பயன் படுத்திய பாண்டங்களும் பிற பொருள்களும் உணவுப் பொருள்களும் தாழிகளில் இருந்து எடுக்கப்பட்டன. இவற்றை எல்லாம் இறந்தவர் சாம்பலுடன் தாழிகளில் இட்டுப் புதைத்துவிடல் அப்பண்டை மக்கள் மரபு என்பது வெளியாகிறது. தாழிகளில் சூளையிடப்பெற்ற

மண் அப்பங்கள் கிடைத்ததைக் குறிப்பாகக் கூறலாம். பல தாழிகளில் தங்க நகைகள் அகப்பட்டன; நவரத்தி னங்கள் கிடைத்தன. இங்ஙனம் தாழிகளில் இறந்தார் அணிகளைப் புதைத்தல் பண்டை மேற்குப் புறநாடுகளி லும் இருந்துவந்த பழக்கமே ஆகும்.

**உடன் இறக்கும் வழக்கம்**

ஒரு பிணக் குழியிற் கிடைத்த முத்திரை ஒன்றில், கட்டில்மீது மங்கை ஒருத்தி சாய்ந்துகொண்டு இருப் பதுபோல உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இதனால் இறந்த ஆடவனுக் குரிய மனைவி கணவனுடன் இறக் கும் வழக்கம் அக்காலத்தில் இருந்திருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். "இறந்தவர் அடுத்த வாழ்க் கையில் இப்பிறவியில் இருந்தவாறே இருக்க விழைந்த னர்; அவ்விழைவாற்றான் மனைவியும் உடன் இறந்த வளாதல் வேண்டும்" என்று எண்ணுகின்றனர்.

**முடிவு**

மொஹெஞ்சொ-தரோ, ஹரப்பா ஆகியன சிறந்த நாகரிகமும் செல்வப் பெருக்கமும் உடைய நகரங்கள்; வாணிபப் புகழ் பெற்ற நகரங்கள். ஆதலின், அவற்றில் பல நாட்டு மக்கள் குடிபுகுந் திருந்தனர்; அவரவர் தத்தம் நாட்டுப் பழக்கத்திற்கேற்ப இறந்தார் உடலைப் புதைத்தும், எரித்தும், நாய் நரிகட்கு இட்டும் வந்தனர் என்பதை ஹரப்பாவிற் கிடைத்த புதை குழி விவரங்களால் நன்கு அறியலாம். இப்பலவகை அடக்க முறைகளை இன்றும் சென்னை, கல்கத்தா, பம்பாய் போன்ற வாணிபப் பெருக்கமுடைய நகரங்களில்—பல நாட்டு மக்கள் உறைகின்ற நகரங்களில்—காணலாம். எனினும் சிந்து வெளி மக்கட் கேன்றே சிறப்பாக இருந்த பழக்கம் இடுதலும் சுடுதலுமே என்பதை ஹரப் பாவிற் கிடைத்த முழுவுடல் புதை முறையாலும் (அவையே ஆழத்தில் புதைக்கப்பட்டவை), மொஹெஞ்சொ-தரோவில் வீடுகட்டகடியில் கிடைத்த சாம்பல் கொண்ட மட்கலங்களாலும் நன்கறியலாம்.

மேலும், சிந்து வெளி மக்கள் மறுபிறவி உணர்ச்சியுடைய வராக இருந்தனர் என்பதும் அறியத் தக்கது.

---

### வினாக்கள்

1. மொஹெஞ்சோ–தரோ, ஹரப்பா என்று சொல்லப்படுவன யாவை?
2. ஹரப்பாவில் நிலத்திற்கடியில் எவ்வெவ் வகைகளில் உடல்கள் புதைக்கப்பட்டிருந்தன?
3. ஈரானியர் ஹரப்பாவில் குடியேறி யிருந்தனர் என்பதனை எவ்வாறு வலியுறுத்தலாம்?
4. தாழிகள் என்பன யாவை?
5. தாழிகளின் மீது தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் இவை யென எழுதுக.
6. மயில் ஓவியத்திலிருந்து பெறப்படுகின்ற உண்மைகள் யாவை?
7. தாழிகளுள் காணப்படும் வேறு பொருள்கள் யாவை? அதனால் பெறப்படுவது யாது?
8. மனைவி கணவனுடன் இறந்தாள் என்றதற்குச் சான்று தருக.
9. மொஹெஞ்சொ–தரோ ஹரப்பா என்ற இடங்களில் இறந்தாரை அடக்கம் செய்யும் முறைகள் எவை? அவை பலவாக இருந்ததற்குக் காரணம் என்னை?

---

# 4. குமரி நாடுபற்றிய தமிழ்நூற் குறிப்புக்கள்*

கா. அப்பாத்துரைப் பிள்ளை அவர்கள், எம்.ஏ., எல்.டி.

இன்றைய தமிழ் நாடு திருவேங்கடம் முதல் கன்னியா குமரி வரை பரந்து கிடக்கின்றது. இதில் இன்றைய அரசியல் பிரிவு முறைப்படி ஏறக்குறையப் பத்துக் கோட்டங்கள் (ஜில்லாக்கள்) அடங்கியுள்ளன. ஆனால், முன் நாட்களில் தமிழ் நாட்டின் பரப்பு இதனி னும் பன்மடங்கு மிகுதியாக இருந்த தென்று கொள்ளச் சான்றுகள் பல உள்ளன.

மிகப் பழைய இலக்கணங்களிலும், நூல்களிலும், உரைகளிலும் குமரி முனைக்குத் தெற்கே நெடுந் தொலை நிலமாயிருந்தது என்றும், அந்நிலப் பகுதி பல்லூழிக் காலம் தமிழ் நாட்டின் ஒரு கூறாயிருந்து, பின் படிப்

---

* நூல்: 'குமரிக்கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு' திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

படியாகக் கடலுள் மூழ்கிவிட்ட தென்றும் ஆசிரியர்கள் உரைக்கின்றனர்.

இப்பரப்பிலிருந்த நாடுகள், அரசுகள், மலைகள், ஆறுகள் ஆகியவற்றைப்பற்றிய குறிப்புக்களும், விவரங் களும் சிலப்பதிகாரம், புறநானூறு முதலிய பழைய நூல் களில் காணப்படுகின்றன. ஆங்கிருந்த மலைகளுள் குமரி மலை ஒன்று என்றும், ஆறுகளுள் குமரி பஃறுளி இவை தலைமையானவை என்றும் தெரிகின்றன.

இந்நாடு தமிழகத்தின் ஒரு பகுதி மட்டு மன்று; தமிழரினம், தமிழ் நாகரிகம் என்பவற்றின் தாயகம் என்றே கூறவேண்டும். ஏனெனில், தமிழைத் தொன்றுதொட்டு வளர்த்த சங்கங்கள் மூன்றனுள், தலைச் சங்கம் நடைபெற்ற தேன் மதுரையும் இடைச் சங்கம் நடைபெற்ற கவாடபுரமும் இக்குமரிப் பகுதியி லேயே இருந்தன.

எனவே, தலைச்சங்க காலமாகிய முதல் ஊழியிலும் இடைச்சங்க காலமாகிய இரண்டாம் மூன்றும் ஊழி களிலும் இக்குமரிப் பகுதியிலேயே தமிழர் ஆட்சியும் நாகரிகமும் மொழி வளர்ச்சியும் ஏற்பட்டன என்பதும், தெற்கிலிருந்து கடல் முன்னேறி வரவர அவர்கள் வடக்கு நோக்கிப் பரந்து சென்றனர் என்பதும் விளங்கு கின்றன.

தமிழ் நூல்களில் மூன்று கடல்கோள்களைப்பற்றித் தெளிவான குறிப்புக்கள் காணப்படுகின்றன.

முதல் கடல்கோளால் பஃறுளியாறும் குமரிக்கோடும் கடலில் கொள்ளப்பட்டன. பஃறுளி யாற்றின் கரையி லிருந்த தென் மதுரையே பாண்டியன் தலைநகரமும் தலைச்சங்க மிருந்த இடமும் ஆகும். இக்கடல்கோள் நிகழ்ந்த காலத்திருந்த பாண்டியனே நெடியோன் என்று புறநானூற்றிலும், நிலந்தரு திருவிற் பாண்டியன் என்று தோல்காப்பியப் பாயிரச் செய்யுளிலும் குறிக்கப்பட்டவ னவன்.

கடல்கோளின் பின்னர் இவன் வடக்கே போய்க் கவாடபுரத்தைத் தலைநகராக்கிக் கொண்டான். இங்கே தான் இடைச் சங்கம் நடைபெற்றது.

தலைச் சங்க நாட்களில், பஃறுளி யாற்றிற்கும் குமரி யாற்றிற்கும் இடைப்பட்ட பகுதி, அளவிலும் சிறப்பிலும் பாண்டி நாட்டின் மிகச் சிறந்த பாகமாயிருந்திருக்கவேண்டும். அது 49 நாடுகளாக வகுக்கப்பட்டிருந்த தென்றும், இரண்டு ஆறுகட்குமிடையே 700 காவத அளவு அகன்று கிடந்த தென்றும் அறிகிறோம்.

இரண்டாவது கடல்கோளால் கவாடபுரம் கடல் கொள்ளப்பட்டது. அதன்பின் சிலகாலம் மணலூர் பாண்டியன் தலைநகராக இருந்தது. பின் மூன்றும் முறைக் கடல்கோளால் அம்மணலூரும், குமரியாறும் அழியவே, பாண்டியன் மதுரை வந்து அங்கே கடைச் சங்கத்தை நிறுவினான்.

சிலப்பதிகாரத்தில் மாடலன் குமரியாற்றில் நீராடிய தாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், கதை முடிந்ததன் பின் எழுதப்பெற்ற பாயிரத்தில் தொடியோள் பௌவ மெனக் குமரி கடலாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விரு காலப் பகுதிகளுக்கிடையே, அஃதாவது கோவல னிறந்து சில நாட்களுக்குப் பின்னுகக் குமரியாறு கடல் கொள்ளப்பட்டுக் குமரிக்கடலாயிற்று என்பர் பேராசிரியர்.

குமரியாறு கடலுள் அமிழ்ந்த காலத்தை ஒட்டியே மணிமேகலையுட் கூறப்பட்டபடி காவிரிப்பூம் பட்டினம் கடல் வயமானது. வங்காளக் குடாக் கடலில் உள்ள சில பெரிய தீவுகளும் இதனுடன் அழிந்திருக்க வேண்டும். "நாகநன் னாட்டு நானூறியோசனை வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்," என்றது காண்க.

இதனோடு, மேற்குத் தொடர்ச்சி மலை இன்று கடலிருக்கும் இடத்திலும் தொடர்ந்து கிடந்த தென்றும் ஆண்டு அதற்கு மகேந்திரம் என்பது பெயர் என்றும் வட நூல்கள் கூறுகின்றன. இராமாயணமும்

அனுமான் கடல் தாண்டியது மகேந்திர மலையிலிருந்தே யென்றும், அது பொதிகைக்கும் கவாடபுரத்திற்கும் தெற்கில் இருந்த தென்றும் விவரித் துரைக்கின்றது.

முருகன் சிவன் முதலிய தமிழ்த் தெய்வங்கள் மகேந்திர மலையில் உறைந்தனர் என்றே தமிழர் முதலில் கொண்டனர். கடல்கோளின்பின் அவர்களது இடம் அன்றைய தமிழ் நாட்டின் வடக்கில் இருந்த மேலைத் தொடர் என்று கொள்ளப்பட்டு, வடமலை ஆயிற்று. நாளடைவில் வடமலை என்பதே மேரு என்றும் கயிலை என்றும் கருதப்பட்டது. சிவதருமோத்தரத்தில் குறிப்பிட்டுள்ள உன்னதத் தென் மகேந்திரம் இதுவே என்க.

திருவாசகத்தில்,

"மன்னு மாமலை மகேந்திர மதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்"

என்று இதனையே மணிவாசகப் பெருந்தகையார் ஆகமங்களருளிய இடமாகக் குறிப்பிடுகின்றனர்.

தமிழ் நாட்டின் தென்கரை மட்டு மன்று, அதன் கீழ்க்கரையும் இலங்கையுங்கூடப் பல சிறு கடல் கோள்களுக்கு உட்பட்டன என்று தோன்றுகின்றது. வடமொழி வான நூலார் தமது உலக நடுவரை[1]யை இலங்கையில் ஏற்படுத்தினர். ஆனால், இன்று அஃது இலங்கை வழிச் செல்லாமல் கடலூடு செல்வதிலிருந்து, அந்த இடம் முன்பு இலங்கையைச் சார்ந்த தென்று உய்த்துணரக் கிடக்கின்றது.

மேலும் கேள்வி யறிவால் தென் இந்தியாவைப் பற்றி எழுதும் மேகஸ்தனிஸ்[2] என்ற கிரேக்க அறிஞர் இலங்கையைத் தாப்பிரபனே[3] என்று கூறுவதுடன் அஃது இந்தியாவினின்று ஓர் ஆற்றினால் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியிருக்கின்றார். இதிலிருந்து தாமிரபரணி என்ற பொருநையாறு கடலுள் மூழ்கிய நிலத்தின் வழியாக இலங்கையூடு சென்றிருக்க வேண்டும் என்றேற்படும்.

---

[1] Meridian. [2] Megasthanes. [3] Taprabane.

கந்தபுராணத்தில் சொல்லப்படும் வீரமகேந்திரம் இலங்கையின் தெற்கே பல கடல்கோள்களுக்குத் தப்பிக் கிடந்த ஒரு சிறு தீவே யாகும்.

கிழக்குக் கரையில் காவிரிப்பூம் பட்டினமே யன்றி வேறு பல தீவுகளும் அழிந்தன என்று மேலே கூறினோம். புதுச்சேரிக்கு மேற்கே பாகூர்ப்பாறையி லுள்ள கல்வெட்டில் அது கடலிலிருந்து நாலு காதம் மேற்கே இருப்பதாகக் குறிப்புக் காணப்படுகிறது. ஆனால், இன்று அது கடலிலிருந்து ஒரு காதமே விலகி யிருப்பதால் கடல் 3 காதம் உட்போந்த தென்பது விளங்கும்.

சீகாழி, தோணிபுரம் என்றழைக்கப்படுவதும், மதுரைவரை ஒருகால் கடல் முன்னேறிவர, பாண்டியன் வேல் எறிந்து அதனை மீண்டும் சுவறச் செய்தான் என்ற திருவிளையாடற் கதையும், கன்னியா குமரியில் இன்று உள்ள மூன்று கோயில்களுள் ஒன்று கடலுள் மூழ்கி அழிந்துகொண்டிருப்பதாகச் சொல்லப் படுவதும் தமிழ் நாட்டுள் கடல் பலகால் புகுந்து அழிவு செய்த தென்பதைக் காட்டுவன வாகும்.

தலை யிடை கடைச் சங்கங்களில் இன்னின்ன புலவர்கள் இருந்தனர், இன்னின்ன நூல்கள் செய்தனர், இன்ன இலக்கணம் கையாளப்பட்டது என்ற விவரங்கள் இறையனாரகப் பொருளுரையிலும், பிற நூல்களிலும் கூறப்படுகின்றன.

கடல்கோள்கள் காரணமாகவும், போற்றுவாரற்றும் அந்நாளைய நூல்களுள் பல இறந்துபட்டன. கடைச் சங்கப். புலவர்கள் காலத்திலும், ஏன், பிந்திய நாட் புலவர்கள் காலத்திலுங்கூட, இவற்றுள் பல நூல்கள் முழுமையாகவோ பகுதி யளவிலோ நிலவியிருந்தன. என்பது அவர்கள் குறிப்புக்களாலும் மேற்கோள்களாலும் அறியக் கிடக்கின்றது.

இங்ஙனம் தலைச்சங்க இடைச்சங்க நூல்கள் மிகுதி யாக அழிந்துபோக, நமக்கு இன்று மீந்துள்ளது

தோல்காப்பியம் என்ற இலக்கண நூலொன்றே யாகும். அகத்தியம் முதலிய வேறு பல நூல்களுக்கு மேற்கோள்கள் வாயிலாகச் சிலச் சில பாக்களோ அல்லது குறிப்பு வாயிலாகப் பெயர் மட்டிலுமோ கிடைக்கின்றன.

ஆன்றோர் உரையும் முன்னோர் மரபும் இங்ஙனம் தெளிவாகச் சங்கங்களது வரலாற்றையும் குமரி நாட்டின் மெய்ம்மையையும் வலியுறுத்துகின்றன. ஆயினும் இக்காலத்தார் சிலர் இவற்றை ஐயுறத் தொடங்குகின்றனர். இந்நூல்களில் சங்கங்கள் நடைபெற்றதாக் கூறும் கால எல்லை ஆயிரக்கணக்காயிருப்பதும் அவை தரும் நூற்பட்டிகையுள் பெரும்பாலன இன்று காணப் பெருமையுமே இவ்வையப்பாட்டிற்குக் காரண மாவன.

தமிழ் நாகரிகத்தின் தொன்மையைக் கணித்தறிவார்க்கு இச்சங்க வாழ்வின் எல்லை அவ்வளவு நம்பத் தகாத தன்று. இன்றுவடநாட்டில் ஹரப்பா[1] மொஹெஞ்சொ-தாரோ[2] முதலிய இடங்களில் கண்ட கல்வெட்டுக்களால் தமிழர் நாகரிகம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரேயே இந்திய நாடு முழுமையும் பரவியிருந்தது என்பது புலனாகின்றது.

அதோடு அவற்றைப்பற்றிய குறிப்புக்கள் காலத்தாலும் இடத்தாலும் பிரிக்கப்பட்ட வேறு வேறான பல நூல்களிலும் ஒன்றுக்கொன்று முரணாகாமல் பொருத்தமாகவே கூறப்பட்டிருக்கின்றமையும், தமிழ் நூல்களேயன்றி வடநாட்டு நூற் குறிப்புக்களும், பண்டைய கிரேக்க அறிஞர்தங் குறிப்புக்களும் சங்க வரலாற்றைப் பல இடங்களில் வலியுறுத்துகின்றமையும்,தற்கால மேனாட்டு ஆராய்ச்சி யுரைகளும், கண்கூடான பல நடைமுறை யறிவுகளும் சேர்ந்து இச்செய்தி வெறும் புனைந்துரை யன்று, மரபு வழக்காக வந்த மிகப் பழமையான தொரு செய்தியே என்பதை மெய்ப்பிக்கும்.

[1] Harrappa. [2] Mohenjo-Daro.

வடமொழிச் சான்றுகளுட் சிலவற்றை முன்பே குறிப்பிட்டுள்ளோம். அவற்றுள் மறக்கக் கூடாத தெளிவான சான்று முதல் கடல்கோள் பற்றியதாகும். அக் கடல்கோள்களுக்குத் தப்பி நின்று திரும்பத் தமிழ் நாகரிகத்தை நிலைநாட்டிய நிலந்தரு திருவிற் பாண்டியனைத் திராவிட நாட்டரசனாகிய சத்திய விரதனென்றும், அரசமுனி என்றும், மனு என்றும் வடநூல்கள் பலவாறாகக் கூறின.

ஊழி வெள்ளத்தினின்றும் தப்பி அவனது பேழை தங்கிய இடம் பொதிகை மலை ஆகும். இதனையே வடமொழியாளர் மலயமலை என்பர். இஃது அன்றையப் பாண்டியன் பெரும்பகுதிக்கும் வடக்கே இருந்ததால் வடமலை என்னப்பட்டுப் பின் பெயர் ஒற்றுமையால் மேருவுடன் வைத்தெண்ணப்பட்டது.

இவ்வெள்ளக் கதைகள் பல புராணங்களிலும் காணப்படுபவை. அன்றியும் இராமாயணத்தில் இரண்டாம் ஊழியில் மணிகளாலும் முத்துக்களாலும் நிரம்பப் பெற்றுச் சிறப்புடன் விளங்கிய பாண்டியன் தலைநகரான கவாடபுரத்தைப்பற்றியும், மகாபாரதத்தில் அதன்பின் மூன்றாம் ஊழியில் தலைநகராயிருந்த மணலூரைப்பற்றியும் விவரிக்கப்பட்டிருப்பதுங் காண்க.

இங்ஙனம் இயற்கைச் சான்றுகளும், தென்மொழி வடமொழி மேற்கோள்களும் ஒரே முகமாக நிலைநாட்டும் இவ்வுண்மையை எளிதில் மறுக்கவோ, புறக்கணிக்கவோ இயலாது.

---

### குறிப்புரை

ஊழி – பல்லாயிர வாண்டுகளாம் காலம். கடல் கோள் – கடல் பொங்கி அதனால் நிலம் கொள்ளப்படுவது. பல் + துளி = பஃறுளி. கோடு – மலை. பாயிரம் – ஆக்கியோன் பெயர் முதலியவற்றோடு நூலுக்கு அமைக்கப்படும் முகவுரை.

## வினாக்கள்

1. குமரி நாடு என்று பெயர் பெறுவது எது?

2. குமரி நாட்டில் விளங்கிய சிலையாய மலையும் ஆறுகளும் எவை?

3. தென்மதுரையும் கவாடபுரமும் எங்குத் திகழ்ந்திருத்தல் வேண்டும்?

4. நெடியோன் என்று வழங்கப்பட்ட பாண்டியனைப் பற்றித் தெரியுமளவுக்கு வரைக.

5. பஃறுளி யாற்றிற்கும் குமரியாற்றிற்கும் இடைப்பட்டிருந்த நிலப் பகுதியைப் பற்றி அறியக் கிடக்கும் உண்மைகள் யாவை?

6. தமிழ்ச் சங்கம் மதுரைக்கு வந்த வரலாறு யாது?

7. சிலப்பதிகாரத்தில் பாயிரத்தாலும் நூலாலும் குமரியினைப் பற்றி அறிவன யாவை?

8. வடநூலார் வகுத்த நடுவரையை ஆதாரமாக்கி, இலங்கையின் ஒரு பகுதி கடலால் கொள்ளப்பட்டது என்பதனைக் காட்டுக.

9. குறிப்பு வரைக: மகேந்திரம், தாப்பிரபனே, பாகுர்ப்பாறை, தொல்காப்பியம்.

10. "கடல் கோளும் தமிழ் நாடும்" -- என்னும் பொருள்பற்றி ஒரு கட்டுரை வரைக.

---

உதயணன்

# 5. சூழ்ச்சியும் மீட்சியும்*

ம. ரா. மாணிக்கம் அவர்கள், எம். ஏ.

## மாய யானை

உதயணனைச் சிறைப்படுத்தல்பற்றிப் பிரச்சோதனன் அமைச்சர்களைக் கலந்து சிந்தித்தான்.

---

*இக்கட்டுரை 'உதயணன்' என்ற நூலிலிருந்து கொள்ளப்பட்டது. வெளியிட்டார்: ஹ்யூகோ பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை—5.

முடிவில் சிறந்த சிற்பிகளைக் கொண்டு அரக்கு மரம் ஆகியவற்றின் உதவியால் எந்திர யானை ஒன்றைப் பெரிதாகச் செய்வித்தான். ஆயுதந் தாங்கிய வீரர்கள் பலர் அதனுள் மறைந்திருக்கவும் இடமமைத்தான். துதிக்கையிலும், நான்கு கால்களிலும் பல வகையான ஆயுதங்கள் நிரப்பப்பட்டிருந்தன. மன்னன், மதிவல்லான் சாலங்காயனை நோக்கி, "இம்மாய யானையோடு நால்வகைப் படைகளையுங் கொண்டுசென்று உதயணனைக் கைப்பற்றி வருக" என்று ஏவினான்.

## உதயணன் சிறைப்படுதல்

அமைச்சனும் நால்வகைப் படையும் தன் பின்னே வர, எந்திர யானை உதயணன் அலைந்து திரியும் காட்டிற்குள் நுழைந்து பிளிறிக் கொண்டு உலாவிற்று. சாலங்காயன் முதலியோர் பிறர் அறியாதவாறு ஓரிடத்து ஒளிந்திருந்தனர். மாய யானையும் உயிருள்ள யானைபோன்று காட்டிப் பல பிடிகள் தன்னைச் சூழ்ந்துவரப் பெருமுழக்கஞ் செய்தது. இதனைக் கண்ட வேடர்கள் இஃது உதயணன் யானையே என்று கருதி ஓடோடிச் சென்று உதயணனுக்குத் தெரிவித்தனர். உதயணன் கடலில் இட்ட மணி கையகத்துற்றாற் போன்று மிக மகிழ்ந்து கோடபதியுடன் யானையிருக்கு மிடத்தை யடைந்தான். கோடபதியை இசை கூட்டி அதில் இனிய பண் ஒன்றை இசைத்தான். மாய யானையும் இசைக்கு உருகுவது போன்று நடித்து அவன் முன் வந்து நின்றது. இதனைக் கண்ணுற்ற உதயணன் இழந்த தெய்வ யானையே இதுவெனக் கருதி மெய்ம்மறந்து நின்றான். உள்ளிருந்த போர் வீரர்கள் குதித்தோடிவந்து உதயணனை வளைத்துக் கொண்டு போர் செய்யப் புறப்பட்டனர். படைகளுடன் பின்னால் வந்த வயந்தகன் உதயணனை வளைத்து நிற்கும் வீரர்களனைவரையும் கொன்றான். இதனை யறிந்த சாலங்காயன் நால்வகைப் படைகளுடனும் வெளிப்பட்டு வந்து உதயணனைத் தாக்கினான். நடந்த போரில்

சாலங்காயனின் படை வீரர் பலர் பட்டனர். படைத் தலைவனும் இறந்தான். சாலங்காயனை வெட்டி வீழ்த்த வாள் ஓச்சிய உதயணன் அமைச்சர்களைக் கொல்லலா காது என்று அற நூல் கூறுவதை யெண்ணி அது செய்யாது நிறுத்தினன். கையில் வாளை யேந்தி உதய ணன் போர் வீரர்களோடு பொருது பலரை வாளுக்கு இரையாக்கினன். எஞ்சிய வீரர்கள் இரிந்தோடுதல் கண்டு மிஞ்சிய யானைப் படைகளையும் துமித்தான். வாள் கொண்டு யானை யொன்றை வெட்டியபோது அதன் கொம்பில் பட்டு வாள் ஒடிந்து விழுந்தது. இதனைக் கண்ட சாலங்காயன் உதயணனைச் சிறைப் பிடிக்க இதுவே ஏற்ற சமயம் என்று கருதிப் படைகளோடு வந்து அவனை வளைத்துக்கொண்டான்.

## யூகிக்கு ஓலை

உதயணன் அருகிலிருந்த வயந்தகனிடத்தில் நிகழ்ந்தவற்றை ஓர் ஓலையி லெழுதிக் கொடுத்து, அதை யூகியிடம் விரைந்து சேர்ப்பிக்குமாறு கூறி அசைவற்று நின்றுகொண்டிருந்தான். வீரர்கள் உதயணனை நெருங்கி வந்து கைகளைப் பிணித்தனர். அமைச்சன் சாலங்காயன், உதயணனைச் சிறைப்படுத்திய செய்தி யைப் பிரச்சோதனனுக்கு விரைந்து சென்று சொல்லு மாறு வீரர்களை அனுப்பினன். பிரச்சோதனனுக்கு அமைச்சனின் திறமையைப் போற்றிக் கால்களிலும் கைகளிலும் விலங்கிட்டு உதயணனைச் சிறைக் கூடத் தில் அடைக்குமாறு ஆணையிட்டான். உதயணன் வாழ்வுச் சகடம் சிறையுலகில் நகரத் தொடங்கிற்று.

## யூகியின் யூகம்

மாறுவேடம் பூண்டு உதயணன் இருக்குமிடம் அறிந்த யூகி அவனை எவ்வாறு சிறை மீட்பதெனச் சிந்தித்தான். ஒரு நாள் நள்ளிரவில் பிறர் அறியாத வாறு நக்ருட் சென்று அரசன் பட்டத்து யானை நளகிரி

இருக்கு மிடத்தைத் தேடி யடைந்தான். நளகிரி குணம் சிதைந்து மயக்க முற்று நகரை யழித்து நகர் மக்களை வருத்துமாறு அகிற் புகை யூட்டி அதற்கு மருந்தும் கொடுத்து மதவெறியை யுண்டாக்கினான். நளகிரியின் காதில் "இந்நகரை யழித்து அரசனுக்குப் பெருங் கவலையை யுண்டாக்குவதும் உதயணனைச் சிறையினின் றும் மீட்பதும் நின் கடன்" எனக் கூறியதோடு மந்திர மொன்றையும் ஓதினான்.

## நளகிரி மதவெறி கொள்ளல்

அந்நள்ளிரவிலேயே நளகிரி குணம் சிதையப் பெற்றது. மதவெறி மிகுதியால் அது கட்டுத் தறியை முறித்துக்கொண்டு வெளியே புறப்பட் டது. பாகர்கள் அடக்கவும் அடங்காதாகிப் பேரொலியு டன் தெருக்களில் ஓடிற்று. எதிர்ப்பட்ட ஆடவர், மகளிர், சிறியோர், முதியோர் அனைவரையும் துதிக் கையால் வாரி வீசிற்று. மண்டபங்களையும் மாளிகைகளை யும் கோட்டாற் குத்திச் சிதைத்தது. சந்தியிலும் சதுக் கத்திலும் நின்று போவோர் வருவோரை வழிமறித்துக் கொன்றது. வெளியில் புறப்படவே நகர மாந்தர் அனை வரும் அஞ்சினர், தெருக்களைச் சுற்றிச் சுற்றி வந்து புழுதி புறப்பட அலங்கோலப் படுத்திற்று. மைந்தரும் மகளிரும் செய்வதறியாது திகைத்தனர். இரவும் பகலும் ஓய்வின்றி நளகிரி சுழன்று சுழன்று வந்து இவ்வாறு நகரை யழித்தது.

## மன்னனின் வேண்டுகோள்

இதனை யறிந்த பிரச்சோதனன் திடீரென நளகிரி இவ்வாறு குணம் சிதைந்ததற்குரிய காரண மறியாது கலங்கினான். நளகிரியின் சினத்தை யடக்கச் செய்வ தறி யாதவர்களாகி அமைச்சர்களும் அஞ்சினர். யானைகளை அடக்கி யாள்வதில், உதயணன் வல்லவன் எனவும் அவனைக்கொண்டு அடக்குதலே தக்க தெனவும் சாலங்

காயன் கூறினன். தன்னால் சிறை பிடிக்கப்பட்டவனு டைய உதவியைத் தான் வேண்டுதல் தனது பெருமைக்கு இழுக்கு என்று பிரச்சோதனன் முதலில் கருதினான். வேறு வழி யின்மையால் பின்னர் ஒருவாறு இசைந்து உதயணனைச் சென்று அழைத்து வருமாறு சாலங்கா யனைப் பணித்தான். சாலங்காயன் வணங்கி "அரசே! முன்னர் வஞ்சனையால் உதயணனை நானே கைப்பற்றி வந்தேன், அவனிடம் நானே சென்று உதவி வேண்ட நாணுகின்றேன்" என்று கூறினன். அது கேட்ட அமைச்சன் சிவேதன் என்பவன், விரைந்து சிறைச் சாலையை யடைந்து மன்னன் வேண்டுகோளைத் தெரி வித்தான். நளகிரியின் வெறியை யடக்கி நகர மக்களை உய்வித்தால் உதயணனைச் சிறையினின்றும் விடுவித்துக் கௌசாம்பிக்கு அனுப்பி, முன்போன்றே ஆட்சி செலுத்த ஆவன செய்வதாகப் பிரச்சோதனன் கூறிய உறுதி மொழியையும் கூறினன். சிவேதன் மனதில் யாதொன்றையும் வைத்துக் கொள்ள வேண்டா வென வும் உதயணனை மன்றாடிக் கேட்டுக் கொண்டான். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' எனவுங் கூறி வேண்டினான்.

## உதயணன் நளகிரியை அடக்குதல்

உதயணன் கிடைத்த நல் வாய்ப்பை நழுவ விடக் கூடாதெனத் தெரிந்து அரசன் வேண்டுகோளுக்குத் தான் இசைவதாக அமைச்சனிடம் தெரிவித்தான். அமைச்சனும் அவனைச் சிவிகையின் மீதேற்றிப் பெருஞ் சிறப்புகளுடன் அழைத்துச் சென்று நளகிரி இருக்கு மிடத்தில் இறக்குவித்தான். உதயணன் பிரம சுந்தர முனிவர் தனக்கு ஓதியருளிய மந்திரத்தை யோதி நளகி ரியை அசைவற நிற்கச் செய்தான். கையில் யாழேந்தி பாட்டொன்றைப் பாடிக்கொண்டு அதனருகில் உதய ணன் சென்ற அளவில் நளகிரி சினந் தணிந்து "ஆணை ஆசாற்கு அடியுறை செய்யும் மாணிபோல" அவனடி

வணங்கி ஏவல் கேட்டு நின்றது. மக்கள் அனைவரும் உதயணன் திறமையைப் பாராட்டினர். வணங்கி நின்ற யானையின் மருப்பில் உதயணன் காலூன்றி ஏறி அதன் பிடரியில் இருந்து நகரின் எல்லா வீதிகளையும் சுற்றி வருவானாயினன். நகர மாந்தர் அனைவரும்,

"மன்னன் வாழ்க! வத்தவன் வாழ்க!
ஒலிகெழு நகரத் துறுபிணி நீக்கிய
வலிகெழு தடக்கை வயவன் வாழ்க!"

என வாழ்த்தினர். பிரச்சோதனனும் உதயணனைக் காண விரும்பினான். நளகிரியை நடத்திச் சென்று உதயணன் மன்னன் கோயில் முன்பு இறங்கி உட்புகுந்தான்.

பிரச்சோதனன் உதயணனை எதிர்கொண்டழைத்து இடந் தந்து இருக்கச் செய்தான். இருந்த உதயணனிடம் தான் அவனுக்குச் செய்த சிறுமையைப் பொருட்படுத்த வேண்டா வென மன்னன் கேட்டுக்கொண்டான். இளமையிலேயே கலை நலம் மலிந்த அவன் புலமையைப் பாராட்டினான். செயற்கருஞ் செயல் செய்த அவனை வரிசைகள் பலவற்றுடன் வத்தவ நாட்டிற்கு அனுப்ப இருக்கும் தனது அவாவையும் பிரச்சோதனன் தெரிவித்துக் கொண்டான். சிலகாலம் தன்னோடு இருக்க வேண்டு மெனவும் வேண்டிக்கொண்டான்.

---

குறிப்புரை

வத்தவ சேதி நாடுகளுக்கு வேந்தன் உதயணன். அவந்தி நாட்டு மன்னன் பிரச்சோதனன். கோடபதி என்பது உதயணனுக்கு ஒரு முனிவர் வழங்கிய யாழ். யூகி வயந்தகன் உதயணனின் அமைச்சர்களுள் ஒருவன். கௌசாம்பி: உதயணனின் தலைநகர்.

### வினாக்கள்

1. மாய யானை அமைந்த வகையினை வரைக.
2. உதயணன் எவ்வாறு சிறைப்பிடிக்கப்பட்டனன்?
3. உதயணனைச் சிறை மீட்க யூகி செய்த சூழ்ச்சி யாது?
4. "அவனிடம் நானே சென்று உதவி வேண்ட நாணுகின்றேன்" — இடஞ் சுட்டுக.
5. உதயணன் நளகிரியை எவ்வாறு அடக்கினன்?

---

# 6. பாரி மகளிர்*

சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

### பண்பு

பாரியின் சீர்த்தி அந்நாளிலேயே யாண்டும் பரவியிருந்தது. பாரியினிடத்திலே அழுக்காறு கொண்டிருந்த மூவேந்தரும் அவனுடைய பெண்களைத் தமக்கு மணஞ் செய்து தருமாறு கேட்டனர். பாரியோ, "ஈத்துவக்கும் இன்பம் அறியா" அம்மன்னர்கட்குத் தம் அருமைப் பெண்களை மணஞ் செய்து கொடுத்தலுக்கு மறுத்துவிட்டான். இதனால் பெரும்போர் மூண்டது. இறுதியில் பாரி வள்ளலை மூவேந்தரும் கொன்றுவிட்டனர். பாரியின் அவைக்களப் புலவராகிய கபிலர் பாரியின் பெண்களாகிய அங்கவை சங்கவை என்னும் மங்கையர் இருவரையும் அழைத்துச் சென்று திருக்கோவலூரின்கண் 'பார்ப்பனர் பாதுகாப்பில் இருத்தியிருந்தார். இச்செய்தியை ஔவையார் அறியார். அவர் தமது நோக்கப்படிப் பல விடங்களையுஞ் சுற்றிக் கொண்டு திருக்கோவலூரை யடைந்தார். பொழுது போய் இராக்காலமாக இருந்தது. பெரு மழையும் பொழிய லாயிற்று. ஔவையார் மழையில் நனைந்து ஓர் இல்லத்தை யடைந்தார். ஔவையாருடைய உடல் மழையில் நனைந்து கிடுகிடென்று நடுங்கிக்கொண்டிருந்தது. அவ்வில்லத்தில்தான் பாரியின் பெண்களும்

---

* நூல்: "தமிழ்ப் புலவர் வரிசை" (முதற் புத்தகம்): திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

இருந்தனர். ஆனல், ஔவையாரும் பாரி மகளிரும் இரவாகையால், ஒருவரை யொருவர் அறிய வில்லை. ஔவையாரைக் கண்டதும் பாரியின் மகளிர் மனம் குழைந்தது. பெருங்கொடையாளியின் பெண்களாகிய அவர்கள் உள்ளங் குழைவதற்குக் கேட்கவும் வேண்டுமா? அவ்விள நங்கையர் இருவரும் உடனே தம்மிடம் இருந்த நீலச் சிற்றுடை யொன்றை ஔவையாருக் களித்து, அவர்தம் ஈர உடையைக் களைந்து அவர் உடல் ஈரத்தையும் துடைத்துக் குளிரைப் போக்கினர்.

ஒரு காலத்தில் சேரமான் மாவெண்கோ என்பவன் ஒரு பெருவிருந்து செய்தான். அவ்விருந்துக்குப் பலர் வந்திருந்தனர். எல்லோரும் உண்டி வகைகள் படைக் கப்பட்டிருந்த இலையில் அமர்ந்தனர். ஒருவருக்கு இலை இல்லை. உட்கார்ந்திருப்பவர்களில் ஒருவரை எழச் செய் தால்தான் அதிகப்படியாக வுள்ள ஒருவருக்கு இலை கிட்டும். எவரை எழுப்பலாம் என்று சேரமான் எண்ண மிட்டான். ஔவையார் கண்ணுக்குத் தெரிந்தார். தான் அவரை அழைத்துத் தன்னுடன் இருத்திக்கொண்டால் ஓர் இலை அகப்படு மென்று முடிவு செய்தான். உடனே "ஔவையே, இங்கு வாராய்!" என்று அழைத்தான். ஔவையாரும் எழுந்து அவனிடம் சென்றார். இலை யகப்படாதிருந்தவருக்கு இலை யகப்பட்டது. சேரமான் ஔவையாரோடு அளவளாவி உடனுண்டான். சேர மானுடைய அந்த அன்புரையும் ஔவையார் உள்ளத் திலே படிந்திருந்தது. ஆனல், ஔவையாரின் குளிரைப் போக்குவதற்கு அம்மகளிர் நீலச் சிற்றுடை யளித்தகாலை அம்மங்கையருடைய தலைசிறந்த பேரன்பே ஔவையார் உள்ளத்தில் அதிக உவகையை உண்டு பண்ணிற்று. பாரி பிறரை யேவிப் பொருளைக் கவர்ந்த அன்பும், காரி களைக்கட்டளித்துப் பயணத்தைத் தடை செய்த அன்பும், சேரமான் "ஔவையே இங்கு வாராய்" என்று அழைத்த அன்பும் ஆகிய மூன்றுமே நீலச் சிற்றுடை வழங்கிய அன்பு ஒன்றுக்குத்தான் நிகராகும் என்னும் பொருளை யமைத்து,

"பாரி பறித்த கலனும் பழையனூர்க்
காரி கொடுத்த களைக்கட்டும்—சேரமான்
வாராயோ என்றழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற் றுடைக்கு நேர்"

என்னும் வெண்பாவைப் பாடினார். பாரி மகளிர் ஒளவை யாருக்கு அடிசில் படைத்து, அதற்குத் தாம் சமைத்திருந்த கீரைக் கறியைப் பரிமாறித் தம்முடைய பழைய நிலைமையையும் அப்போதிருந்த நிலைமையையும் எண்ணிப் பெரிதும் வருந்தினர். ஒளவையார் அம் மங்கையர் கீரைக் கறியைப் படைக்க நேர்ந்ததற்காக வருந்துகின்றார்களென்று உணர்ந்துகொண்டார். அம் மங்கையாரின் அன்புப் பெருக்கு ஒளவையாரைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. உடனே,

"வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறையிட்டுப்—பொய்யே
அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்
கடகஞ் செறியாதோ கைக்கு"

என்னும் அரிய வெண்பாவைப் பாடி அம்மங்கையருக்கு மகிழ்ச்சியை விளைவித்தார். சிறிது நேரத்தில் மழை நின்றது. விண் விளங்கியது. முழுத்திங்கள் பால்போல் தண்கதிர் பரப்பி ஒளிசெய்தது. உயிர்கட்கு இன்பத்தை விளைவிக்கும் அந்த நேரம் பாரி மகளிர் இருவருக்கும் துன்பத்தை விளைவித்தது. முன்னிகழ்ந்த முழுத்திங்கள் நாளையில் தங்கள் நாட்டில் தமருடன் இனிது மகிழ்ந் திருந்த வாழ்க்கை நிலைமையை அவர்கள் எண்ணியபோது அவர்களுள்ளத்தில் ஆருத் துயருண்டாயிற்று. அம்மகளிர் இருவரும் கல்வி யறிவில் மிகவுஞ் சிறந்தவர்களாதலின்,

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம்; எங்குன்றும் பிறர்கொளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எங்
குன்றுங் கொண்டார்யாம் எந்தையும் இலமே,"
(புறம், கஉஉ).

என்று ஒரு செய்யுளைப் பாடினார். அப்பாடலைக் கேட்டார் ஔவையார். அம்மங்கையர் பாரியின் பெண்கள் என்பது அப்போதுதான் ஔவையாருக்குத் தெரிந்தது. அவர் அவர்களைக் கட்டிக்கொண்டு ஓ வென்றலறி யழுதார். மங்கையரும் ஔவையாரைத் தெரிந்துகொண்டு வருந்தினர். கபிலர் இறந்ததும் ஔவையாருக்குத் தெரிந்தது. எவ்வாறேனும் அம்மங்கையர்களை அரசன் ஒருவனுக்கு மணஞ்செய்து வைக்க வேண்டு மென்று அவர் முடிவு செய்தார்.

## திருமணம்

அப்போது திருக்கோவலூரை ஆண்டிருந்த மலையமான் தெய்வீகன் என்னும் மன்னனிடம் சென்று பாரி மகளிரை மணஞ்செய்து கொள்ளுமாறு கூறினார். அவன் பாரியின்பால் மூவேந்தரும் கொண்டிருந்த பகைமையைக் குறிப்பிட்டுத், தான் அம்மங்கையரை மணந்தால் தனக்குக் கெடுதி வரு மென்று கூறி மறுத்தான். ஔவையார் மூவேந்தரையும் அங்கு வரவழைத்து அவர்களைக் கொண்டே திருமணத்தை நடத்துகின்றேன் என்று கூறினார். மூவேந்தரை வரும்படி அழைத்தற்கு முடங்கல் எழுதினார்.

### சேரனுக்கு எழுதியது

சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக உட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசன் மனமிசைந்தான்
சங்கவையை யுங்கூடத் தான்.

### சோழனுக்கு எழுதியது

புகார்மன்னன் பொன்னிப் புனலுடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடுக வருக கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டாம் நாள்.

பாண்டியனுக்கு எழுதியது

வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியவீ ரொன்பானுள்
ஈண்டு வருக இயைந்து.

ஔவையார் முடங்கலை அரசர்கள் மூவருங் கண்டனர். ஔவையாரின் அழைப்பை மறுப்பின் யாது வசை பாடுவாரோ என்று அஞ்சினர். மங்கையர்க்குத் தக்க வரிசைக ளெடுத்துக்கொண்டு விரைந்து திருக்கோவ லூரை யடைந்தனர். திருமணம் பெருஞ் சிறப்புடன் நிகழ்ந்தது. ஔவையார் மூவேந்தரையும் விருந்துண்ண வேண்டினார். அவர்களும் இசைந்தனர்; எங்கட்கு உணவுடன் பனம் பழம் பரிமாற வேண்டு மென்றனர். காலமோ பனை காய்க்கத் தொடங்கும் காலம். ஆயினும் ஔவையார் சிறிதும் திகைக்காமல் அப்படியே பரிமாறு கிறேன் என்று உடன்பட்டார். அவ்விடத்தில் பனை மரத்தின் துண்டு ஒன்று கிடந்தது. அதனை யெடுத்து நிலத்தில் நட்டு,

"திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டிய
மங்கைக் கறுகிட வந்துநின் றூர்மணப் பந்தலிலே [னும்
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து.
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனி சிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே."

என்று ஒரு செய்யுளைப் பாடினார். ஔவையார் திரு மொழி பயன்தருந் தன்மை பொருந்திய சிறந்த திரு மொழியாகையால், உடனே அப்பனந் துண்டம் வெண் குருத்துவிட்டு ஓலை வளர்ந்து காய்க்கத் தொடங்கிக் காய்த்து முற்றி மூன்று பழங்களை யுண்டாக்கிற்று. செயற்கரும் அந்தச் செய்கையைக் கண்டு மூவேந்தர் களும் மற்றும் கூடியிருந்த மக்களும் மிகுந்த இறும்பூ தெய்தினர். ஔவையார் செய்கை அரசர் மூவருக்கும் அச்சத்தையும் விளைத்தது. ஔவையார் திருமணத்

திற்கு வந்திருந்தோர் அனைவருக்கும் பெருமகிழ்ச்சி யுண்டாமாறு அரிய விருந்தளித்தார். அவ்விருந்திற்குப் பெண்ணையாறு பாலாகவும் நெய்யாகவும் பெருகி வருமாறு,

"முத்தெறியும் பெண்ணை முதுநீர் அதுதவிர்ந்து
தத்திவரு நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத்தெய் வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவிற் கொண்டோடி வா"

என்று வெண்பா ஒன்றைப் பாடினார். அவ் யாறு ஔவையார் விருப்பப்படி அவ்வாறே வந்து மக்கள் அனைவருக்கும் ஆரா இன்பத்தை யளித்தது. ஔவையார் அத்திருமணத்திற்குப் போந்திருந்த வறியவர் அனைவர்க்கும் பொருளளிக்க நினைந்து,

"கருணையால் இந்தக் கடலுலகம் காக்கும்
வருணனே மாமலையன் கோவல்—பெருமணத்து
நன்மாரி தான்கொண்ட நன்னீர் அதுதவிர்த்துப்
பொன்மாரி யாகப் பொழி"

என்று வருணனை நோக்கிப் பாடினார். உடனே ஊர் முழுவதற்கும் பொற்காசு மழை பெய்தது. எளியோர் அப்பொருளினைப் பெற்று மகிழ்ந்தனர்.

ஔவையார் தெய்வீகனையும் அவனுடைய நாட்டையும்,

"பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி ஆடையாம்
அந்நாள் வயலரிசி ஆகுமூர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்குதிருக் கோவ லூர்"

"குன்றுபோல் வீறு குணமுடையார் தம்முடன்நீ
இன்றுபோல் என்றும் இரு."

என்னும் பாக்களால் வாழ்த்தினார். தெய்வீகன் ஔவையார்பால் அளவற்ற அன்புடையவனாய் இன்பக்கண்ணீர் சொரிந்தான். பாரி மகளிர் ஔவையாரது கைம்மாறு

வேண்டாப் பெருதவியைக் கண்டு அழலிடைப்பட்ட வெண்ணெயென உருகினர். மக்கட் கூட்டம் ஔவையாரைத் தொழுது வாழ்த்திச் சென்றது. அரசர்களும் ஔவையார்பால் பிரியாவிடை பெற்றுப் பிரிந்தனர். ஔவையார் சிலகாலம் திருக்கோவலூரில் இருந்து பாரி மகளிரின் வாழ்க்கையைப் பார்த்து மகிழ்ந்து சென்றார்.

---

### குறிப்புரை

ஈத்துவக்கும் இன்பம் – கொடுத்து மகிழ்வதால் பெறப்படுகின்ற இன்பம். வெய்தாய் – விருப்பத்தைத் தருவதாய். நறுவிதாய் மணமுள்ளதாய். அடகு – இலைக்கறி, கீரை. அற்றைத் திங்கள் – சென்ற மாதத்து முழுநிலாக் காலத்தில். உட்கு – நாண்.

### வினாக்கள்

1. பாரியின் கொடைத் திறம் அவன் பெண்களிடத்தும் இருந்த தென்பதற்குச் சான்று வரைக.

2. "நீலச் சிற்றாடைக்கு நேர்" – இடஞ் சுட்டி விளக்குக.

3. அடகென்று சொல்லி அமுதத்தை இட்டவர் எவர்? அவ்வரலாறு தருக.

4. முழு நிலாவைப் பார்த்துப் பாரி மகளிர் பாடுகின்ற பாட்டிலிருந்து அறியப்படும் வரலாற்று உண்மை யாது?

5. மலையமான் தெய்வீகன் பாரி மகளிரை மணஞ்செய்து கொள்ள ஏன் அஞ்சினன்?

6. ஔவையார் திருமண விருந்திட்ட வகையினை இருபது வரிகளில் அமைத்து எழுதுக.

---

# 7. செந்நீர் சிந்திய சான்றோர்

பொன்னு. ஆ. சத்தியசாட்சி

'விழுமிய குறிக்கோள்களைத் தங்கண்முன் நிறுத்தி அவற்றின் பொருட்டுத் தங்கள் உயிரையும் நீத்துப் பெருமை எய்திய சான்றோர்களின், மயிர் சிலிர்க்கும் வரலாறுகள் இவ் விரிநீர் வையகத்தை அசைத்து விடுகின்றன. அவ்வுத்தமர்களை அவனியெலாம் கண்

கொட்டாமல் பார்க்கின்றது. சாக்கிரதீசின் வீரச் சாவினை, ஆபிரகாம் லிங்கனின் ஆருயிர் வீவினை, கரம்சந்து காந்தியின் பொன்னுயிர்ப் போக்கினை இவ் வையகம் மறக்குங்கொல்! இத்தகு சான்ருேர் யாவரும்-தம் நலம் கருதாது பிறர் நலம் கருதி ஒருசார் அரசியலின் பொருட்டும் ஒருசார் அறநெறியின் பொருட்டும் இன்னுயிர் விடுத்து மன்னிய புகழ் எடுத்தாராயினுர். ஆயின், இங்கு நாம் கருதப் புகுவது அவ்வழி உயிர் நீத்தாரைப்பற்றி யன்று. யாவராலும் மிக இழிவாகக் கருதப்பெற்ற சிலுவை என்னும் ஒரு சாவு மரத்தின் மீது மூன்று ஆணிகளில் தொங்கிச் செந்நீர் வடித்துச் சீவனைக் கொடுத்த ஒரு பெம்மானின் அன்புவழி நின்ற அடியவர் ஒரு சிலரைப்பற்றிக் கருதுவாம்.

இறைவர் அன்புருவாக விளங்குபவர் என்ப. அவ் வொப்பிலா அன்புதான் ஒரு வடிவம் ஏற்றுக் கிறிஸ்து பெருமாகை இவ்வுலகத் துலாவியது. "மாசிலா அன்பே மகனுய் உருக்கொண்ட மாணிக்கமே" என்ற செம்மை சான்ற சொற்களால் ஏசுவைப் போற்றினுர் ஒரு செந் தமிழ்ப் புலவர். அன்பைச் சுமந்து இந்த அவனியில் திரிந்த கடவுட் குமாரர் மன்பதை காக்க வேண்டிப் பன்னரிய பாடுபட்டு எருசலே என்னும் தொன்னகர்ப் புறத்தே குருசினில் தொங்கினுர்.

வள்ளலைக் கள்ளனைப்போல் பிடித்தார்கள் பகைவர்கள். அருள் பழுத்த திருமுகத்தில் துப்பினுர்கள். மோனத் திருச் சென்னியில் முள்ளடுக்கு அழுத்தினுர்கள். குருதி கொப்பளித்தது. முதுகை வாரினுல் புடைத்துக் கிழித்தார்கள். குறுக்கு மரத்தைக் குருபரனின் தோள்மீது சுமத்தினுர்கள். "வள்ளல் குருராயன் மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை எள்ளி அவதரித்த எம்மான் சருவேசன்" அச் சாவுமரந் தூக்கி எருசலேத் தெருவெலாம் தளர்ந்து நடந்து நல்வாரியாம் குருதி சிந்த "கல்வாரி" ஏகினுர். எருசலேக்குப் புறத்தே அமைந்திருந்த கல்வாரி என்னும் அக்கொலே மேட்டின்கண் உற்றபோது, ஐயனின் அருமைச் செங்கரத்தை வெம்

மரத்தில் சேர்த்துப் பச்சைத் திருவுடல் பதைக்கப் பதைக்க' இச்சை கொண்டமட்டும் ஆணி வைத்தடித் தார் அரக்கர் கூட்டத்தார். கடவுள் மகனாரின் திரு மேனி செந்நீரும் தண்ணீரும் வடியச் சிலுவையில் அலங்கோலமாய்த் தொங்கிற்று. அங்கே ஆத்தும நாயகர் அவனியோர் பிழைக்கத் "தம்முடைய ஆத்து மாவை மரணத்தில் ஊற்றினார்" என்றார் ஒரு முதுமை சால் முனிவர்.

இங்ஙனம் எம்பெருமான் உடலில் ஊறிய உதிர மூம் அகத்தில் ஊறிய அன்பும் பீறிட்டுப் பெருக் கெடுக்க, அப்பெருக்கினால் ஆண்டுகொள்ளப்பட்ட அடி யவர் ஆயிர ஆயிர ஆயிரவர்! தமக்காகக் குருதி யூற்றிய தம் குருநாதரின் திருநாதம் குவலய மெங்கணும் பரவும் வகை செய்தல் வேண்டித் தங்கள் உதிரத்துடன் உயிரை யும் ஊற்றிய உத்தமர்கள் இத்துணையர் எனக் கணக் கெழுத முடியுங் கொல்! இவ்வுத்தமர்களை "இரத்த சாட்சி கள்" எனத் திருச்சபை போற்றுகின்றது. ஈண்டு ஓரிரு வரைக் குறிப்பேன்.

முதன் முதலாகக் குருநாதருக் கெனக் குருதிக் கரி யாகி மரித்தவர் தீபன்* என்னும் திருவடியா ராவார். இவர் கிறிஸ்துவுக்குப் பின் முதல் நூற்றாண்டில் எரு சலேமிற் கூடிவாழ்ந்த கிறிஸ்துவின் அடியார்களுள் செம்மைசால் சீலராகத் திகழ்ந்தவர். மரித்தும் உயிர்த் தெழுந்த உன்னதக் கிறிஸ்துவின் திருவருட்டிறத்தால் இவர் அக்காலத்தே செயற்கரிய அற்புதங்களைச் செய்து வந்தார். இவர்பால் விளங்கிய இறை மாட்சியினை ஓர்ந்து உருகினர் ஒரு சாரார். உள்ளம் கருகினர் மறு சாரார். கருகிய உள்ளத்தார் வேண்டுமென்றே வாதுக் கிழுத்தனர் இவரை. ஆனால், இவரிடத்திருந்து பெருக் கெடுத்துப் பாய்ந்த ஞான வெள்ளத்தைக் கண்டு அல மந்து நின்றனர். அலமரல் அக்கிரம மாயிற்று. பற்றி டங்கொண்ட பாம்புகள்போல் புலவரைப் புடை

* தீபன்—Stephen

வளைத்துச் சீறிப் பாய்ந்து பற்றி யிழுத்து அறங்கூறவை யத்தில் நிறுத்திஞர்கள். 'ஆங்கே நிகழ்ந்த தென்னே? தீபன் திருமுகம் தேவன் முகமென ஒளிர்ந்தது. வஞ்ச கரின் நெஞ்சகத்தே மறைந்திருந்த குப்பைகளையெல்லாம் வாரிக்கொட்டி இடியென முழங்கிஞர் தீபஞர். அவை யோரெல்லாம் அசைவற் றிருந்தார். அடுத்த விநாடியில் அறங்கூறவையம் மறங்கூர் அவைய மாயிற்று. திருமறை யடிகளாரைத் தெருவெலாம் இழுத்துச் சென்று ஆங் கொரு வெளியிலே நிறுத்திக் கல்லா லடித்துக் கத்தினர் கயவர். திருமறைச் சொல்லால் அடித்தவரைக் கொடி தான கல்லால் அடித்துச் சாய்த்தனர் சழக்கர். கல்லடி பெய்கின்றது! செந்நீர் பாய்கின்றது! அடியார் மூழந் தாளூன்றி வானேக்கிப் பார்த்து, "ஆண்டவரே, இவர் கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" எனக்கூவி யுரைத்துச் சீவனை விட்டார்! "கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு மாண்டுபடும்போதும் இவர்க்கு மன்னியும் என்று உரைத்த" அருள் வள்ளலின் வழி நின்ருர் வேறு என் செய்வார்? கிறிஸ்துபிரானின் சிலுவைக் காட்சியைப் பாடுகையில் கடவுட் கவிஞர் கிருட்டினப் பிள்ளையவர்கள் இவ்வாறு பாடுகிருர்கள்:

"தன்னரிய திருமேனி சதைப்புண்டு
தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார் தாம்செய்வ
திவர்பிழையை
மன்னியுமென் றெழில்கனிவாய் மலர்ந்தார்நம்
அருள்வள்ளல்."

ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவர்க் குற்ற துன்பம் சொல்லும் தரத்தது அன்று. கொடுங்கோலர்கள் அவர் களைக் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதுபோல வேட்டையாடிஞர்கள். அவருள் தலையாயவன் முதல் நூற்ருண்டிலே உரோமாபுரியின் அரியாசனத் தமர்ந்தி ருந்த 'நீரோ' என்ற பெயருடைய னுவன். அவன் தன்

அரண்மனைப் பூங்காவிலேயே கிறிஸ்தவர்களைத் துன் புறுத்திக், கொக்கரித்தவன். • அக்காலத்திலே பகைவர் கள் கிறிஸ்த்வர்களைக் காட்டு விலங்குகளின் பச்சைத் தோற்பைகளி லிட்டுத் தைத்துக் கடி நாய்களுக்கு முன் எறிந்தார்கள்; கிறிஸ்தவர்களின் தலைகளில் பந்தஞ் சுற் றிக் கொளுத்திக் கொக்கரித்தார்கள்; சிங்கங்களின் முன் எறிந்து வேடிக்கை பார்த்தார்கள். கிறிஸ்தவர்களை உயிருடன் எறித்து மிஞ்சிய சாம்பரைக் காற்றில் ஊதி யும் ஆற்றில் கரைத்தும் கூத்தாடினார்கள் குறும்பர்கள்.

மூன்றும் நூற்றாண்டின் துவக்கத்திலே வட ஆப்பிரிக்காவிலே †பேர்ப்பதுவை ‡பெலிசித்தை என் னும் இரண்டு மாது சிரோமணிகள் தங்கள் இறைவர்க் காக ஊற்றிய அன்பு உள்ளத்தை உருக்குவ தாகும். பெர்ப்பதுவையின் மடியிலே பச்சைக் குழந்தை! பெலி சித்தையின் வயிற்றிலே இளஞ்சிசு! இவர்களைக் கிறிஸ்து நெறியினின்றும் மாற்றி யிழுக்கப் பகைவர் பண்ணிய வித்தைகளெல்லாம் விழுந்துபோயின. நல்ல வேளை யாகத் திருவருட் புண்ணியத்தால் பெலிசித்தை ஒரு பெண் மகவைப் பெற்று முடித்தாள். அப்போது ஆட்சிப் பீடத்தில் வீற்றிருத்தவன் 'செவீரு' என்பவன். ஆணை பிறந்தது. இவ்விரு மங்கையர் மணிகளையும் இன்னும் பல அன்பர்களையும் வேடிக்கை வெளிக்கு இழுத்துச் சென்றார்கள். அவர்களை வலைகளில் மூட் டைகளாகக் கட்டிக் காட்டெருமைகளின் முன் எறிந் தார்கள். காட்டெருமைகளின் கொம்பும் நாட்டெரு மைகளின் வாளும் அன்பர்களைக் குத்திக் கிழித்தன! செந்நீர் தண்ணீராய் ஓடிற்று! அவர்களோ பாடிக் கொண்டு பரகதி புக்கனர்.

இத்தகைய வரலாறுகளை எழுதத் தொடங்கினால் எண்ணாயிரம் ஏடுகள் செல்லுமே!

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பஞ்சா பிலே சீக்கியர் குலத் தோன்றல் ஒருவர் கிறிஸ்துவின்

---

† பேர்ப்பதுவை—Perpetua ‡ பெலிசித்தை—Felicitas

அன்பால் இழுக்கப்பட்டார். அவர் பெயர் கர்தார் சிங்கு என்பது. சிலுவையன்பில் சிக்கிய சீக்கியர் அவ் வன்பின் மாட்சியினை அறைகூவிச் சொல்ல திபெத்து நாட்டைத் தேடி நுழைந்தார். அந்நாட்டினைப்பற்றி நமக்கு இப்போது தெரிந்துள்ளவற்றில் பத்தில் ஒரு பங்கும் அப்போது தெரிந்திலது. ஆயினும் சென்றார் நம் செம்மல்.

> "நண்பு ளீர், உல கெங்கணும் நரசமூ கங்கட்(கு)
> எண்பெ றும்சுவி சேடத்தை இயம்புமின்"

என்று எம்பிரான் சொன்ன ஒரு வாசகமாகிய திருவாசகத்தைச் சிரமேற் கொண்டு திபெத்து நோக்கினார். அவர்தம் மொழியை மெல்லக் கற்றுக் கிறிஸ்துவின் அன்பைக் கூறினார். ஏற்றார் சிலராயினர். மாற்றார் பலராயினர். அன்பரைப் பிடித்து யாக்கு என்னும் ஒருவகை எருமையின் பச்சைத் தோலில் இட்டுத் தைத்து வெளியில் எறிந்துவிட்டனர். பகலில் வெயிலிலும் இரவில் பனியிலுமாகக் கிடந்து விலா முறிந்து இரத்தமும் பாய நையலுற்றார் நம் அன்பர். இறுதியில் தமது வலக்கையைமட்டும் அவிழ்த்துவிட வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுத் தம்முடன் கிடந்த "புதிய ஏற்பாடு" என்னும் திருமறைப் பகுதியைத் திறந்து அதனுள் இருந்த பென்சிலால் எழுதினார். "என் பிராண நேசரே, ஏசுவே, என் உயிரை மீண்டும் தரவேண்டுமென்று உம்மைப் பன்முறை வேண்டினேன். அதனை மீண்டும் உமக்குப் படைப்பதற்கே வேண்டினேன். ஆயினும் என்னை அழைக்கிறீர். வருகிறேன்." என்று எழுதி முடித்துத் தமது மூச்சையும் முடித்துக்கொண்டார். அன்பின் திறத்தினை என்னென்பது!

கன்மனத்தையும் கரைக்கும் இச்செய்தியைத் தெரிந்து வெளியிட்டவர் சாது சுந்தர்சிங்கு என்னும் மற்றொரு சீக்கியர் தோன்றல் ஆவர். இவரும் இளமையில் கிறிஸ்துவை ஏற்று எழுதவொண்ணா இன்னலுற்றுத் திபெத்துச் சென்று தீராத் துன்பத்தை இன்புடன்

ஏற்று ஏசுவுக்காய் உழைத்த உத்தமராவர். திபெத்திலே இவரை நையப் புடைத்து வழியில் எறிந்தார்கள்; சிறையி லடைத்துச் சவுக்கடி தந்தார்கள்; அட்டைகளை விட்டு இரத்தத்தை உறிஞ்சச் செய்தார்கள்; சாவுக் கிணற்றில் தள்ளி யடைத்தார்கள். இத்தனையும் ஏற்று உழந்து தாய் நாடு மீண்டு நடந்தன வெல்லாம் கூறிக் கூறிக் கிறிஸ் தவ அன்பர்களுக்குள் அன்பு கொளுத்தினார் சுந்தர் சிங்கு. செந்நீர் ஊற்றிய சிலுவையன்பிலே தோய்ந்த நம் சாது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தொன் பதில் மீண்டும் திபெத்து நோக்கி நடந்து விட்டார்! என்ன ஆயிற்றோ அறிகிலேம்.

இங்ஙனம் இம்முந்நீர் வையகம் பிழைக்க வென்று செந்நீர் ஊற்றிய சேசு பிரானின் திருவடித் தொண்டர் களும் அவ்வன்பின் சாட்சிகளாய் விளங்கிச் செந்நீர் சிந்தினார்கள். இத்தகைய துன்பத்தின்மேல் கட்டப் பட்டு எழும்புவதுதான் இப்போதுள்ள கிறிஸ்துவின் திருச்சபை என்னும் மாளிகை யாகும்.

---

## வினாக்கள்

1. ஏசுவானவர் அன்பின் வடிவம் என்பதனைப் புலப்படுத்துக.

2. கிறிஸ்துவின் பாடுகளைச் சுருக்கி வரைக.

3. "ஆண்டவரே, இவர்கள்மீது இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" — இடம் காட்டுக.

4. கிறிஸ்துபிரானின் மன்னிக்கும் பண்பினைப் பற்றித் திருட்டினைப் பின்னை கூறுவதனை நம் சொந்த சொற்களில் வரைக.

5. முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் எத்தகைய வாய துன்பத்தினை அனுபவித்தார்கள்?

6. பெர்ப்பதுவை பெலிசித்தை என்பவர் யாவர்? அவர்களைப்பற்றித் தெரியுமளவுக்கு வரைக.

7. கர்தார் சிங்கின் பத்தித் திறனைப் புலப்படுத்துக.

8. சாது சுந்தர்சிங்கு அடைந்த இன்னல்கள் யாவை?

9. குறிப்பு வரைக: இரத்த சாட்சிகள், கல்வாரி, செவிரு, நீரோ.

# 8. கல்வெட்டுகள்

புலவர் திரு. ஜார்ஜ் சாமுவேல்

நந் தண்டமிழ் நாட்டின் பெருமையைத் தரணிக்குத் தெளிவுற எடுத்துக் காட்டுவன நம் நாட்டுச் சீரிய நூல்களே. அந்நூல்களுள் கூறப்படும் வரலாறுகளுக்கு ஆக்கமளிப்பவை கல்வெட்டுகள். இவற்றைச் சாசனங்கள் என வடநூலார் கூறுகின்றார். புரவலரின் அரசியல் நெறியும் சமய நெறியும் பற்றிய செய்திகள், எக்காலத்தவரும் உணர்ந்துகொள்ளும் வண்ணம், கோயிற் சுவர்கள், படிமங்கள், தூண்கள், மலைக்குகைகள், கற்பாறைகள் முதலியவற்றில் செதுக்கப்பட்டன. அவை பெரும்பாலும் கற்களில் செதுக்கப்பட்டுள்ளன வாதலால் கல்வெட்டுகள் எனப்படுகின்றன. தற்காலத்தும் சிலரிடம் சிற்றரசர் எழுதித் தந்த செப்புத் தகடுகளைப் பார்க்கலாம். அவைகளுக்குச் செப்பேடுகள் என்று பெயர். இச்செப்பேடுகளும் கல்வெட்டுகளின் நிழல் என்றே கூறலாம். இக்கல்வெட்டுகள் தமிழ் நாட்டில் பிராகிருதம், சமஸ்கிருதம் தமிழ் என்னும் மொழிகளில் எழுதப்பட்டன. சில கவிதை வடிவிலும் சில உரை நடை வடிவிலும் மற்றும் சில இரண்டும் விரவிய நடையிலும் அமைந்துள்ளன. இக்கல்வெட்டுகளின் காலம், சிறப்பு, வரலாற்றுக்கு உதவும் வகை என்பனவற்றைச் சற்று ஆய்ந்து நோக்கின் நம் நாட்டைப்பற்றியும் தனிப் பெருங் காவலரைப்பற்றியும் பெருமை யடையாமலிருக்க முடியாது.

பண்டைக் காலந்தொட்டே நம் நாட்டு வேந்தரின் வெற்றி முதலியவைகளையும் வீரர் பலரின் தீரச் செயல்களையும் கற்களில் பொறித்து வைக்கும் பழக்கம் இருந்து வந்த தெனப் பல நூல்கள் கூறுகின்றன. நாமறிந்த தொன்னூல்கட் கெல்லாம் முன்னூலாய் விளங்குவதும் ஐயாயிரம் ஆண்டுகட்குமுன் தோன்றியதுமான தொல்காப்பியத்துள் போரில் வீழ்ந்துபட்ட வீரர்களுக்கு

நடுகற்கள் அமைத்தலும் அக்கற்களி லவர்தம் வீரச் செயல்களைப் பொறித்தலும் கோயில்கள் கட்டி வணங்கு தலும்போன்ற அரிய செய்திகள் காணப்படுகின்றன. புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, அகநானூறு என்னும் நூல்களில் இத்தகைய வரலாற்றுச் செய்திகள் பல பரக்கக் காணப்படுகின்றன. நடுகற்களே காலத்தானும் முறையானும் வளர்ச்சியடைந்து கல்வெட்டுக ளாயின. வெகு காலத்திற்கு முன்பிருந்தே கல்வெட்டுகள் செதுக்கப்பட்டு வந்தன வாயினும் சிற்பக் கலையில் வல்ல பல்லவர் காலத்திலிருந்துதான் அவை வளர்ச்சி யுறலாயின. பிராகிருத மொழியிலும் வட மொழியிலும் எழுதப்பட்டுவந்த கல்வெட்டுகள் கி.பி. ஆறும் நூற்றுண்டுக்குப் பின்னரே தமிழில் எழுதப்பட லாயின.

இவ்வாறு தோன்றிய கல்வெட்டுகள் முக்கூறுபாடுக ளுடையன. முன்னர் அக்காலத்தரசனுடைய பெருமை, போர், வெற்றி முதலானவை கூறப்பெற்றிருக் கும். பின்னர் யார் யார் என்னென்ன அறஞ் செய்தனர், அறத்தின்பொருட்டு என்னென்ன கொடுத்தனர், என்பன போன்றவை சித்திரிக்கப்பெற்றிருக்கும். இறுதியில் அக்கல்வெட்டுகளும், கூறப்பட்டுள்ள அறச்செயல் களும், எவ்வாறு காக்கப்படல் வேண்டுமென்றும் எழுதப் பெற்றிருக்கும். எனவே ஒரு கல்வெட்டில் அரச னுடைய பெருமைகளைக் கூறுமாற்றுன் முதலில் அமை வது மெய்க் கீர்த்தி யென்றும், இடையில் அமைவது செய்தி என்றும், ஈற்றி லமைவது காப்பு நிலை என்றும் கூறப்படும்.

இக்கல்வெட்டுகளின் உறுப்புகளில் வேறு சிலவற் றையும் காணலாம். தமிழில் எழுதப்பட்ட கல்வெட்டு க்ளும் பெரும்பாலும் ஒரு வடமொழிச் சுலோகத்தைக் கொண்டு ஆரம்பமாகி, வேறொரு வடமொழிச் சுலோகத் தைக்கொண்டே முடியும். முடிவில் அவற்றுள் கூறப்பட்டுள்ளவற்றைக் காத்து, அவைகளின்படி நடப் பவர் அடையும் பயனும், அவற்றை அழிப்பவர்

அடையும் சாபக்கேடும், இத்தெய்வம் காக்க எனவும் பொறிக்கப்பெற்றிருக்கும். இப்பகுதியே "காப்பு நிலை" எனப்படும். "இத்தன்மத்துக்கு அகுதம் பண்ணினவன் உண்டானல் கங்கைக் கரையிலே கோவதைக் கொன்ற பாவத்திலே போகக்கடவ ளுகவும்" என்பது அழிப்பா ரடையும் தண்டனையைக் கூறுவதற்குச் சான்ருகும். இவற்றுள் சிவன் கோயில் கல்வெட்டாயின் "சைவ அடி யார்கள் காப்பார்களாக" என்று பொருள்படும் "பந்மா ஹேஸ்வர ரக்ஷை"என்னுஞ்சுலோகத்தைக்கொண்டும், விஷ்ணு கோயில் சாசனமாயின் "வைஷ்ணவ அடியார் கள் காப்பார்களாக" என்று பொருள்படும் "வைஷ்ணவ ரக்ஷை" என்னுஞ் சுலோகத்தைக் கொண்டும் முடியும். வச்சணந்தி மாலை, பன்னிரு பாட்டியல், இலக்கண விளக்கம் என்னும் நூல்கள் கல்வெட்டுகட் குரிய இலக் கணங்களைக் கூறும் ஏற்ற முடைய நூல்களாம்.

பண்டைத் தமிழ் வேந்தர்களுடையவும் மக்க ளுடையவு மான வரலாற்றினை முறையாக அக்காலத்தில் எழுதிப் போந்தா ரெவரு மிலர். ஆனல் நன்றியை மறவாது நல்லொழுக்கச் சீலராய்த் திகழ்ந்த பண்டைத் தமிழ்ப் புலவர் தம்மை ஆதரித்த அரசரையும் வள்ளல் களையும் தாம் பாடிப் போந்த இலக்கியங்களில் அமைத் துக் காட்டி யுள்ளனர். எனவே "வரலாற்றுப் பாவைக்கு இரு விழிகள்போ லமைந்தவை கல்வெட்டு களும் இலக்கியங்களும்" என்ருலும் மிகையாகாது. கல்வெட்டுகளால் நம் நாட்டுப் பண்டைப் பெருமையை நன்குணருகிருேம். நம் நாட்டுப் பாரம்பரியக் கதை, இலக்கியம், கலை, கற்பனைக் கதைகள் முதலானவை வரலாற்றுக் குதவினுலும் கல்வெட்டுகள் அவைகளை வரிசைப்படவும் அவைகளுள் உண்மை எவை யென வும் எடுத்துக் காட்டுகின்றன. தமிழ் மக்கள் தண்ணீர்ப் பந்தல் வைத்தல் முதலிய அறப்பணியில் ஈடுபட்டுவந்த னர் என்பதை மாமண்டூரை அடுத்த உக்கல் என்னும் கிராமத்திலுள்ள ராஜராஜ கிணறு சாசனத்தாலும் அரசர் கோயில்களைப் பாதுகாத்து அவற்றின் திருப்பணியாள

ருக்கு வேண்டும் யாவும் கொடுத்து ஆதரித்துவந்தனர் என்பதைக் காஞ்சியிலுள்ள அருளாளப் பெருமாள் கோயில் சாசனத்தாலும் அறிகிறோம். இராச்சியங்கள் மண்டலங்களாகவும் நாடுகளாகவும் கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு அளக்கப்பட்டன வென்று அறிகிறோம். மூவேந்தர் காலத்துச் சிறந்த ஊர்கள் எவை, அவ்வூர்ப் பெயர்கள் மருவித் தற்போது எந்நிலையை அடைந்துள் ளன என்னும் உண்மைகளை அறிகின்றோம். அரசர் கள் தங்கள் காலத்திலேயே தங்கள் மைந்தருக்குப் பட்டங் கட்டும் வழக்கம் இருந்ததாகக் காணப்படுகின்றது. மன்னர்களுக்குத் திறை, நிலவரி, தொழில் வரி, சுங்க வரி என்பவை வருவாய்களாக இருந்துவந்தன. சிற்றாயம், உகவை, ஏலவை என்பவை இறையிலி நிலங்களுள்ள வர்களிடமிருந்து வாங்கப்பெற்ற வரிகளாகும். பொருள் கள் யாவும் மிக நுட்பமாக அளக்கப்பெற்றும் நிறுக்கப் பெற்றும்வந்தன என்பதை அவர்கள் கையாண்ட அளவைகளின் மூலம் தெற்றெனத் தெளியலாம். குழி, மா, வேலி என்பன நீட்டலளவைகளும், குன்றி, மஞ்சாடி, கழஞ்சிஎன்பன நிறுத்தலளவைகளும், செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி (மரக்கால்), பதக்கு, தூணி, கலம் என்பன முகத்தலளவைகளும் ஆம். இவற்றை அறியும்பொழுது அக்காலத்து மக்களின் நுண்ணறி வைக் கண்டு வியப்பெய்தாம லிருக்க முடியாது. அருண் மொழித் தேவர் மரக்கால், ஆடவல்லான் மரக்கால், இராசராசன் மரக்கால் என்பன சில கல்வெட்டுகளில் காணப்படும் மரக்கால்களின் பெயர்கள். எனவே அக் காலத்து அரசர்களின் பெயர்களாலும் அளவைகள் வழங்கப்பட்டுவந்தன என அறிகிறோம்.

தமிழ் நாட்டு வேந்தர் பலர் மேல்நாட்டு நாகரிகத்தை யும் விஞ்சுமளவில் கடற்படைகளை வைத்தும் வாணிபம் நடாத்தியும் சிறக்க வாழ்ந்தனர். இராசேந்திர சோழ தேவர் சாசனத்தில் இராசேந்திரன் ஈழம், கடாரம், வங்கம் முதலிய நாடுகளைக் கடற்படை கொண்டு வென்று, முரசு கொட்டி வாழ்ந்ததாகக் காணப்படுகிறது. தமிழ்

எழுத்துகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் பல கிழக்கிந்தியத் தீவுகளிலும், சீனம், ஜப்பான் முதலிய இடங்களிலும் காணப்படுவனவாகச் செய்தித் தாள்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நம் நாட்டுக் கல்வெட்டுக் கலை வேற்று நாட்டவரின் படையெடுப்பால் சிதைவுற்றது. ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் கல்வெட்டுகளைக் கண்டு ஆயும் பணியில் ஊக்குவிப்பா ரின்றி யிருந்த நாளில் ஜெர்மன் நாட்டுப் பேரறிஞர் உல்சு துரையால் நம் நாட்டவரும் விழிப்படைந்தனர். அவரே முதலில் இத்தகைய கல்வெட்டுகளின் மூலம் நம் நாட்டு வரலாறு அமைய வழிகாட்டினார். அதன் பின்னரே பண்டைப் பெருமையை மக்க ளறிந்து வியந்தனர்; இக்கலையின் சீரிய தன்மையை உணர்ந்தனர்; ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அரசியலாரும் இப்பணியில் ஊக்கம் காட்டினர். பல கல்வெட்டுகள் புதுப்பிக்கப்பட்டன. பல பாதுகாக்கப்பட்டன. நம் நாட்டின் பெருமைக்கே ஊன்றுகோலாகவும் சுடர்விட்டெரியும் தீபங்களாகவும் காட்சியளிக்கும் கல்வெட்டுகளை நாம் போற்றிப் பாதுகாத்தல் வேண்டும். மறைந்து சிதைந்து சீர்குலைந்து கிடக்கும் எண்ணற்ற கல்வெட்டுகளைத் தேடிக் காணல் வேண்டும். கண்டபின்பு எல்லோரும் அவைகளை அறியச் செய்தல் வேண்டும். ஈடும் எடுப்பு மற்ற எழில் மிகு தமிழ் நாட்டின் பெருமையை எவரும் அறியச் செய்திடல் வேண்டும்.

---

குறிப்புரை

படிமங்கள் – செதுக்கப்படுகின்ற அல்லது வார்க்கப்படுகின்ற உருவங்கள். நடுகற்கள் – பண்டைக் காலத்தே போரில் மடிந்த வீரர்களை நினைந்து வணங்கற்பொருட்டு நடப்பட்ட கற்கள். அகுசம் பண்ணியவன் – அழிவு செய்தவன். இறை – கப்பம். சுங்கம் – இறக்குமதியாகும் பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி.

**வினாக்கள்**

1. கல்வெட்டுகள் எனப்படுவன யாவை?

2. நடுகற்கள் எனப்படுவன யாவை?

3. கல்வெட்டுகளின் மொழி, தொடக்கம், முடிவு இவற்றைப்பற்றி வரைக.

4. மெய்க்கீர்த்தி காப்புகிலை என்பன யாவை?

5. "வரலாற்றுப் பாவைக்கு இரு விழிகள்" எனச் சொல்லத் தகுவன யாவை, எங்ஙனம்?

6. கல்வெட்டுகளால் அறியக் கிடக்கும் அக்காலத்து அரசியன் முறைகளைப்பற்றி வரைக.

7. "அருண்மொழித் தேவர் மரக்கால்" முதலிய பெயருண்மையால் அறியப்படுவது யாது?

8. உல்கு துறை: குறிப்பு வரைக.

---

# 9. அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி*

**வேலன் அவர்கள், பி.ஏ.**

நம்மைத் தாங்கிக்கொண்டிருக்கும் இவ்வுலகமும் இன்னும் கோடிக்கணக்கான பல்வேறு உலகங்களும் பற்றுக்கோடு ஒன்றுமின்றி அந்தரத்தில் அசைந்து ஆடிக்கொண் டிருக்கின்றன. வானவூர்தியின் உதவியால் பூமியைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் பன்முறை பறந்து சென்று பார்த்தும் உலகத்தைத் தாங்கிக்கொண் டிருக்கும் பொருள் யாதும் தட்டுப்பட வில்லை; ஆயிரந் தலைகொண்ட ஆதிசேடனும் முட்டுப்பட வில்லை. ஆகவே பூமியும் ஏனைய அண்டங்களும் வான வெளியிலே ஆதரவு ஏதுமின்றித் தாமாகவே இயங்கிக் கொண் டிருப்பது நன்கு புலப்படும். வானத்திலே தோன்றும் ஞாயிறு திங்கள் முதலியவற்றின் தன்மைகளை ஆராயப்

---

*நூல்: "மண்ணும் விண்ணும்": திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

புகுங்கால் ஒன்றனுக் கொன்று எழில் மிகுந்ததாய்க் காணப்படுவதுடன், அதனை முற்றிலும் அளவிட்டு உரைக்க முடியாததாக இருக்கின்றது. மணிமொழிப் பெருமானும்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"
—(திருவண்டப் பகுதி)

என வியந்து கூறினர்.

வானத்தின் வியத்தகு தோற்றங்களைப்பற்றி நாம் ஒரு சிறிதும் ஆராய்ச்சி செய்வ தில்லை. அந்திப்பொழுதிலே ஞாயிறு மேற்றிசையில் சென்று மறைவதும், திங்கள் மெள்ள மெள்ள எட்டிப் பார்ப்பதும், உடுக்கள் ஒன்றன்பின் ஒன்றாய்க் கண்ணைச் சிமிட்டுவதும் நமக்கு எத்துணை இன்பம் பயக்கின்றன! இக்காட்சியில் ஈடுபடுவோர் எவரும் மனங் கசிந்து உருகாமல் இரார். இவ் அரிய காட்சிகளைத் தொலை நோக்காடியின் உதவியால் பார்க்கும்பொழுது நம் கண்ணுக்கு எளிதில் புலப்படாத பல புதிய பொருள்கள் நமக்குத் தெரிகின்றன. இக் கண்ணாடி சேய்மையிலுள்ள பொருள்களை அண்மையில் இருப்பனபோன்று பெரிதாக்கிக் காட்டுகின்றது. இதன் உதவியால் விண் மீன்களையும், ஏனைய கோள்களையும் இரவிலும், பகலிலும், எந்த நேரத்திலும் காணலாம். உடுக்கள் இரவில் மட்டும் தோன்றுவதாகப் பலர் எண்ணியிருக்கலாம். இஃது உண்மையன்று. அவை எக்காலமும் இடைவிடாது வானத்திலே இயங்கிக்கொண்டு இருக்கின்றன. பகற்காலங்களில் ஞாயிற்றின் பேரொளியால் நம் கண்கள் மங்கிப் போவதால் விண் மீன்களைக் கண்ணாடியின் உதவி யின்றி நம்மால் காண முடிவதில்லை.

ஞாயிற்றினைத் தொலை நோக்காடியின் உதவி கொண்டு நோக்கும்பொழுது அஃது ஓர் அனற் பிழம்பு

போல் எரிந்து கொண்டிருக்கின்றதாகத் தெரிகின்றது. அதனுள் ஒருவகை எரியும் வளி நிறைந்து கிடக்கின்றது. அதன் மேற்புறங்களில் பல உடைப்புகள் காணப்படுகின்றன. இவ்வுடைப்புகள் கருமை நிறமாய்த் தோன்றுகின்றன. ஞாயிற்றின் உள்ளே இருக்கும் தீக் குழம்பில் ஓயாது ஏற்படும் கொந்தளிப்பினாலேயே இங்ஙனம் வெடிப்புகள் உண்டாவதாகக் கூறப்படுகின்றது. ஞாயிறு பூமியைக் காட்டிலும் பல்லாயிரம் மடங்கு பெரியது. மிக விரைவாகச் செல்லும் புகைவண்டி பூமியை ஒருமுறை சுற்றிவர மூன்று வாரங்கள் செல்லுமெனில் அதே புகைவண்டி ஞாயிற்றினை ஒருமுறை சுற்றிவரக் குறைந்தது ஐந்து ஆண்டுகள் செல்லும். ஞாயிறு நெடுந்தொலையில் இருப்பதால் நம் கண்ணுக்குச் சிறியதாய்த் தோன்றுகின்றது. ஒரு புகைவண்டி ஞாயிறு இருக்குமிடம் நோக்கி இரவும் பகலும் விரைந்து ஓடுவதாக வைத்துக்கொள்வோம். அவ்வண்டி ஞாயிறு மண்டிலத்தை அடைவதற்கு இருநூற்று எழுபத்தைந்து ஆண்டுகள் செல்லும். ஞாயிறு நம் கண்ணுக்கு வட்ட வடிவமாகத் தோன்றினும் கண்ணாடியில் பார்க்கும்பொழுது அதன் ஓரங்களிலுள்ள தீ ஈட்டிகளைப் போன்று கொழுந்துவிட்டு எரிவதைக் காணலாம். ஞாயிற்றின் உள்ளே எரிகின்ற தீயின் தன்மை சொல்லுக்கு அடங்காததாக இருக்கின்றது. ஓரங்களில் எரியும் தீக்கொழுந்தின் ஒரு பகுதிக்குள் இடறி விழ நேரிட்டாலும் இப்பூமி பொசுங்கி ஆவியாகப் போய்விடும். ஆயினும் ஞாயிறு நெடுந்தொலைவில் இருப்பதால் இதைக் குறித்து நாம் அஞ்ச வேண்டுவதில்லை.

அடுத்தாற்போல் திங்கள் மண்டிலத்தைச் சிறிது ஆராய்வோம். அதனுள் மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்திருக்கின்றன. அவற்றுள் எரிமலைகளும் உண்டு. திங்களும் பூமியைப்போன்ற ஒரு சிறிய உலகமே யாகும். அதனை இறந்துபோன உலகமெனக் கூறலாம். அதிலுள்ள கடல்களெல்லாம் வறண்டு போய்விட்டன. ஆங்குள்ள எரிமலைகள் இப்பொழுது

நெருப்பைக் கக்குவ தில்லை. அவ்வுலகில் காற்று இன்மையால் மக்கள் உயிர் வாழ முடியாது. செடி கொடிகளும் வளரமாட்டா.

செவ்வாய் மண்டிலத்தைப் பூமிக்கு ஒருவாறு ஒப்பிடலாம். அதன் வடக்கு மூலையில் வெண்மையான பனிமலைகள் தெரிகின்றன. வேனிற் காலத்தில் இவ் வெண்மையான பகுதி சிறிது சிறிதாகத் தேய்ந்து குறைந்துபோகின்றது. பனிக் கட்டி வெயிலால் உருகிப் போவதனாலேயே இத்தோற்றம் காணப்படுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

சனி மண்டிலத்தின் தோற்றம் கண்ணைக் கவருந் தன்மையதாக இருக்கின்றது. அதனைச் சுற்றிலும் அழகிய ஒளி வட்டங்கள் காணப்படுகின்றன. எண்ணுதற்கரிய சிறு திங்கள்கள் சனி மண்டிலத்தைச் சுற்றி வருவதனாலேயே இவ் அரிய ஒளி வட்டங்கள் உண்டாகின்றன. அவற்றின் உள்ளே சுழன்று கொண்டிருக்கும் திங்களைத் தனித் தனியாக நம்மால் காண முடிவ தில்லை. நாம் பூமியில் காண்பது ஒரு நிலவு. ஏனைய உலகங்களோவெனில் பல்வேறு நிறங்களை யுடைய பல நிலவுகளைப் படைத்திருக்கின்றன. செவ்வாய்க்கு இரு நிலவுகளும், வியாழனுக்கு நான்கு நிலவுகளும், சனிக்கு எண்ணிறந்த நிலவுகளும் அமைந்திருக்கின்றன. இங்ஙனம் பல நிலவுகளை யுடைய விண்ணுலகங்களை அமரர் உறையுள் எனக் கூறுவது முற்றிலும் பொருந்தும்.

வானத்திலே கோடிக்கணக்கான மீன்கள் வைரங்களைப்போன்று மின்னுகின்றன. அவற்றிற் சில மீன்கள் பெரிதாயும், மற்றும் சில சிறிதாயும் காணப்படுகின்றன. சில மீன்கள் ஒளி மிகுந்தும், இன்னுஞ் சில ஒளி மங்கியும் தெரிகின்றன. நாகரிகம் மிகுந்த நந் தமிழ் மக்கள் பண்டைக் காலத்திலேயே உடுக்களின் கூட்டங்களைக் கூர்ந்து நோக்கி அவற்றின் உருவங்களுக்கு ஏற்றவாறு பல்வேறு பெயர்களைச் சூட்டி இருக்

கின்றனர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னல் நம் முன்னேர்கள் வானத்திற் கண்ட உருவங்களைச் சிறிதும் மாறுபாடின்றி நாம் இற்றைக்கும் காண்கின்றேம். இதனை எண்ணிப் பார்க்கும்பொழுது நமக்குப் பெருவியப்பு உண்டாகின்றது. விண் மீன்களின் தொகுதிகள் எக்காலத்தும் நிலை பிறழாது வான வெளியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

நாம் வான வெளியில் பல ஆண்டுகள் வரை ஓயாது பறந்து செல்வதாக வைத்துக்கொள்வோம். இங்ஙனம் செல்கையில் பின்னல் திரும்பிப் பார்ப்போமாளுல் நமது ஞாயிறு ஒரு சிறிய விண் மீனைப்போன்று தோன்றும். இன்னும் நெடுந்தொலைவு சென்றல் அது நம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடும். இங்ஙனமே வானத்தில் காணும் விண் மீன்கள் நெடுந் தொலைவில் இருத்தலால் அவை நம் கண்ணுக்கு மிகச் சிறியனவாய்த் தோன்றுகின்றன. உண்மையில் ஒவ்வொரு மீனும் ஞாயிற்றினைக் காட்டிலும் மிகப் பெரியதாக இருக்கின்றது. விண் மீன்கள் ஒளியிலும் நிறத்திலும் ஒன்றுக் கொன்று மாறுபடுகின்றன. இம்மீன்கள் நீல நிறமாயும், பொன் நிறமாயும்; வெண்மை நிறமாயும், செந்நிறமாயும் பலவாறு ஒளி வீசுகின்றன. ஒவ்வொரு மீனும் இளமையில் நீல நிறமாயிருந்து நாளடைவில் முதிர்ச்சியுற்றுச் செந்நிறம் அடைகின்றது. ஆயினும் ஒரு மீனின் நிறம் மாறுதல் அடைவதற்குக் கோடிக் கணக்கான ஆண்டுகள் செல்லும்.

ஞாயிற்று மண்டிலத்தைச் சார்ந்த செவ்வாய் முதலிய கோள்களும் விண் மீன்களைப்போன்று வானத்தில் தோன்றுகின்றன. ஆயினும் இக்கோள்கள் பூமியைப்போன்று ஞாயிற்றினைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகலின் இவை இடம் விட்டு இடம் மாறிக்கொண்டே இருக்கின்றன. ஏனைய விண் மீன்கள் அங்ஙனம் இடம் பெயர்வதில்லை. விண் மீன் ஒவ்வொன்றும் தனித்தனி ஞாயிறு ஆகலின் அஃது

இயற்கையாகவே சுடர்விட்டு மின்னுகின்றது. கோள்களோவெனில் தமக்கு இயற்கை ஒளி இன்மையால் இங்ஙனம் மின்னுவதில்லை. இவ் இரு தன்மைகளால் மீனுக்கும் கோளுக்கும் உள்ள வேற்றுமை எளிதில் உணரப்படும்.

இரவில் வானத்தைக் கூர்மையாகப் பார்க்கும் பொழுது இருண்ட வானத்தின் இடையிடையே ஒளி மிகுந்த இடங்கள் காணப்படும். இவற்றைக் கண்ணாடியின் உதவியால் நோக்குவோமானால் நமக்கு ஓர் அரிய காட்சி தென்படும். இவை நீரில் காணும் சுழல்களைப் போன்று தோன்றுகின்றன. இங்கு முழு உருவம் அடையாதனவும், முற்றுப் பெறாதனவுமான கோடிக் கணக்கான மீன்களைக் காணலாம். இவ் ஒளிப்பகுதியே உலகங்களைப் படைக்கும் இடம்போல் காணப்படுகின்றது. இதனை "ஆண்டவனது தொழிற்சாலை" என அறிஞர் கூறியுள்ளனர். எவ்வகைப் பொருளாயினும் அதனைச் செய்வதற்கு ஏதேனும் முதற் பொருள் ஒன்று வேண்டும். நீராவிப் பொறியைச் செய்ய வேண்டுமெனில் அதற்கு இரும்பு வேண்டும். அதேபோன்று கோடிக்கணக்கான அண்டங்களையும், உலகங்களையும் செய்வதற்கு ஏதேனும் ஒரு பொருள் வேண்டும். உலகங்களின் பிறப்பிடமாகிய அவ் ஒளிப்பரப்பினை ஆராய்ந்து பரர்க்கும்பொழுது எல்லாம் நெருப்பு வடிவமாகவும், ஆவி வடிவமாகவுமே இருக்கின்றன.

இத்தகைய ஒளிக்கூட்டங்கள் வானத்தில் சற்றேறக் குறைய இருபதினாயிரம் வரை காணப்படுகின்றன. இவ் ஒளிப்பகுதிகள் விண் மீன்களைக் காட்டிலும் நெடுந் தொலைவில் உள்ளன. விநாடிக்கு 1,86,000 கல் விரைந்து செல்லும் ஒளி அலைகள் திங்கள் மண்டிலத்திலிருந்து பூமிக்கு வந்து சேர ஒன்றேகால் விநாடி செல்லுகின்றது. இங்ஙனமே ஞாயிற்றின் ஒளி இங்கு வந்து சேர எட்டு விநாடிகள் செல்லுமெனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆயினும் பூமிக்கு அண்மையி

லுள்ள தெனக் கருதப்படும் ஒரு விண் மீனின் ஒளி நமக்கு வந்து சேர நான்கு ஆண்டுகளுக்குமேல் செல்லும். இஃது ஒன்றினாலேயே விண் மீன்களும், ஏனைய அண்டப்பகுதிகளும் எத்துணைச் சேய்மையில் உள்ளன என்பது உணரப்படும்.

சில வேளைகளில் வானத்திற் பால்போன்று வெண்மையான நீண்ட ஒளிப்பரப்பினைக் காணலாம். இதனை "அரம்பையர் பாதை" எனக் கூறுவதுண்டு. இது வெளித் தோற்றத்திற்கு ஒரே ஒளிப் பர்ப்பினைப் போன்று தோன்றினாலும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது அதனுள் கோடிக்கணக்கான மீன்கள் காணப்படுகின்றன. அம்மீன்கள் நெடுந் தொலைவில் இருத்தலால் அவை நம் கண்ணுக்குத் தனித்தனியாகத் தெரிவதில்லை. எல்லாம் ஒன்றுபட்டு ஒரே ஒளியாகக் காணப்படுகின்றது. உண்மையில் ஆங்கு எண்ணிறந்த பல கோடிக்கணக்கான மீன்கள் குவிந்து கிடக்கின்றன. இடையிடையே இருண்ட பகுதிகள் தெரிகின்றன. ஒவ்வொரு மீனும் தனித்தனி ஞாயிறும் என்பதும், அஃது ஒவ்வொன்றும் நம் ஞாயிற்றினைப்போன்று பன்மடங்கு பெரியது என்பதும் நினைவிற் பதிக்கற்பாலது. அவ் ஒளிப்பரப்பினைப் படம் பிடித்துப் பார்க்கும்பொழுது படம் முழுவதும் ஆற்று மணலைப்போன்று விண் மீன்கள் குவிந்து கிடப்பது காணப்படும். சிற்சில இடங்களில் அவற்றை மண்வெட்டியால் பெயர்த்து எடுத்து வேறு பக்கங்களில் குவித்து வைத்திருப்பதைப்போன்று தோன்றும். இவற்றின் இடையில் காணப்படும் இருள் உலகங்கள் மைக்குழம்பென இருண்டு கிடக்கின்றன. இவற்றின் உள்ளே ஏதேனும் உளதோ என்பதை, இது காறும், எவரும் கண்டிலர். வான வெளி எல்லை யற்றதாக இருக்கின்றது. இறைவன்றன் பேரருட்டிறத்தினாலேதான், எல்லா உலகங்களும் அந்தரத்திலே நிலைத்து நிற்கின்றன என்பதை வலியுறுத்தும் பொருட்டு

"அந்தரத்து அகில கோடி தாழாமல் நிலை நிற்க
வில்லையோ"

என்றும்,

"தன்னருள் வெளிக்குள்ளே அகிலாண்ட கோடி
யெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்து உயிர்க்குயிராய்த்
தழைத்ததெது"

என்றும் தாயுமானர் அருளிச்செய்தார்.

பூமியும் திங்களும் ஏனைய கோள்களும் ஞாயிற்றினை ஓயாது சுற்றி வருகின்றன. இக்கோள்கள் எக்காலமும் இங்ஙனமே சுழன்றுகொண்டிருத்தல் இயலுமா? அற்றன்று, உலகம் நிலையற்றது. நீர்மேல் குமிழி போன்றது. இஃது எதாயினும் ஒருநாள் அழிந்தே தீரும். அங்ஙனம் அழியு மெனில் உலகத்தின் முடிவு எத்தகையது? வான வெளியில் எங்குப் பார்த்தாலும் சுழன்று கொண்டிருக்கும் கோளங்கள் ஒன்றன்மேல் பூமி மோதுண்டால் உடனே அதற்கு அழிவு நேரிடும். இல்லையேல் திங்கள், சேவ்வாய் முதலிய கோள்களைப் போன்று பூமியும் குளிர்ந்து விரைத்துப்போய்த் தன்னிடமுள்ள காற்றையும் நீரையும் இழந்து உயிர்கள் வாழ முடியாததாக ஆய்விடக் கூடும். எனினும் பூமி இந்நிலைமைக்கு வர எத்துணைக் காலம் செல்லுமென வரையறுத்துக் கூற முடியாது.

"உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யாரவர் தலைவர்"

என்றபடி, உலகங்களை யெல்லாம் "படைத்து அளித்துத் துடைக்கும் எல்லையறு பரம்பொருளுக்கு" இஃது ஒரு விளையாட்டாகவே இருக்கின்றது. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது ஆன்றோரின் அருள் வாக்கு.

குறிப்புரை

அண்டம் – வெளி. உண்டைப் பிறக்கம் – உருண்டை வடிவாக வுள்ள கோள்களின் மிகுதி. பிழம்பு – திரட்சி. அகிலம் – அனைத்தும், எல்லாம். அகிலாண்டகோடி – அகில அண்டங்களாகிய கோடிகள்.

வினாக்கள்

1. தொலை நோக்காடி என்பது என்ன? அதனால் பய னென்ன?

2. தொலை நோக்காடியால் ஞாயிற்றினை நோக்கினால் நாம் ஞாயிற்றினைப்பற்றி அறியக்கூடியன யாவை?

3 ஞாயிற்றின் சேய்மையைப் புலப்படுத்துக.

4. திங்கள் மண்டிலம் எவ்வாறு அமைந்து கிடக்கின்றது? அம்மண்டிலத்தின் தன்மையாது?

5. பூமிக்கு ஒருவாறு ஒப்பிடக்கூடிய மண்டிலம் எது? எவ்வாறு?

6. அமரர் உறையுள் எனக் கூறத் தகுவன யாவை? எங்ஙனம்?

7. விண்மீன்களின் நிறவேறுபாட்டுக்குக் காரணம் என்ன?

8. கோளுக்கும் மீனுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

9. விண்மீன்கள் பூமிக்கு நெடுந்தொலைவில் உள்ளன என்பதைப் புலப்படுத்துக.

10. ஆண்டவனது தொழிற்சாலை, அரம்பையர் பாதை: குறிப்பு வரைக.

11. பூமியின் முடிவு எவ்வாறு இருக்கலாம்?

---

# 10. நாட்டுப் பாடல்கள்*

மு. அருணாசலம் அவர்கள்

வருணனை என்ற கண்ணோடு பார்த்தாலுங்கூட, நாட்டுப் பாடல்களில் மிகுந்த சொற் சிறப்பும் பொருட் சிறப்பும் பொருந்திய வருணனைகளை நாம் காண முடிகிறது. மதுரையின் வருணனை ஒன்றைப் பார்க்கலாம்.

தேன்பெருகும் சோலை தென்னன் வளநாடு
கனியுதிருஞ் சோலை கனமதுரை நன்னாடு
வாழை வடக்கினும் வான்கமுகு தெற்கினும்
சோலை கிழக்கினுந் துய்யபலா மேற்கினும்

---

* இது, திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பட்டது. 7-12-1953 என்று நாளிட்ட "வானொலி" யிலிருந்து கொள்ளப்பட்டது.

கரும்பு மிளநீருங் கண்திறந்து மடைபாயும்
கட்டுக் கலங்காணும் கதிருழக்கு நெற்காணும்
அரிதாளின் கீழாக ஐங்கலந்தேன் கூடுகட்டும்
ஆனைகட்டுந் தாளும் வானமட்டும் போராகும்
மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெ
லென்று
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்
மதுரை
தானகத்தான் வளர்ந்து தழைத்தோங்கும் தென்
மதுரை.

மற்றொரு சந்தர்ப்பம்: தேசிங்கு ராஜன் தான் டில்லி பாதுஷாவுடன் செய்யும் போரில் தனக்குத் துணையாகத் தன் நண்பனை அழைக்கிறான். அவன் நண்பனோ மோவுத்துக்காரன் என்ற முஸ்லீம் வீரன். இவர்களிடையிருந்த ஒற்றுமையை என்னவென்று சொல்லுவது. மோவுத்துக்காரன் மணவறையில் இருக்கிறான். மணமகளுக்குத் தாலி கட்டவேண்டிய நேரம். அந்த நேரத்தில் தேசிங்கு ராஜனுடைய ஓலை கிடைக்கிறது. அப்படியே சடங்குகளை நிறுத்திவிட்டுச் சண்டைக்குப் போவதற்குத் தன் தாயிடம் அனுமதி கேட்கிறான்:

"அம்மா கேளும் அம்மா கேளும்
என்னைப் பெற்றதாயே
என்னிட ராஜன் சினேகித காரன்
எழுதி அனுப்பினான்
இன்றைக்குஞ் சாவு நாளைக்குஞ் சாவு
இருக்குது தலைமேலே
பிள்ளை பிறந்தால் சண்டை முகத்தில்
பேரெடுக்க வேணும்
மைந்தன் பிறந்தா லன்னங் கொடுத்து
மகிழ்ச்சியாக வேணும்
உன்தன் வயிற்றிற் பிள்ளை பிறந்து
ஊதாரியா வேனோ

ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு
   என்னைப் பெற்றதாயே
பிறந்த வன்றைக்கேசா விருக்குது
   பெற்ற மாதாவே
ரணகளத்தில் செத்துப் போனால்
   நல்ல பதவியுண்டு
கத்தி முனையில் சாவேனே யானால்
   கனத்த பதவியுண்டு
ஈட்டி முனையிலே சாவேனே யானால்
   இனிய பதவியுண்டு
சண்டை முகத்திலே செத்தேனே யானால்
   ஜல்தி மோட்சமுண்டு
என்றைக் கும்பே ரிருக்க வேணும்
   இந்த வுலகினிலே
புல்லும் பூமி யுள்ள வரைக்கும்
   பேரெடுக்க வேணும்
சண்டை கெலித்து வந்தேனே யானால்
   தாலி கட்டுகிறேன்
போரைக் கெலித்து வந்தேனே யானால்
   புகழ்ந்து கட்டுகிறேன்
மாண்டு மடிந்து போவேனே யானால்
   மனது கலங்காதே."

இந்தப் பாடலில்தான் என்ன ஒரு நியாய உணர்ச்சி—சொல்லடுக்கு, கருத்துக்களின் செறிவு! மோவுத்துக்காரன் புறப்படுகின்ற மிடுக்கும், நண்பனிடம் அவனுக்குள்ள விசுவாசமும் இந்த வரிகளிலே, கண்ணாடி போலக் காணக்கிடக்கின்றன.

இன்றைக்கும், எழுத்தறிவு, சற்று மில்லாத பிச்சைக்காரர்கள் தெருவில் வந்து,

"பந்தலைவிட்டு வெளியே வந்தான்
   மோவுத்துக்காரனும்"

என்று பாடிய மாத்திரத்திலே, 'வீதியிலுள்ள ஆண் பெண் அடங்கலும் வீடுகளை விட்டு வெளியே வந்து

வாய் திறந்த வண்ணமாக, பாடுகிறவனையே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது நாட்டுப் பாடலுக்கும் தமிழுக்கும் உள்ள மகத்தான வெற்றி என்பதில் சந்தேக மில்லை. இத்தகைய நாட்டுப் பாடல்கள் எண்ணில்லாத வகையாகும். புன்செய்ப் பாசனம் உள்ள இடங்களில் காலை நேரத்தில் பார்த்தால் உழவர்கள் மிகுந்த உடற் பிரயாசையோடு நிலத்திற்கு நீர் இறைக்கிறார்கள். இங்கு நில மெல்லாம் வானம் பார்த்த நிலம். மழை தவறினால் பயிரெல்லாம் தீய்ந்துவிடும். மழை தவறாமல் காக்கும் படி பிள்ளையாரை வேண்டுகின்றான்.

"பிள்ளையாரே வாரும்
  பிழை வாராமல் காரும்
ஒருமழை தவக்கம்
  பயிரெல்லாம் வதக்கம்
ஒருமழை பெய்யாதோ
  பயிர்க்களை தீராதோ
பயிர்க்களை தீராதோ
  குடிவள மாகாதோ
உனைமற வேன்வேலா
  ஒருபதியால் ஒண்ணு."

பத்து சால் ஆகியிருக்கிறது. "வேலா நான் முறையிட் டதற்கு இரங்கிக் கருணைகூர்ந்து மழை தருவாய்" என்ற பாவத்தில், மேலும் பாடுகிறான்:—

"ஏழைகள்மேல் பட்சம் இரங்க வேண்டும் வேலா
ஒக்கமழை பெய்து ஓங்கும் வயல் நீரும்
ஓங்கிநிற்கப் பயிரும் ஓச்ச லில்லாக் கதிரும்
கண்களிக்கக் கண்டு களிப்புடனே கொய்து
காளைகட்டித் துவைத்துக் கனத்த தொம்பை
  ரொம்பக்
குலத்தவருக் கீந்து குடிக ளெல்லாம் வாழக்
குறைச்சலில்லா வாழ்வைக் குழந்தை மனையோடு
கூட்டி வையும் வேலா குழந்தை வடிவேலா
இனிமறவேன் வேலா இருபதியா லொண்ணு."

இப்படியாக உழவர் மிக்க பிரயாசையோடு நீரிறைத்து நாற்றுவிட்டபின், பெண்கள் நாற்றுப் பறித்து நடுகிறார்கள். நாற்று நடுபவர்கள் மனோதத்துவம் நன்றாக அறிந்தவர்கள். வாய் பாடிக்கொண்டே இருந்தால் கை லேசாயும் அழகாயும் வேலை செய்யும் என்பது அவர்கள் அனுபவம். ஆகவே, நடவுப் பெண்களில் ஒருத்தி பாட மற்றோர் பின் தொடர்ந்து பாடுகிறார்கள்:

இந்திரனை நோக்கி
  எடுத்தேன் திரு அலகு
சந்திரனை நோக்கிச்
  சாத்தினேன் திரு அலகு
நிறுத்தின திரு அலகு
  நின்றுபயிர் ஏற வேணும்
நெல்லா விளையவேணும்
  நெடுங்கலங்கள் ஏறவேணும்
கதிரா விளையவேணும்—எங்களையா—
  களஞ்சியங்கள் ரொம்பவேணும்

என்று பாடுகிறாள். இப்படிப் பாடுகிறவள் தன் பானை நிரம்ப வேண்டு மென்று கேட்கவில்லை. "ஐயா, களஞ்சியம் நிரம்ப வேண்டும்" என்று கேட்கிறாள். நிலத்தில் எல்லாருக்கும் பங்குண்டு. களஞ்சியம் நிரம்பினால் தன் பங்கு தனக்கு வரும் என்பது அவள் நம்பிக்கை. அத்தகைய உரிமையும், சுதந்தரமும் பொருந்திய தொரு வாழ்க்கை நடந்து வந்தது.

ஆனால் காலம் மாறிற்று. எல்லோரும் சமம், ஒவ்வொருவரும் சமூகத்தின் நன்மைக்காக உழைக்க வேண்டும் என்ற பொதுவான குறிக்கோள் மறைந்து விட்டது. அதன் பயனாய் சமூகத்தில் பொதுவான அவநம்பிக்கை குடிகொண்டது. இந்த அவநம்பிக்கையை மற்றொரு விதமான நாட்டுப் பாடல் நன்கு விளக்குகிறது.

வள்ளைப் பாட்டென்பது உரலில் தானியத்தையோ, மற்ற பொருளையோ இட்டு உலக்கையால் குத்தும்போது

பாடும் பாடல். பண்டைய ஆசிரியர்கள் எல்லோரும் வள்ளைப்பாட்டு அனேகம்பாடியிருக்கிறார்கள். மாணிக்க வாசகர் பாடுகிற திருப்பொற் சுண்ணமும் வள்ளைப்பாட்டில் ஒரு வகை. இப்போது காலம் 20-ஆம் நூற்றாண்டு. வேலை செய்வோர், கூலி கொடுப்போரென்று இரண்டு பிரிவாக இருக்கிறது. எஜமானி என்றால் பொதுவாக கஷ்டப் படுத்துவாள் என்ற எண்ணம். வேலை செய்பவள் என்றால் ஏமாற்றுபவள் என்ற எண்ணம். இந்தப் பரஸ்பர அவநம்பிக்கைச் சூழலில் ஒரு கட்டிட வேலை நடக்கிறது. நவராத்திரி சமயம்—சுண்ணாம்பு இடிக்கிற பெண்கள் அவசரமாக வீட்டுக்குப் போய்த் தங்கள் வேலையைப் பார்க்க வேண்டுமே என்று கவலைப்படுகிறார் கள். எஜமானியோ, மழைக்காலம் வரப்போகிறதே, கட்டிட வேலை முடிந்தாக வேண்டுமே எனக் கவலைப் படுகிறாள். அச்சமயம் மணியோ ஐந்துக்கு மேல் ஆகிறது. சுண்ணாம்பு இடிக்கிற பெண்களில் ஒருத்தி கெட்டிக்காரி. அவள் வீட்டுக்குப் போக வேண்டுமே என்ற தன் ஆத்திரத்தை பக்குவமாக ஆனால் ஆத்திரம் குறையாமல், பாடுகிற பாட்டின் மூலம் தலைவிக்கு உணர்த்துகிறாள்:

"இரும்போடி உன் மனசு
இரங்கலையோ இன்னமுந்தான்
கல்லோடி உன் மனசு
கரையலையோ இன்னமுந்தான்."

இப்படிச் சில வரிகளைச் சுண்ணப் பாட்டில் சேர்த்துக் கொள்கிறாள். கேட்டுக்கொண்டிருந்த எஜமானியின் மனம்' ஊசி குத்துவது போன்ற இந்தச் சொற்களால் என்ன பாடுபட்டிருக்கும் யூகித்துப் பாருங்கள். இங்ஙனமாக எத்தனையோ வளம் பொருந்தியது நம் மொழியிலுள்ள நாட்டுப் பாடலாகிய செல்வம். இக்காலத்தில் இச்செல்வத்தை அனுபவிக்க அனேகர் முயன்று வருவது மிகவும் மகிழ்ச்சிக் குரிய நிலை. இச்செல்வத்தைப் பாரதியார் மிகவும் போற்றிக் களிந்து உருகி இருக்கிறார்.

### வினாக்கள்

1. தென்னன் நாட்டின் வளம் எத்தகையது?

2. மோவுத்துக்காரனின் நட்பின் சிறப்பினைப் புலப்படுத்துக.

3. தான் சண்டைக்குப் போதல் வேண்டும் என்பதற்கு மோவுத்துக்காரன் தன் அன்னையிடம் புகன்ற நியாயங்கள் யாவை?

4. ஏற்றக்காரன் பிள்ளையாரை வேண்டுவதும் வேலவனை வேண்டுவதும் இன்ன என வரைக.

5. "ஐயா களஞ்சியம் நிரம்ப வேண்டும்" – இடஞ் சுட்டி விளக்குக.

6. "வள்ளைப்பாட்டு" என்பதென்ன?

7 "இரும்போடி உன் மனசு – இரங்கலையோ இன்னமுந்தான்" – இடஞ் சுட்டி விளக்குக.

---

# 11. நக்கீரர் : நாடகம்*

**மு. கோவிந்தராய நாட்டார் அவர்கள், B.A., L.T.,**

[*தன் அகத்தே எழுந்ததோர் ஐயத்தினைப் போக்குவார்க்கு இஃது உரியது எனப் பொற்கிழி ஒன்றனைச் சங்க மண்டபத்தே கட்டி விட்டான் பாண்டியன். சோமசுந்தரரால் எழுதிக் கொடுக்கப்பட்ட செய்யுள் ஒன்றனைத் தருமி என்னும் பிரமசாரி பாண்டியனிடம் காட்டிக் கிழியை எடுத்துக்கொள்ளுவதற்கு இசைவு பெற்றுச் சங்க மண்டபத்துக்குக் கல்லாடனார் முதலிய புலவர்களுடன் வருகின்றான்.*]

[மதுரை நகரின் ஒரு தெரு: சங்க மண்டபம்]

**நடிகர்:** தருமி, கல்லாடனார், இடைக்காடனார், நக்கீரர்

(*கல்லாடனார், இடைக்காடனார், தருமி மூவரும் வருதல்*)

*காலம்—மாலை*

கல்லாட.—ஆயின் ஒன்று. நினக்கும், நினது செய்யுளுக்கும் பொருத்த மில்லை.

தரு.—தாம் கூறுவது எனக்கு விளங்க வில்லை.

கல்.—அஃதாவது, நினது இளமைக்கும், நினது செய்யுளின் முதுமைக்கும் சிறிதும் இயை பில்லை யென்பதாகும்.

---

* இது 'நக்கீரர்' என்னும் சிறு நாடக நூலிலிருந்து கொள்ளப்பட்டது. வெளியிட்டோர்: திரு. இ. எம். கோபாலக்கிருஷ்ண கோன், மதுரை.

தரு.—அஃதெவ்வாறு, தெரியச் சொல்ல வேண்டும்.

கல்.—மணம் இனி முடிக்கப்போவதாகவுங் கூறுகின்றனே.

தரு.—ஆம். அதனால்?

இடைக்.—அஃதிருக்கட்டும். நமது அரசன் பெண்களின் கூந்தலுக் குள்ள மணம் செயற்கை யென்று செய்யுள் செய்தாரை யெல்லாம் புறக்கணித்ததிலிருந்து மணங் கூந்தலுக்கு இயற்கை யெனக் கருதுகின்றானென்பது தெரிகின்ற தன்றோ?

கல்.—அவ்வாறன்று. இயற்கையோ செயற்கையோ வென்னும் ஐயம் ஏற்பட்டமையாலேயே அதனைத் தவிர்த்து ஒருபா லுறுதிப்படுத்துமாறு நம்மைப் போன்ற புலவர்களை அரசன் வேண்டினன். செயற்கை யெனச் செய்யுள் செய்தார் அதனை உறுதிப்படுத்தக் கூடிய வழியிற் செய்தா ரிலர். அவ்வாறு செய்திருப்பார்களாயின் இவ்விளையோன் பொற்கிழி பெற்றிருக்க மாட்டான். எனினும் இவனது செய்யுள், முற்றவுங் கற்றுத் துறைபோகிய புலவர்களது செய்யுளேபோல் மிளிர்கின்றது. தனது தலைவியின்மீது கொண்டிருக்கும் வரம்பிகந்த காதலினால் கூந்தலின் மணம் இயற்கையென மருண்டு அரசன் இவ்விளைஞனுக்குப் பொற்கிழி தந்தான் என்று நம்மைப்போன்ற புலவர் எண்ணிவிடா வண்ணம் இவனது செய்யுள் உள்ளுறை யடக்கித் தெள்ளுரை காட்டுகின்றது.

இடைக்.—ஆம். காதலினால் மயங்கி அரசன் ஒருபாற் கோடுதலினும், பல பூக்களின் தேனினை நாடோறுந் துய்க்கும் தும்பி மிக மயங்கிப் பூக்களுக்கு ஏற்றத்தினைக் கற்பித்தலுஞ் சாலும்.

கல்.—அதனைத் தடுக்கவே இச்செய்யுள் "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" என நயம்பெறக் கூறப்பெற்றுளது.

தருமி.—(தனக்குள்) இவர்கள் பேசுவ தென்னே? இறைவன் செய்யுளும் பிழைபடுமோ?

இடைக்.—அன்றியும், "நறியவும் உளவோ, நீ யறியும் பூவே" என்பது கூந்தல் இயற்கை மணமுள்ள தென்பதனையும், மலர் மணத்தினுஞ் சிறந்த மணமுள்ள தென்பதனையும் மிகவும் நயமாக எடுத்துக் காட்டுகின்றது. இதனாற்றான் இச்சிறுவன் இதனை எழுதியிருக்க முடியு மோவென ஐயங் கொண்டான்.

கல்லாட.—இதோ சங்க மண்டபம் வந்துவிட் டோம். தருமி! அதோ தெரிகின்றது பொற்கிழி. நீ யதனை எடுத்துச் செல்லலாம். யாங்கள் அரசனுக்குத் தெரிவித்துவிடுகின்றோம்.

(தருமி பொற்கிழியினருகே செல்லுதலும் நக்கீரர் வருதலும்)

நக்கீரர்.—புலவரீர், இவ்விளையோன் யாவன்?

தரு.—என் பெயர் தருமி யென்பார்கள்.

நக்.—ஈண்டு நிற்றல் ஏனோ?

தரு.—ஐயனே! நமது அரசர் பெருமான் விருப் பின்படி அவர் ஐயத்தினைத் தீர்க்குஞ் செய்யு ளொன்று அவர் திருமுன் கூறினேன். கூறியேனுக்குப் பொற் கிழி தந்தனர். இப்புலவர்களுடன் அதனை எடுத்துச் செல்லவே ஈண்டு வந்தேன்.

நக்.—செய்யுள் ஈண்டுளதோ?

தரு.—இதோ. (ஓலையைத் தருதல்)

நக்.—(படித்தல்)

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ; (நன்று)
பயலியிது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீ யறியும் பூவே?" (நன்று)

செய்யுள் மிகச் செவ்வனே அமைந்துள்ளது.

(தருமி பொற்கிழியினிடஞ் செல்லுதல்)

நக்.—நிற்க! செய்யுள் செவ்வனே அமைந்துள்ளது. எனினும் கிழியினை நீ யெடுத்த லொண்ணுது. சிறந்த தெனினும் செய்யுள் பொருட்குற்ற முள்ளது. அரிவையின் கூந்தல் மணம் செயற்கையே.

தரு.—அரசரதாணையின்படி நடத்தல் வேண்டுமே? செய்யுளை அவர் வியந்த தன்றி இப்புலவரும் வியந்தனரே!

நக்.—யாம் வியக்கின்றே மில்லை. அரசனிடஞ் சென்று புலவர் தலைவராகிய நக்கீரனூர் கிழியினை எடுக்க வொட்டாது தடுத்தனர் என்று கூறிக்கொள்க. புலவர்களே நாம் செல்வோம். இவ்விளைஞனுக்கு யாம் தோற்பதோ?

(மூவரும் செல்லுதல்)

தரு.—(தனிமையாகத் தனக்குள்) இஃதென்! கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போயிற்றே! யான் பொற்கிழி பெருதொழியினும் ஒழிகின்றேன். சின்னுட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்கள் இறைவனது செய்யுளுக்குங் குற்றங் கூற வல்லரோ! யானே செய்யுள் செய்திருப்பின் இவ்வாறு தருக்கித் திரியும் புலவரிடத்தே அதன் கதி என்னுகுமோ? செய்யுளுக்குப் பொற்கிழி தந்த சண்பக மாறனிடஞ் சென்று இப்புலவர் தடுத்ததைக் கூறுவதினும், இச்செய்யுளையே அருளிய சண்பக சுந்தரனிடஞ் சென்று முறையிடுவதே சிறந்த தாகும். புலவர்க்கஞ்சி இனி அரசன் மறுத்தலுங் கூடும். பெருமானிடமே செல்வோம்.

(செல்லுதல்)

சங்க மண்டபம்

[நடிகர்: தருமி; ஒரு புலவர் வடிவில் ஆலவாயப் பெம்மான்; நக்கீரர்; ஏனைய சங்கப் புலவர். ஆலவாய்ப் பெம்மான் தருமியுடன் சங்கம் நோக்கி வருதல். காலம்: காலை]

ஆல.—(சங்கப் புலவரை நோக்கி) இக்கூட்டத்தவரில் இச்செய்யுளுக்குக் குற்றம் கூறியவர் யாவர்?

நக்.—(முன் வந்து) யாமே கூறினேம்.

ஆல.—குற்றம் யாது சொல்?

நக்.—கூந்தலுக்கு மலரின் சார்பாலன்றி மணமின்மையின் இச்செய்யுள் பொருட் குற்ற முடைத்து.

ஆல.—உயர்வகை மாதரின் கூந்தலுக்கேனும் இயற்கை மணமுண் டன்றோ?

நக்.—இயற்கையில் கூந்தலுக்கு மணமுண் டென்பது இயற்கைக்கு முரணாகும். செயற்கையால் பங்கியும் மணம் பெறுதலும் செயற்கை யின்றிக் கூந்தல் மணம் பெருமையும் யாவரும் உணரக்கூடிய உண்மையாகும். ஆகையின் உயர்வகை மாதரின் கூந்தலுக்கு மணமுண் டென்பது பொருந்தாக் கூற்றாகும்.

ஆல.—தேவ மாதருடைய கூந்தலுக்குள்ள மணம் செயற்கையதோ?

நக்.—அஃதும் அற்றே. இதில் ஐயமேற்படுவதற் கிட னின்று.

ஆல.—நீ வழிபடுங் கடவுளாய திருக்காளத்தி நாதர் பாகத்தமர்ந்த ஞானப் பூங்கோதையின் கூந்தலும் அத்தன்மைத்தோ?

நக்.—அதுவும் அற்றே.

ஆல.—(நெற்றிக் கண்ணினையுஞ் சடை முடியினை யுங் காட்டுதல்.)

நக்.—நீ வடிவெலாங் கண்ணைக் காட்டினும் நின் செய்யுள் இழுக்குடையதே. மற்று அதன் பாலுள்ள குற்றம் குற்றமே யாம். தண்டமிழ் வல்ல! என்னைக் கண்ணையுஞ் சடையினையுங் கொண்டு வெருட்டல் வேண்டா. இதற்கு யான் அஞ்சுகிலேன்.

ஆல.—எம்மொடு மாறுபட்டு இமையப் பூங்கொம்பின் கூந்தலையும் பழித்துரைத்த நீ குட்ட நோயுற் றலைக.

நக்.—அருட்கடலே! உண்மையினை உள்ளவாறு உரைத்தல் என்பாற் குற்றமேயோ? இதற் கென்னைச் சபித்தலுந் தகுதி யாமோ?

ஆல.—உண்மையைக் கரவா துரைத்தமைக்குச் சபிப்பது தகுதி யன்றாயினும், இமையப் பூங்கொம்பின் கூந்தலையும் பழித்தது நின்பாற் குற்றமே யன்றோ?

நக்.—ஐயனே! அருந்தமிழரசே! தமிழ்த்தாயின் மீதுள்ள பேரன்பினால் நாயினேன் அறிவு மயங்கி ஞானப் பூங்கோதையின் கூந்தலையும் பழித்தது அடாத செயலே யாகும். இப்பிழையினைப் பொறுத்தருளிச் சாபப் பிணியைத் தவிர்த்து ஆட்கொள்ளல் வேண்டும்.

ஆல.—நீ சென்று கயிலை காணில் இக்கொடு நோய் தீரும். (தருமியை நோக்கி) தருமி, நீ சென்று பொற்கிழி எடுத்துச் செல்க.

(தருமி செல்லுதல்)

---

## குறிப்புரை

ஒரு பாலுறுதிப் படுத்துமாறு – ஏதேனும் ஒன்றனை உறுதியாக்கிக் கூறுமாறு. பொற்கிழி – பொன் முடிச்சு. துறைபோகிய – யாவற்றையும் கற்றுத் தேர்ந்த. உள்ளுறை – உட்பொருள். ஒருபாற் கோடுதல் – நேர்மை தவறி ஒரு பக்கமாகச் சாய்தல்.

கொங்கு தேர் – பூந்தாதை ஆராய்ந்து. அகம் + சிறை = அஞ்சிறை; உள்ளிடத்துச் சிறகு. காமம் செப்பாது – என் நிலத்து வண்டாதலின் யான் விரும்பியதையே கூறாமல். பயிலியது கெழீஇய நட்பின் – என்னோடு பயிலுதல் பொருந்திய நட்பையும்.

"தும்பி, நீ அறியும் பூக்களுள் அரிவையின் கூந்தலைப்போல நறியவும் உளவோ? மொழிவாயாக" என்றபடி.

தருக்கு – கருவம். பங்கி – ஆடவர் மயிர். கரவாது -- மறையாது.

## வினாக்கள்

1. பாண்டியனுக்கு ஏற்பட்ட ஐயம் யாது?
2. "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"—நயம் பாராட்டுக.
3: "நறியவும் உளவோ நீ யறியும் பூவே"—இத்தொடரால் பெறப்படுகின்ற கருத்து என்ன?
4. சுந்தரர் பாட்டுக்கு நக்கீரர் தந்த மறுப்பு யாது?

## கட்டுரைப் பயிற்சி

1. "நக்கீரர் பெருமை" என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. பொற்கிழி பெற்ற தருமி எவ்வா றெல்லாம் எண்ணி மகிழ்ந்திருப்பான் எனக் கற்பனை செய்து ஒரு கட்டுரை ஆக்குக.

---

# அருஞ்சொல் அகராதி

## பொதுவும் சிறப்பும்

அ

அகுதம் – கேடு, அழிவு
அடங்கல் – எல்லாம், முழுவதும்
அண்டம்–உலகம்
அத்தாணி–ஓலக்க மண்டபம்
அயிர்த்தல்–ஐயுறுதல்
அரங்கு–நாடக சாலை, மன்றம்
அரசிறை–அரசற்குச் செலுத்தப்படும் வரி
அரற்றுதல்–அழுதல், ஒலித்தல்
அரிவை–பெண்
அலம்வருதல்–வருந்துதல்
அவுணர்–அரக்கர்

ஆ

ஆகடியம்–பரிகாசம், கொடுமை
ஆர்கலி–கடல்
ஆலவட்டம்–விசிறி
ஆழி–கடல், சக்கரம்

இ

இகத்தல்–கடத்தல்
இடைவிராய்–இடையிற் கலந்து
இணர்–பூங்கொத்து
இவர்தல்–ஏறிச் செல்லுதல்
இவுளி–குதிரை

உ

உட்டற்றம்–வருத்தம்
உடு–விண்மீன்
உரம்–மார்பு
உழந்து–வருந்தி
உள்ளி–வெள்ளைப் பூண்டு
உள்ளுறை–உட்பொருள்
உறழ்வு–பகை, ஒப்பு

ஊ

ஊழி–உலக முடிவுக்காலம்
ஊழ்த்தல்–மலர்தல், பழுத்தல்

எ

எயிறு–பல்
எழு–தூண்

ஏ

ஏகாவலி–ஒற்றைச் சர முத்து மாலை

ஐ

ஐயவி–கடுகு

ஒ

ஒக்கல்–உறவினர்
ஒசிதல்–வருந்துதல், நாணுதல்
ஒரீஇ–நீக்கி
ஒறுத்தல்–தண்டித்தல்

ஓ

ஓவிடுதல்–ஓலமிடுதல்

க

கங்குல்–இரவு
கஞ்சுகம்–சட்டை
கடம்–மதம்
கடாரம்–பர்மா
கணி–கணித்துச் சொல்லுபவன், சோதிடன்
கணிகை–பெண்
கந்து–கட்டுத்தறி
கரவு–மறைவு
கருத்தனம்–பொன், செல்வம்
கருகாண்–காப்புக் கயிறு
கலாவம்–மயிற்றோகை
கலிமா–குதிரை
கலுழ்தல்–வருந்துதல், அழுதல்
கா–சோலை
காலன்–இயமன்
கால்–காற்று
காவதம்–காதம்
கிம்புரி–யானைத் தந்தப் பூண், பணை
கிழி–கிழிக்கப்பட்ட துணி முடிச்சு

கிளவி—சொல்
கீண்டு—கிழிந்து
குரிசில்—தலைவன், சிறந்தவன்
குரு—கொப்பளம்
குருகு—நாரை
கூவல்—நீர்நிலை, கிணறு
கேண்மை—நட்பு, உறவு
கொங்கு—பூந்தாது
கோடு—மலைச்சிகரம்
கோடுதல்—வளைதல்
கோதை—கூந்தல்
கோமளம்—அழகு
கோழி—உறையூர்
கோள்—கொள்ளுகை

ச

சாம்புதல்—வாடுதல்
சாவாமருந்து—அமுதம்
சான்று—சாட்சி
சிங்கப்போத்து—ஆண் சிங்கம்
சிமயம்—மலையுச்சி
சிறை—சிறகு
சுங்கம்—இறக்குமதிப் பண்ட வரி
சுவல்—குதிரை
சுவறுதல்—வற்றுதல்
சூக்குமவுடல்—நுண்ணுடல்
செப்பம்—நடுநிலைமை
செவ்வி—ஏற்ற சமயம்
செழியன்—பாண்டியன்
சேறல்—செல்லுதல்

ஞ

ஞாயிறு—சூரியன்

த

தகைத்தல்—தடுத்தல்
தருக்கு—கருவம்
தவிசு—பீடம், மெத்தை
தளி—கோயில்
தாலு—நாவு
தாவா—கெடாமலிருக்க
தாழி—இறந்தோரை அடக்கஞ் செய்து வைக்கும் பெரும் பாண்டம்
தாளாளன்—முயற்சியுடையவன்
தினகரன்—சூரியன்
துகள்—புழுதி
துய்த்தல்—அனுபவித்தல்
துனைதல்—விரைதல்
தெருள்—அறிவின் தெளிவு
தெவ்வர்—பகைவர்
தென்னன்—பாண்டியன்

ந

நவிலுதல்—சொல்லுதல்
நளிர்—குளிர்ச்சி
நறை—மணம், தேன்
நாவாய்—மரக்கலம், கப்பல்
நாறு—முளையா
நாறுதல்—முளைத்தல்
நிவந்து—உயர்ந்து
நின்மல—குற்றமற்ற
நுதல்—நெற்றி
நுதி—நுனி
நெடியோன்—திருமால்

ப

பகர்தல்—விற்றல்
பங்கி—ஆடவர் மயிர்
படிமை—விரதம்
பண்டாரம்—பொக்கிஷம், களஞ்சியம்
பயிர்தல்—அழைத்தல்
பரவை—கடல்
பரிசை—கேடகம்
பருவருதல்—வருந்துதல்
பழு—விலா
பற்றுக்கோடு—ஆதாரம்
பாரித்தல்—அமைத்தல்
பிண்டித்தல்—சமைத்தல், தொகுத்தல்
பிலிற்றுதல்—சிந்துதல்
பிழம்பு—திரட்சி, உடல்
பிறக்கம்—மிகுதி
பீலி—மயிற்றோகை
புரிசை—மதில்
புலர்ந்து—வறண்டு
புனல்—நீர்
புனைந்துரை—கற்பனையுரை

புன்கண்—துன்பம்
பேழை—பெட்டி
பொச்சாப்பு—மறதி
பொய்கை—நீர்நிலை
பொருப்பு—மலை
பொலம்—பொன்
பொழில்—சோலை
பொறை—பொறுமை
பொன்றுதல்—அழிதல்
போது—மலரும் பருவத்திலுள்ள அரும்பு
பௌவம்—கடல்

ம

மடவரல்—பெண்
மடி—சோம்பல்
மருப்பு—யானைத் தந்தம்
மல்குதல்—மிக்கிருத்தல்
மறம்—பாவம்
மறை—வேதம்
மாண்ட—மாட்சிமைப்பட்ட
மால்—மயக்கம்
மாற்றம்—சொல்
முகடு—உச்சி
முகமன்—உபசாரம்
முகில்—மேகம்
முந்துறுத்தல்—தோற்றுவித்தல்
முருக்கு—ஒரு மர வகை
மேவலர்—பகைவர்
மேவார்—பகைவர்
மேவுதல்—பொருந்துதல்

ய

யா—கட்டு

ல

லோசனம்—கண்

வ

வங்கம்—மரக்கலம்
வஞ்சி—ஒரு கொடி, பெண்
வலம்—வெற்றி
வறங்கூர்தல்—வறட்சி மிகுதல்
வாகுவலயம்—தோள்வளை
வாரிதி—கடல்
வாலறிவன்—மெய்யுணர்வினையுடைய கடவுள்
விசும்பு—வானம்
விசையன்—வெற்றி பெற்றவன்
விட்புலம்—வானுலகு
வியத்தகு—வியக்கத்தக்க, ஆச்சரியப் படத்தக்க
வியன்—அகன்ற
விரவல்—கலத்தல்
விரை—மணம்
விழவு—விழா
விறல்—வெற்றி
வீறுபாடு—வீரம்
வெகுண்டார்—சினந்தார்
வெகுளி—சினம்
வெதிர்—மூங்கில்
வென்றி—வெற்றி
வேகும்பம்—கடுகோடு
வேசறவு—மனச்சோர்வு